# பகுதி IV

# பகுதி IV

## மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும், தொழிற்பாடுகளும் தொடர்பான 2000ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | 2000ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, இலங்கைக் கடன் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் | I |
| 2. | 2000ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் | V |
| 3. | 2000ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் | VII |
| 4. | 2000ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | VIII |
| 5. | 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம் | IX |
| 6. | 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க, இலங்கை வங்கி (திருத்தச்) சட்டம் | LI |
| 7. | 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தைக்கு விடுதல் சட்டம் | LIII |

## 2000ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க இலங்கைக் கடன் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### இலங்கைக் கடன் முகாமைத்தவ நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கைக் கடன் முகாமைத்துவ நிறுவகம்" என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று, அதன் உறுப்பினர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க 'சொல்லப்பட்ட நிறுவகத்துடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் அதன் குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றுவதற்காகவும் கொண்டுநடாத்துவதற்காகவும் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டில் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகமானது எந்தக் குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இன்னமும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்துவதனை இயலச் செய்வதற்கென அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2000ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, இலங்கைக் கடன் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இச் சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்"எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைக் கடன் முகாமை நிறுவகத்தின் இணையுறுப்பினர்களும் கூட்டுறுப்பினர்களுமாக இப்போது உள்ளவர்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்க்கப்படுபவர்களுமான எல்லா ஆட்களும், "இலங்கைக் கடன் முகாமைத்துவ நிறுவகம்" என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமைகொண்ட (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவின் உறுப்பினர்களாகவிருத்தலும் அமைதலும் வேண்டும் என்பதுடன்; அப் பெயர் கொண்டு, அது வழக்குத் தொடுக்கலாம். அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் தற்றுணிபின்படி அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும், அதிகாரமும் இருத்தல் வேண்டும்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) கடன் முகாமைத்துவத்தின் கற்கையையும் செயன் முறையையும் மேம்படுத்தலும் முன்னேற்றலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அதற்கு உறுப்பினர் சேர்க்கப்படுதலைக் கட்டுப்படுத்தலும் கடன் முகாமைத்துவத்தில் தகைமைபெற விரும்புகின்ற ஆட்களின் உயர்தொழில்சார் கல்வியையும் பயிற்சியையும் பொறுப்பேற்றலும் ஒழுங்குபடுத்தலும், நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காகத் தகைமை பெறும் பரீட்சைகளுக்கான கற்கைநெறிகளை விதந்துரைத்தலும் அங்கீகரித்தலும், அத்தகைய கற்கை நெறிகளையும் பரீட்சைகளையும் நடாத்துதலும் அல்லது நடாத்துவதற்கான ஏற்பாடு செய்தலும், கடன் முகாமைத்துவத்துறையிலான கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றலும் ;

(இ) தோதான நிறுவனங்களிடமிருந்து ஏற்றங்கீகாரம் நாடுதலும் அவற்றோடு ஒன்றிணைத்தலும்;

(ஈ) கடன் முகாமைத்துவத் துறையிலான எய்துகைகளுக்காக அளிப்புக்களையும் பரிசில்களையும் உருவாக்குதலும், கொடைமுனைதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளையும் தகுதியீனங்களையும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கான உயர்தொழில்சார் நடத்தைக்கான தராதரங்களையும் விதந்துரைத்தலும், அவற்றுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தலும்;

(ஊ) கடன் முகாமைத்துவம் என்ற உயர் தொழில் தொடர்பாக உயர்தொழிலின் அக்கறைகளையும் அந்தஸ்தையும், சேமநலத்தையும் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பொது மக்களின் அக்கறைகளையும் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்;

(எ) மாநாடுகள், கருத்தரங்குகள், அரங்குகள், வேலைக்களங்கள், கூட்டங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தலும் நடாத்தலும்;

(ஏ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

4. இச் சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும்:

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கெடுத்தல் அல்லது கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்துதல், பாரபந்தத்துக்குட்படுத்தல் அல்லது கையுதிர்தல்;

(ஆ) கூட்டுத்தாபன குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவகத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமோ அல்லது முகவர் மூலமோ செய்து கொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், அன்பளிப்புகளையும் ஏற்றுக்கொள்ளுதல்;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்தலும், நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்குதலும் நிருவகித்தலும், ஏதேனும் வங்கியில் நடப்பு வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும்;

(உ) புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், பருவவிதழ்களையும் ஏனைய நூல்களையும் வெளியிடுதல் அல்லது வெளியிடுவித்தல் அத்துடன் நூலகங்கள், புத்தகக் கடைகள், அச்சகங்கள் இவற்றை ஒத்த நிலையங்கள் என்பனவற்றைத் தாபித்தலும் பேணுதலும்.

(ஊ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணம் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும் , பணம் கடன்பெறுதலும்;

(எ) கூட்டுத்தாபன உறுப்பாண்மை, உறுப்பாண்மைக்குச் சேர்த்தல் என்பன தொடர்பில் கட்டணங்கள், ஒப்பப்பணங்கள் அத்துடன் உதவுதொகைகள் விதித்தலும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் நடாத்தப்பட்ட நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் அனுமதியளித்தல்;

(ஏ) கடன் முகாமையாளர்களாகக் தகைமைபெற விரும்புகின்ற ஆட்களின் ஈடுபடுத்துகைக்கான, பயிற்சிக்கான, இடமாற்றுகைக்கான அத்துடன் பதவி நீக்கத்துக்கான நியதி, நிபந்தனைகளை விதந்துரைத்தலும் இவற்றை மேற்பார்வை செய்தலும், கட்டுப்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும்;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவிநீக்குதலும்; அவர்களின் சேவைக் காலத்தையும் நிபந்தனைகளையும் விதந்துரைத்தலும்;

(ஒ) விடுதிகளைத் தாபித்தலும் பேணுதலும் ; அத்துடன்

(ஓ) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமானவாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான வலுவிலுள்ள விதிகளுக்கமைவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் பேரவையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும் (இது இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்). இது ஒரு தலைவரையும் துணைத் தலைவரையும், கௌரவ செயலாளரையும், கௌரவ உதவிச் செயலாளரையும், கௌரவ பொருளாளரையும், கௌரவ உதவிப் பொருளாளரையும், கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஏனைய ஒன்பது உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது, கூட்டுத்தாபனம் செய்வதற்கு இதனகத்துத் தத்துவமளிக்கப்பட்டுள்ள அத்தகைய எல்லாக் காரியங்களையும் கூட்டுத்தாபனத்தின் சார்பில் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், அது காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறு அத்தகைய எவரேனுமாளுக்கு அதன் பணிகளைக் கையளிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை, இச்சட்டம் தொடங்கும் திகதியன்று, நிறுவகத்தின் முகாமைப் பேரவை உறுப்பினர்களாகவிருந்த ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.(1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அல்லது இருவார அறிவித்தலுடனான நோக்கத்திற்காக அழைக்கப்பட்ட விசேடப் பொதுக்கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும் உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் கடமைகளையும் செயற்பாடுகளையும் கொண்டு நடாத்துவதற்கும் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் கூட்டுத்தாபனம் காலத்துக்குக்காலம் ஆக்குதல் அதற்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம். இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் நிறுவகத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானவையாகவிராத அளவுக்கு இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் இணையுறுப்பினர்களையும் கூட்டுறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எவ்வாறாயினும் பேரவையானது, கூட்டிணை உறுப்பாண்மைக்குத் தகவற்ற ஆட்களை, அது விதந்துரைக்கக் கூடியவாறான அத்தகைய வகுப்பைச் சேர்ந்தவர்களும், அத்தகைய சிறப்புரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டவர்களுமான உறுப்பினர்களல்லாதோராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னர் நிறுவகத்தில் உறுப்பினர்களாக இருந்த எல்லா ஆட்களும், விடயத்திற்கேற்ப கூட்டுத்தாபனத்தின் அதே வகுப்பை அல்லது வகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் என எல்லா நோக்கங்களுக்கும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, அவ்வாறு தொடர்ந்திருந்துவருதலும் வேண்டும்.

8. பேரவை அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஏனைய அலுவலர்களையும் சேவையாட்களையும் நியமிக்கலாம் என்பதுடன் அவர்களது பதவிப் பெயர்களையும் குறித்தொதுக்கலாம்.

9. கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டு செலவழிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் தொடர்பில் முறையான கணக்குப் புத்தகங்களை பேரவை வைத்திருக்கச் செய்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய கணக்குகள் தகுதிவாய்ந்த கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

10. (1) ஒவ்வோர் உறுப்பினரும், விடயத்திற்கேற்ப, "கடன் முகாமைத்துவ நிறுவகத்தின் கூட்டுறுப்பினர்" , "கடன் முகாமைத்துவ நிறுவகத்தின் இணை உறுப்பினர்" என்னும் பெயர் மகுடத்தைப் பெறவும், பயன்படுத்தவும், அவரது பெயருக்குப் பின்னால் விடயத்திற்கேற்ப "கமுநிகூ", "கமுநிஇ" என்னும் முதலெழுத்துக்களைப் பயன்படுத்தவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்டுள்ளவாறு தவிர, ஆள் எவரும் எத்தகையதுமான எந்நோக்கத்துக்காகவேனும் அத்தகைய பெயர் மகுடத்தை அல்லது அத்தகைய முதலெழுத்துக்களைப் பெறுதலோ, பயன்படுத்தலோ ஆகாது.

11. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவரினதும் ஒன்றில் செயலாளரின் அல்லது பொருளாளரினதும் முன்னிலையில் தவிர சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது; இவர்கள் தாம் இருந்ததற்கு அடையாளமாக பெயர்களைச் சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்; அத்துடன் அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதல் வேண்டும்.

12. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று நிறுவகத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று நிறுவகத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும், அதற்குச் செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் என்பன யாவும் இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

13. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்.

14. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

15. ஆள் எவரும் இச் சட்டத்தினால் அல்லது இச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டுமென கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு ஏதேனும் வழங்கு நடவடிக்கையில் பொறுப்பாளியாக மாட்டார்.

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

## 2000 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்

[2000ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டம் 2000ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 1999ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 5ஆம் பிரிவானது, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(28) கமத் தொழில் விளைபொருளின் விற்பனைக்காக, வாங்குபவருக்கும் விற்பவருக்குமிடையிலான முன்நோக்கிய ஒப்பந்தம் ஒன்று ;

(29) பந்தி (28) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் வரையப்பட்ட ஒரு மாற்றுண்டியல் அல்லது உண்ணாட்டு மாற்றுண்டியல்".

3. 1993 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்

"(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்

(i) நூறு அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு அவர்களது தொழில் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்யும் ஆளெவரும், அத்தகைய கொடுப்பனவுக்கான பற்றுச் சீட்டின் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைச் சேகரித்தல் வேண்டும்;

(ii) வங்கி, அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை, நிறுவனம், கம்பனி ஒவ்வொன்றும் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர் ஒவ்வொருவரும், அதனால் எடுக்கப்பட்ட (காசோலை ஒன்றல்லாத) மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை ஒவ்வொன்றினதும், அதற்குச் செய்யப்பட்ட அசையும் பருப்பொருட்கள் தொடர்பிலான அடகு ஒவ்வொன்றினதும் (பண்டகசாலை நியதிகளின் மீதான இறக்குமதிகள் உட்பட வேறொரு நாட்டிலிருந்து இலங்கைக்குள் பண்டங்கள் இறக்குமதி செய்யும் நோக்கத்திற்காகவே தனியாக 2000 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எந்த விண்ணப்பமொன்று தொடர்பில் நாணயக் கடிதம் ஒன்று திறக்கப்பட்டதோ அந்த விண்ணப்பமொன்றாக அல்லாத) நாணயக் கடிதம் ஒன்றுக்காக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றினதும், அதனால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ் ஒவ்வொன்றினதும், (அதற்காக நாணயக் கடிதம் ஒன்று திறக்கப்படாததான அசையும் பருப் பொருளாக இருக்கும்) ஏதேனும் அசையும் பருப்பொருள் தொடர்பில் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு ஆவணங்களுள் எதனதும், அதனால் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ் ஒவ்வொன்றினதும் அத்துடன் அவரால் அல்லது அதனால் பயனுறுத்தப்பட்ட விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியிலுள்ள பங்குகளின் கைமாற்றத்தைப் பயனுறுத்தும் சாதனம் ஒவ்வொன்றினதும் தொடர்பிலும் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைச் சேகரித்தல் வேண்டும் ; அத்துடன்

(iii) பண்டகசாலை நியதிகளின் மீது செய்யப்பட்ட இறக்குமதிகள் உட்பட இலங்கைக்குள் பண்டங்களை

இறக்குமதி செய்யும் நோக்கத்திற்காக தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியல் ஒவ்வொன்றின் மீதும் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையை சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி சேகரித்தல் வேண்டும்.

அத்துடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும், வேறு வகையாகப் பணிக்கப்பட்டாலன்றி, காலாண்டுத் தவணைகளில், ஒவ்வோராண்டினதும் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தேதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் பதினைந்து நாட்களுக்குள், முற்போந்த ஒவ்வொரு காலாண்டின் போதும் முத்திரைத் தீர்வையாகச் செலுத்தப்படற்பாலனவான பணத்தொகைகளை, சேகரிப்புக்கள் பற்றிய அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூற்றொன்றுடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்," ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(4) (காசோலை ஒன்று தவிர்ந்த) ஒரு மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப் பொருட்கள் தொடர்பிலான அடகு, நாணயக் கடிதம் ஒன்றிற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம், பண்டங்களை இறக்குமதி செய்யும் நோக்கத்திற்காக சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியல் ஒன்று, வைப்புச் சான்றிதழ், (எந்தப் பருப்பொருள் தொடர்பில் நாணயக் கடிதம் ஒன்று திறக்கப்படவில்லையோ அந்த அசையும் பருப்பொருள் ஏதேனுமாக இருக்கின்ற) ஏதேனும் அசையும் பருப்பொருள் தொடர்பில் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று, விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றின் பங்குகளின் கைமாற்றமொன்றைப் பயனுறுத்துகின்ற பங்குச் சான்றிதழ் அல்லது சாதனம் ஆகியவற்றிற்கு எந்த முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகின்றதோ அந்த முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு விடயத்திற்கேற்ப இப்பிரிவுக்கிணங்க ஒத்திணைக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது சேகரிக்கப்பட்டும் அனுப்பப்பட்டுமுள்ளவிடத்து விடயத்திற்கேற்றாற்போல வங்கி, அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை, நிறுவனம், கம்பெனி, உரிமம் அளிக்கப்பட்ட பங்குத் தரகர் அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி (காசோலை ஒன்று தவிர்ந்த) அத்தகைய மாற்றுண்டியல் வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப் பொருட்கள் தொடர்பிலான அடகு, நாணயக் கடிதத்திற்காக செய்யப்பட்ட விண்ணப்பம், பண்டங்களை இறக்குமதி செய்வதற்கான விலைப் பட்டியல், வைப்புச்சான்றிதழ் கொடுப்பனவு ஆவணம் விலை கோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியில் பங்குகளின் கைமாற்றத்தைப் பயனுறுத்துகின்ற பங்குச் சான்றிதழ் அல்லது சாதனம் என்பனவற்றின் மீதான முத்திரைத் தீர்வை, விடயத்திற்கேற்றாற்போல ஒத்திணைக்கப்பட்டுள்ளதென அல்லது சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென அவ்வவற்றின் மீது அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய சான்றிதழானது பொருளளவில் பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும்:-

"இச் சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது , அதாவது .................... ரூபா, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒத்திணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது."

4. இச் சட்டத்தின் ஏற்பாடுகள் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்து விட்டவையாக க் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் 3ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பண்டங்கள் இறக்குமதிக்கான விலைப் பட்டியலொன்றின் மீது கொடுபடற்பாலதான முத்திரைத் தீர்வை சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியால் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்கி இச் சட்டமானது பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேதியன்று முடிவடையும் ஏதேனும் காலப்பகுதியில் ஒத்திணைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஒத்திணக்கமானது செல்லுபடியிலுள்ள வகையில் செய்யப்பட்டிருப்பதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

# 2000ஆம்ஆண்டின் 34ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம்

[2000ஆம் ஆண்டு யூலை மாதம் 21ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

## குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2000ஆம்ஆண்டில் 34ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 544ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ)என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

"(அ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் கருத்தினுள் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைத் தவிர்ந்த வேறு ஏதேனும் கணக்கில் பணத்தை வைத்திருக்கும் ;"; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

"(உ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டத்தின் கருத்தினுள் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியில் ஏதேனும் பெட்டகத்திலுள்ள வேறு ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை வைத்திருக்கும்"

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2000ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆந்திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டம் 2000ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 71ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(இ) வங்கியானது -

(i) ஆரம்பச் சொந்தக்காரரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விடயத்தில், ஆரம்பச் சொந்தக்காரரினதும் அத்துடன் அவர் எந்தக் குடும்பத்தின் தலைவராக இருக்கின்றாரோ அந்தக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களினதும் ; அல்லது

(ii) ஆரம்பச் சொந்தக்காரரின், வாழ்க்கைத்துணையால் அல்லது எவரேனும் பிற்சந்ததியினரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விடயத்தில், ஆரம்பச் சொந்தக்காரரின் அத்தகைய வாழ்க்கைத் துணையினதும் அத்துடன் ஏனைய பிற்சந்ததியினர்களினதும் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆரம்பச் சொந்தக்காரரால், வாழ்க்கைத்துணையால் அல்லது பிற்சந்ததியால் எந்தத் தேதியன்று விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்தத் தேதிக்கு நேர்முந்திய மூன்றாண்டுகளுக்கான வருமானவரி விதிப்பனவு தொடர்பிலான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கணிப்பிடப்பட்ட ஆண்டுச் சராசரி நியதிச்சட்ட வருமானம், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சவில்லை எனத் திருப்திப்பட்டாலன்றி";

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3அ) மூன்றாம் உட்பிரிவின் கீழ் தீர்மானமொன்றைச் செய்யும் நோக்கங்களுக்கென வங்கியானது, வங்கியால் நியமிக்கப்பட்ட விசாரணை அலுவலரைக்கொண்டு விண்ணப்பத்தைப் பற்றிய விசாரணையொன்றை நடத்தச் செய்வித்தல் வேண்டும். வங்கியால் நியமிக்கப்பட்ட விசாரணை அலுவலரொருவர், விண்ணப்பம் எந்த வளவுகள் தொடர்பிலானதோ அந்த வளவுகளின் சொந்தக்காரருக்கும் விண்ணப்பம் செய்யும் ஆளுக்கும் நேரிலோ அல்லது அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரின் மூலமோ தம்பக்க வழக்கை எடுத்துரைக்கும் வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும், என்பதுடன் அவர்,

(அ) கட்டளை விட்டழைப்பதற்கும் சாட்சிகளின் வருகையை கட்டாயப்படுத்துவதற்கும் ;

(ஆ) ஆவணங்கள் முன் வைக்கப்படுவதைக் கட்டாயப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(இ) சாட்சிகளுக்கு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிப்பதற்கும்

மாவட்ட நீதிமன்றமொன்றிற்குள்ள எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

*3.* இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமைஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க , காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்

[2000ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]

**காப்புறுதித் தொழிலை அபிவிருத்தி செய்கின்ற, மேற்பார்வை செய்கின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற நோக்கத்துக்காகக் காப்புறுதிச் சபையொன்றைத் தாபிப்பதற்கும் ; 1962ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நீக்குவதற்கும் ;அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினால் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் 1

### இலங்கை காப்புறுதிச் சபையைத் தாபித்தலும் அமைத்தலும்

2. (1) இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் இலங்கைக் காப்புறுதிச் சபை என அழைக்கப்பட வேண்டிய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இது, இலங்கையில் காப்புறுதித் தொழிலின் அபிவிருத்தி, மேற்பார்வை, ஒழுங்குபடுத்துகை என்பவற்றுக்குப் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(2) சபையானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரைக்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. சபையின் குறிக்கோளும் பொறுப்புடைமையும் இலங்கையில் காப்புறுதித் தொழில், காப்புறுதிப்பத்திரமுடையோரினதும் காப்புறுதிப் பத்திரமுடையோராக வரவிருப்போரினதும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடனும் கீர்த்தியுடனும் உயர்தொழில்சார், புத்திசாலித்தனமான முறையிலும் கொண்டு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதாகவிருத்தல் வேண்டும்.

4. (1) சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) திறைசேரிப் பிரதிச் செயலாளர் ;

(ஆ) பணச்சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர், ஒருவர்;

(இ) இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஈ) இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும், காப்புறுதி, வர்த்தகம், நிதி முகாமை, தொழில் முகாமை, பொருளியல், சட்டம் என்ற துறைகளில் அல்லது வேறேதேனும் தொடர்புபட்டதுறையில் கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளையும் அனுபவத்தையும் உடையவராக இருந்துள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.

(2) அமைச்சர் சபையின் உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம், சபையின் உறுப்பினர்களுக்குச் செலுத்தற்பாலதான ஊதியம், சபையின் கூட்டங்களும் இலச்சினையும் என்பன தொடர்பாகப் பயனுடையனவாதல் வேண்டும்.

5. சபையானது, அதன் குறிக்கோளையும் பொறுப்புடைமையையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :–

(அ) இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆட்களை காப்புறுதியாளர்களாகப் பதிவு செய்தல் ;

(ஆ) காப்புறுதித் தரகர்களாக ஆட்களைப் பதிவு செய்தல் ;

(இ) காப்புறுதித் தொழிலை அபிவிருத்தி செய்வதன் மீதும் ஒழுங்குபடுத்துவதன் மீதும் அரசாங்கத்துக்கு மதியுரை வழங்குதல்;

(ஈ) காப்புறுதித் தொழில் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்தல் ;

(உ) சபையின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கின்ற, புரிகின்ற மற்றும் நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்தல் ;

(ஊ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல் அத்துடன் அதனை விற்றல், குத்தகைக்குக் கொடுத்தல் ஈடு வைத்தல் அல்லது வேறு வகையில் கையாளல்;

(எ) அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவ்சியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களிலும் ஈடுபடுதல்; அத்துடன்.

(ஏ) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் உரியமுறையில் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் செய்தல்.

6. (1) சபையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன சபையின் நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) சபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின் 14, 81 மற்றும் 83 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவுக் கட்டணமாகச் செலுத்தப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இச் சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ் ஆண்டுக் கட்டணமொன்றாக காப்புறுதியாளர்களினால் செலுத்தப்பட்ட அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஈ) இச் சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;அத்துடன்

(உ) இலங்கையிலாயினும்சரி, இலங்கைக்கு வெளியேயாயினும்சரி, எத்தகையதுமான எம் மூலத்திலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியக் கொடைகள் என்ற வகையாகச் சபையினால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், அதன் பணிகளை நிறைவேற்றுவதிலும், அதன் கடமைகளைப் புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

7. (1) ஒவ்வொரு காப்புறுதியாளரினதும் வருடாந்த தேறிய கட்டுப்பண வருமானத்தின் மீது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்துக்குக் காலம் சபையின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களிலான ஆயவரியொன்று இறுக்கப்படுதலும், அறவிடப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும்; எவ்வாறாயினும், அத்தகைய வீதம் அத்தகைய வருடாந்த தேறிய கட்டுப்பண வருமானத்தின் அரை நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது.

(2) இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளையொவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் கட்டளை, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஆயவரியானது, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ்அறவிடப்படும் வேறேதேனும் வரிக்கு அல்லது ஆயவரிக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக "வருடாந்த தேறிய கட்டுப்பண வருமானம்" என்பது மீள்காப்புறுதிக் கட்டுப்பணத்தைக் கழித்துவரும் முழுமொத்தக் காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் என்று பொருளாகும்.

8. (1) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) சபையானது, சபையின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றித் தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம், உறுப்புரையின் ஏற்பாடுகள், சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

9. (1) அமைச்சர், சபையின் கலந்தாலோசனையுடன், சபையின் பணிப்பாளர், தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர் அதன் பிரதான நிறைவேற்றலுவராக இருத்தலும் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியமுட்பட ஊழிய நிபந்தனைகளானவை அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் கூட்டங்களுக்கு வருகைதரும்படி சபையினால் அழைக்கப்படுவதன் மேல் அவ்வாறு செய்தல் வேண்டும்; ஆனால், அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுப் பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய, சபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் சபையின் எல்லா அலுவல்கள் பற்றிய விவகாரங்களினதும் கொண்டு நடாத்துகைகளினதும் பணிப்பும், அத்துடன் சபையின் அலுவலர்களினதும் சேவையானர்களினதும் நிருவாகமும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் அங்கீகாரத்தோடு, இச்சட்டத்தினால் அவருக்களிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை எவரேனும் சபையின் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு கையளிப்பது அவசியமானதென அவர் கருதும் போதெல்லாம் அவ்வாறு செய்யலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய தத்துவத்தை பணியை அல்லது கடமையை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(5) அமைச்சர், சபையின் விதப்புரையின்மீது, (1)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியை, அதற்கான காரணங்களைக் காட்டி, பதவியிலிருந்து அகற்றலாம்.

10. (1) சபையானது, அதன் பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் சபையினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கும் அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்கச் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலர்களினதும் அரசாங்க நிருவாகம் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதே சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின்37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளைச் சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சபைக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதியானது அத்தகைய உடன்படிக்கையின்கீழ் அவ்வாளின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குப் புரியப்படும் சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

11. (1) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளர்களினதும் அத்துடன் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினதும் சம்மதத்துடன் அதே சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறானவையும், ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்டவையுமான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது அதே சம்மதத்துடன் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனுமாள் (1)ஆம் உட்பிரிவின் கீழ் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ நியமிக்கப்படுமிடத்து அவர், சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் கட்டுப்பட்டவராகவுள்ளவாறான அதே ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் 11

### காப்புறுதியாளர்களைப் பதிவு செய்தல்

12. (1) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், ஆளெவரும் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இச்சட்டத்தின் கீழ் அப்போதைக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது பதிவு செய்யப்பட்டவராகக் கருதப்பட்டாலொழிய, அத்தகைய ஆள் இலங்கையில் அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான பதிவொன்று பொதுக் காப்புறுதித் தொழிலுக்கானதாக அல்லது நீண்டகாலக் காப்புறுதித் தொழிலுக்கானதாக அல்லது பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதித் தொழில் ஆகிய இரண்டுக்குமானதாக இருக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச் சட்டத்தின் ஏற்பாடுகள், 1999ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை தொடர்பிலும் 1978ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்பிலும் 1996ஆம் 17ஆம் இலக்க, சமூக பாதுகாப்புச்சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புச்சபை தொடர்பிலும் ஏற்புடையனவாதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், காப்புறுதித் தொழில் தவிர்ந்த வேறு எவ்வகையினதுமான தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது ;

ஆயின், ஆளொருவர், சபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்தோடு இச்சட்டத்தின் கீழ் எந்தக் காப்புறுதிக் தொழிலுக்காகப் பதிவொன்று பெறப்படுகின்றதோ அந்தக் காப்புறுதித் தொழிலின் துணைநிலையான அல்லது அக்காப்புறுதித் தொழிலோடு இணைந்துள்ள, ஏதேனும் நிதிசார் சேவைகள் தொழிலைக் கொண்டுநடாத்தலாம்.

13. (1) ஆளெவரும்

(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனியின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாகவிருந்தாலொழியவும் ;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட தொகைக்குக் குறையாத செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தை உடையவராக விருந்தாலொழியவும் ;

(இ) வைப்புப்பணம் சார்பாக ஆக்கப்பட்ட விதிகளினால் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தொகையொன்றைத் திறைசேரிக்கு வைப்புப் பணமாகச் செலுத்தினாலொழியவும் ;

(ஈ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தினாலொழியவும் ; அத்துடன்

(உ) காப்புறுதி செய்யப்பட்ட பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்குக் காப்புறுதியாளர்களின் தகுந்த நடத்தையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும் காப்புறுதித் தொழிலின் அபிவிருத்திக்காகவும் அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் சபையினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தாலொழியவும்.

அத்தகைய ஆள், இலங்கையில் ஒன்றில் ஒரு வகுப்பினதான அல்லது இருவகுப்பினவையுமான காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குப் பதிவு செய்யப்படுதலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்தியின் நோக்கத்துக்கா்க வெவ்வேறு வகுப்பினவான காப்புறுதித் தொழிலுக்காக வெவ்வேறு தொகைகள் விதித்துரைக்கப்படலாம்.

14. (1) பன்னிரண்டாம், பிரிவின் கீழ் பதிவுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், சபையினால் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் சபைக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றுடன் இணைக்கப்படுதலும் வேண்டும்:-

(அ) 13ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென்று விண்ணப்பகாரரினால் அளிக்கப்பட்ட எழுத்திலான கூற்றொன்றும் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் வைப்பிலிடப்பட்ட தொகையைக் குறித்துரைக்கின்றதும் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் வழங்கப்பட்டதுமான சான்றிதழொன்றும்;

(ஆ) பதிவுக்கான விண்ணப்பம் எந்தக் காப்புறுதித் தொழில் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்தக் காப்புறுதித் தொழில் தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ;

(இ) பதிவுக்காக விண்ணப்பிக்கின்ற கம்பெனியின் அமைப்பக விதிகளினதும் அமைப்புப் புறவிதிகளினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(ஈ) பதிவுக்காக விண்ணப்பிக்கின்ற கம்பெனியின் கூட்டிணைப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று;

(உ) கம்பெனியின் பதிவாளரினால் வழங்கப்பட்ட தொழில் தொடங்குவதற்கான சான்றிதழின் அத்தாட்சிப்படுததப்பட்ட பிரதியொன்று ;

(ஊ) பின்வருவன தொடர்பான விதித்துரைக்கப்பட்ட விபரங்களைத் தருகின்ற கூற்றொன்று :-

(i) கம்பெனியின் பங்குதாரர்கள் ;

(ii) கம்பெனியின் பணிப்பாளர்கள் ;அத்துடன்

(iii) பிரிவுகள் 32, 46 மற்றும் 94 என்பவற்றில் குறிப்பீடு செய்யப்படும் அலுவலர்கள் ; அத்துடன்

(எ) விண்ணப்பகாரரினால் கொண்டு நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காப்புறுதித் தொழிலின் வகுப்பையும், அவசியமானவிடத்து உப வகுப்பையும் தருகின்ற கூற்றொன்று ;

(ஏ) 13ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் சபையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் எவையேனுமிருப்பின் அவற்றைப் பூர்த்தி செய்தமைபற்றிய விபரங்களைத் தருகின்ற கூற்றொன்று ;அத்துடன்

(ஐ) மூன்றாண்டுக் காலப்பகுதிக்கான வேலைத் திட்டமொன்று அல்லது தொழிற்றிட்டமொன்று.

(2) இப்பிரிவின் கீழான ஒவ்வொரு விண்ணப்பமும், விண்ணப்பத்தோடு இணைக்கப்படும் கூற்றுக்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என விண்ணப்பஞ் செய்கின்ற ஆளினாற் கையொப்பமிடப்பட்ட வெளிப்படுத்துகையொன்றின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் முத்திரைத் தீர்வையற்றதாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பத்தில் அடங்கியுள்ள எவையேனும் விபரங்களின் செம்மையைச் சரிபார்ப்பதற்கும், காப்புறுதியாளரொருவராக இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவுள்ள விண்ணப்பகாரரின் பொருத்துமாந் தன்மையைத் தீர்மானிப்பதற்கும் அவசியமென சபை கருதக்கூடியவாறான அத்தகைய நுண்ணாய்வுகளைச் சபையானது நடாத்தலாம்.

15. (1) பதினான்காம் பிரிவின்கீழ் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்கின்ற ஏதேனும் கம்பெனி இச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளதெனச் சபையானது திருப்திபடுமிடத்தும், அத்துடன் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் நுண்ணாய்வொன்று நடாத்தப்படுமிடத்து, பதிவு செய்யப்படவுள்ள விண்ணப்பகாரரின் பொருத்தமாந்தன்மை தொடர்பாகச் சபையானது திருப்திப்படுமிடத்தும், சபையானது அத்தகைய கம்பெனியைக் காப்புறுதியாளரொருவராகப் பதிவு செய்யவேண்டும் என்பதுடன் காப்புறுதியாளர் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற காப்புறுதித் தொழிலின் வகுப்பும் அத்துடன் அவசியமானவிடத்து உப வகுப்பும் அதில் குறித்துரைக்கப்பட வேண்டிய உரிமமொன்றை அத்தகைய காப்புறுதியாளருக்கு வழங்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் காப்புறுதியாளரொருவருக்கு வழங்கப்படும் உரிமமானது காப்புறுதியாளரின் பிரதான அலுவலகத்தில் அல்லது தொழிலிடத்தில் எல்லா நேரங்களிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையின் எவரேனும் உறுப்பினரினால், அதன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அந் நோக்கத்துக்காகச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் சோதனை செய்யப்படுவதற்குக் கிடைக்கக் கூடியதாகவிருத்தலும் வேண்டும்.

16. (1) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் சபைக்கு ஆண்டுக் கட்டணமாக விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(2) வெவ்வேறு வகுப்பினவான காப்புறுதித் தொழில் தொடர்பில் சபையானது ஆண்டுக் கட்டணமான வெவ்வேறு தொகைகளை விதித்துரைக்கலாம்.

17. பதினைந்தாம் பிரிவின் கீழ் கம்பெனியொன்றைப் பதிவு செய்த பின்னர், 14ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்தலுக்கான விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கப்பட்ட அல்லது பதிவு செய்தலுக்கான விண்ணப்பத்தோடு இணைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களுள் அல்லது விபரங்களுள் எவற்றையும் பாதிக்கும் வகையில் ஏதேனும் திருத்தம் அல்லது மாற்றம் ஏற்படுகின்ற அல்லது செய்யப்படுகின்றபோதெல்லாம், காப்புறுதியாளர் அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பற்றிய முழுமையான மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட கூற்றொன்றைச்சபைக்கு உடனடியாகக் கொடுத்துதவுதல் வேண்டும்.

18. (1) சபையானது காப்புறுதியாளரொருவரின் பதிவை, முழுமையாகவோ அல்லது காப்புறுதித் தொழிலின் குறிப்பிட்டவொரு வகுப்பு அல்லது உபவகுப்புத் தொடர்பிலோ, பின்வரும் காரணங்களுள் அல்லது ஏதுக்களுள் ஏதேனுமொன்றுக்காக அல்லது ஒன்றுக்கு அதிகமானவற்றுக்காக இல்லாதாக்கலாம். அவையாவன காப்புறுதியாளர்:

(அ) பதிவு செய்யப்பட்ட பின்னர் பன்னிரண்டு மாதங்களினுள் தொழில் தொடங்கியிராமை;

(ஆ) ஏதேனும் வகுப்பினதான தொழில் தொடர்பில் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்தாதொழிந்தமை;

(இ) சபைக்கு கடன்கொடுத்தோருடன் ஏதேனும் இணக்கத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்வதற்கு உத்தேசித்திருக்கின்றமை அல்லது செய்துள்ளமை அல்லது ஒழித்துக்கட்டப்பட்டுள்ளமை –அல்லது ஒடுக்கப்பட்டுள்ளமை அல்லது வேறுவகையாக கலைக்கப்பட்டுள்ளமை ;

(ஈ) அதன் காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்போரின் நலனுக்கு அல்லது காப்புறுதித் தொழிலின் அபிவிருத்திக்கு அல்லது தேசிய நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் சாத்தியங்கொண்ட ஒருமுறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றமை ;

(உ) அதன் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு இயலாதிருக்கின்றமை ;

(ஊ) 26ஆம் பிரிவின் கீழ் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தொகையின் கடனிறுப்பு விளிம்பைப் பேணுவதற்குத் தவறியுள்ளமை ;

(எ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை அல்லது இச்சட்டத்தின்கீழ் சபையினால் விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை மீறியுள்ளமை ;

(ஏ) அதன் பதிவுக்கான விண்ணப்பத்தில் பொய்யான, பிழையான, பிறழ்வழி உய்க்கின்ற அல்லது செம்மையற்ற தகவலைக் கொடுத்துதவியுள்ளமை அல்லது முக்கியமான நிகழ்வுகளை மறைத்து வைத்தமை அல்லது வெளிக்காட்டத் தவறியமை ;

(ஐ) நல்ல நிதிசார் நிலையில் இல்லாதொழிந்துள்ளமை ;

(ஒ) உரிமம் அளிக்கப்பட்டதிலிருந்து, உரிமம் அளிக்கப்படுவதற்குத் தகைமையற்றவராக்கப்பட்டமை ; அல்லது

(ஓ) அவரது அலுவல்களை முகாமை செய்வதில் ஏதேனும் துர்ப்பழக்கத்துக்கு அல்லது ஒழுங்கீனத்துக்கு குற்றவாளியாகக் காணப்படுகின்றமை.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனுமொரு காரணத்துக்காக அல்லது ஏதுக்காக அல்லது ஒன்றுக்கு அதிகமான எவையேனும் காரணங்களுக்காக அல்லது ஏதுக்களுக்காக ஏலவே வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களின்கீழ் அதன் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு அத்தகைய காப்புறுதியாளருக்குள்ள பொறுப்புடைமைக்குப் பங்கமின்றிக் காப்புறுதியாளரொருவருக்கு அளிக்கப்பட்ட பதிவை மூன்று கிழமைகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இடைநிறுத்தலாமென்பதுடன் இடைநிறுத்துகை அகற்றப்படும்வரை, காப்புறுதியாளர், புதிய காப்புறுதிப் பத்திரங்களை வழங்குவதிலிருந்து தடைசெய்யப்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலானது, இடைநிறுத்துகையின் காலப்பகுதியையும், காப்புறுதியாளர் அத்தகைய இடைநிறுத்துகை ஏன் அகற்றப்படுதல் வேண்டுமென்பதற்கு எத்தேதிக்கு முன்னர் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றாரோ அத்தேதியையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலுக்கான காப்புறுதியாளரின் பதிலின்மீது, சபையானது

(அ) காப்புறுதியாளர் இடைநிறுத்துகை ஏன் அகற்றப்படுதல் வேண்டுமென்பதற்குப் போதிய காரணம் காட்டுமிடத்து, இடைநிறுத்துகையை அகற்றுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) சபையானது காப்புறுதியாளரின் பதிலின்மீது திருப்தியடையாதவிடத்து, விடயத்துக்கேற்றவாறு ஒன்றில் ஏலவே விதிக்கப்பட்ட இடைநிறுத்துகைக்கான காலப்பகுதியை நீடிக்கலாம் அல்லது பதிவை இல்லாதாக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் காப்புறுதியாளரின் பதிவை, சபை இல்லாதாக்கியுள்ளவிடத்து அல்லது இடைநிறுத்தியுள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப இல்லாதாக்குகை அல்லது இடைநிறுத்துகை பற்றிக் காப்புறுதியாளருக்கு உடனடியாகத் தெரிவிப்பது அதன் கடமையாதல் வேண்டுமென்பதுடன், இடைநிறுத்துகைக்கான காலப்பகுதியை மேலும் நீடிக்கின்ற சந்தர்ப்பத்தில் சபையானது காப்புறுதியாளருக்கு பின்வருவனபற்றி அறிவித்தல் வேண்டும்:-

(அ) இடைநிறுத்துகையானது எக்காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டுள்ளதோ அக்காலப்பகுதி ;

(ஆ) இடைநிறுத்துகை விதிக்கப்பட்டதனை ஏற்படுத்திய காரணம் அல்லது எது நிவர்த்தி செய்யப்படுவதற்கு அல்லது அகற்றப்படுவதற்கு எடுக்க வேண்டிய செயல் ; அத்துடன்

(இ) உட்பந்தி (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திருத்தங்களுக்கான வழிமுறைகள் எக்காலப்பகுதியினுள் எடுக்கப்பட வேண்டுமோ அக்காலப்பகுதி.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் பதிவொன்று இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து, எந்த உரிமம் வைத்திருப்பவரின் உரிமமானது விடயத்திற்கேற்ப இல்லாதாக்கப்படுகின்றதோ அல்லது இடைநிறுத்தப்படுகின்றதோ அந்த உரிமம் வைத்திருப்பவர் உரிமத்தைச் சபைக்கு உடனடியாக மீளவொப்படைத்தல் அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன் சபையானது அதன்மேல் –

(அ) ஒரு பதிவின் இல்லாதாக்குகையின் விடயத்தில் உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டும் ;

(ஆ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குப் பதிவொன்றை இடைநிறுத்துகின்றவிடயத்தில், உரிமத்தின் முகப்பில் அப்பொருள்பட புறக்குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும் ; அத்துடன் உரிமம் வைத்திருப்பவருக்கு அவ்வுரிமத்தைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின், (1)ஆம் (2) ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், சபையானது, இச்சட்டத்தின்கீழ் காப்புறுதியாளரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனுமோர் ஏதுவின்மீதும் அல்லது ஒன்றுக்கு அதிகமான ஏதுக்களின் மீதும், அத்துடன் அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்டதும் அத்தகைய காப்புறுதியாளரினால் புரியப்பட்டதுமான செயலின் அல்லது செய்யாமையின் தன்மையானது உரிமத்தின் இல்லாதாக்குகையை அல்லது இடைநிறுத்துகையை அனுமதிக்கின்றவாறான அத்தகைய தன்மையினதாகவிராதவிடத்தும், இல்லாதாக்குகை அல்லது இடைநிறுத்துகை ஒன்றுக்குப் பதிலாக, பின்வருவனவற்றுக்கெனச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுக்கும்படி காப்பறுதியாளரைப் பணிக்கலாம் :-

(அ) அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்ந்து புரியப்படுவதைத் தடுத்தலும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய செயலின் அல்லது செய்யாமையின் விளைவாக ஏற்படுகின்ற விளைவுகளை நிவர்ததி செய்தலும் சரிசெய்தலும்.

19. (1) பதினெட்டாம் பிரிவின் கீழ் சபையினால் செய்யப்பட்ட முடிவு ஒன்றினால் இன்னலுற்றவரான காப்புறுதியாளர் ஒருவர், அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அதிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றமானது இப்பிரிவின் கீழ் மேன் முறையீடு செய்யப்பட்டதன்மேல் எம்முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அம்முடிவை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம். திரிபுபடுததலாம் அல்லது தள்ளி வைக்கலாம் அத்துடன் நீதியின் அக்கறைகள் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

20. (1) இச்சட்டத்தின் கீழ் காப்புறுதியாளரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று 18ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய காப்புறுதியாளரின் காப்புறுதித் தொழிலின் நிருவாகமும், முகாமையும் நிருவாகியொருவரினால் கையேற்கப்பட வேண்டியதனைத் தேசிய மற்றும் பொதுமக்கள் நலன் தேவைப்படுத்துகின்றனவெனச் சபையானது கருதுமிடத்தும் சபையானது, அந்நிகழ்வுபற்றி அமைச்சருக்குத் தெரிவிக்கலாமென்பதுடன், அமைச்சர் , கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் அத்தகைய தொழிலை முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்கும் நிருவாகியொருவரை நியமிக்கலாம். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி அவசியமானவிடத்து, காலத்துக்குக் காலம் அதேமுறையில் நீடிக்கப்படலாம்.

(2) அச்சபையானது, அறிவித்தலின் பிரதியொன்று கம்பெனிகள் பதிவாளருக்குச் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் , அத்தகைய காப்புறுதிக் கம்பெனி தொடர்பாக அத்தகைய பதிவாளரினால் பேணப்படுகின்ற பதிவேட்டில் பதிவீடொன்றைச் செய்வதற்கு அவர் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

21. (1) இச்சட்டத்தின்கீழான காப்புறுதியாளரொருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற கம்பெனி ஒவ்வொன்றும், இலங்கை அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும், இச்சட்டத்தின் 13ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய பணத்தொகையைத் திறைசேரிப் பிரதிச் செயலாளரிடம் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் இடப்பட்ட வைப்புப்பணமொன்று காசாக அல்லது அரசாங்கப் பிணைப் பொறுப்புக்களாக அல்லது அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைப் பொறுப்புக்களாக இருக்கலாம் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடப்பட்ட தேதியில் அவற்றின் சந்தைப் பெறுமதியாகவிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) காசாக இடப்பட்ட வைப்புப்பணமொன்று, காப்புறுதியாளரின் வரவுக்குத் திறைசேரிப்பிரதிச் செயலாளரினால் வைத்திருக்கப்படல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எச்சூழ்நிலைகளிலும் எம்முறையிலும் அத்தகையவொரு வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படலாமோ அச்சூழ்நிலைகளிலும் அம்முறையிலும் காசாகக் காப்புறுதியாளருக்குத் திருப்பிக் கொடுபடற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் எவரேனும் காப்புறுதியாளரினால்

இப்பிரிவின் கீழ் வைப்பிலிடப்பட்ட பிணைப்பொறுப்புக்கள்மீது வருமதியாகத் திரளும் ஏதேனும் வட்டி, அது சேகரிக்கப்படும்போது திறைசேரி பிரதிச் செயலாளரினால் காப்புறுதியாளருக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

(4) காப்புறுதியாளரொருவர் எந்நேரத்திலும் இப்பிரிவின்கீழ் திறைசேரிப் பிரதிச் செயலாளரிடம் வைப்பிலிடப்பட்ட பிணைப்பொறுப்புக்களுக்குப் பதிலாக, பதிலீடுசெய்யப்படும் நேரத்தில் நிலவுகின்ற சந்தைவீதத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட சமப் பெறுமதியைக் கொண்ட ஏனைய அரசாங்கப் பிணைப் பொறுப்புக்களை அல்லது அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைப் பொறுப்புக்களை இடலாமென்பதுடன், திறைசேரிப் பிரதிச் செயலாளர், வைப்புப்பணமொன்றைச் செலுத்தியுள்ள காப்புறுதியாளரொருவரின் எழுத்திலான விண்ணபத்தின்மீது, இச்சட்டத்தின்கீழ் காப்புறுதியாளரினால் வைப்பிலிடப்பட்ட எவையேனும் பிணைப்பொறுப்புக்களை மீட்பதன்மேல் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் பெறப்பட்ட காசு முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அரசாங்கப் பிணைப்பொறுப்புக்களில் அல்லது அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைப் பொறுப்புக்களில் முதலீடு செய்தலும் வேண்டும்.

(5) திறைசேரிப் பிரதிச் செயலாளர், காப்புறுதியாளரினால் அவ்வாறு வேண்டப்படின், அவரிடம் வைப்பிலிடப்பட்ட எவையேனும் பிணைப் பொறுப்புக்களை விற்பனை செய்தலும், ஒன்றில் அத்தகைய விற்பனையினால் பெறப்பட்ட காசை வைப்புப் பணமாக வைத்திருத்தலும் அல்லது காப்புறுதியாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அரசாங்கப் பிணைப்பொறுப்புக்களில் அல்லது அரசாங்க உத்தரவாதம்பெற்ற பிணைப் பொறுப்புக்களில் அவரினாற் பெறப்பட்ட காசு முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை முதலீடு செய்தலும் வேண்டுமென்பதுடன், முதலீடானது எப்பிணைப் பொறுப்புக்களில் அவ்வாறு செய்யப்படுகின்றதோ அப்பிணைப் பொறுப்புக்களில் வைப்புப் பணமாக வைத்திருத்தலும் வேண்டும்.

22. காப்புறுதியாளரொருவரினால் இடப்படும் வைப்புப்பணமானது காப்புறுதியாளரினது சொத்துக்களின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும். ஆனால் –

(அ) காப்புறுதியாளரினால் கைமாற்றப்படவோ அல்லது சாட்டுதல் செய்யப்படவோ அல்லது ஏதேனும் ஈட்டுடன் அல்லது வேறு பொறுப்புடன் பாரபந்தப்படுத்தப்படவோ இயன்றதாகவிருத்தலாகாது, அல்லது ஏதேனும் தீர்வையை நிறைவேற்றுவதில் கைப்பற்றுகைக்கு உட்பட்டதாகவிருத்தலாகாது ; அல்லது

(ஆ) காப்புறுதியாளரினால் வழங்கப்பட்டமையும் பொறுப்புவிடுவிக்கப்படாதுள்ளவையுமான காப்புறுதித் தொழிலின் காப்புறுதிப் பத்திரங்களிலிருந்து எழுகின்ற பொறுப்புக்களைக் காப்புறுதியாளர் ஒடுக்கப்படும் பட்சத்தில் பொறுப்பு விடுவிப்பதற்காகத் தவிர, காப்புறுதியாளரின் ஏதேனும் பொறுப்பைப் பொறுப்பு விடுவிப்பதற்காகக் கிடைக்கக்கூடியதாதலாகாது.

23. காப்புறுதியாளர் ஒருவர் ஏதேனும் வகுப்பினதான காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தாதொழிந்துள்ளாரென்றும், அவ்வகுப்புத் தொடர்பில் அவரது பொறுப்புக்கள் திருப்திப்படுத்தப்பட்டுள்ளனவென்றும் அல்லது வேறுவகையில் அவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்றும் சபையானது திருப்திப்படுமிடத்து, அந்தக் காப்புறுதித் தொழிலின் வகுப்புத் தொடர்பிலான வைப்புப் பணமானது, காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட அவ்வகுப்பினைச் சேர்ந்த கடைசிக் காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுற்றதன்மேல் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

24. தனியாகவாயினுஞ்சரி, அல்லது நீண்டகாலக் காப்புறுதித் தொழிலுடன் சேர்த்தாயினுஞ்சரி பொது காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் போதிய தொழில்நுட்ப ஒதுக்குகைளத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும் ;

ஆயின் காப்புறுதியாளரினால் பேணப்படுகின்ற தொழினுட்ப ஒதுக்கு அதன் பொறுப்புக்களை ஈடுசெய்வதற்குப் போதியதல்லவெனச் சபையானது கருதுமிடத்து, சபையானது, அதன் தொழில்நுட்ப ஒதுக்கை அதிகரிப்பதற்கு அல்லது கூட்டுவதற்கு அத்தகைய காப்புறுதியாளரைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

25. (1) இருபத்துநான்காம் பிரிவின் கீழ் பொதுக் காப்புறுதித் தொழிலுக்காகப் பேணப்படுகின்ற தொழினுட்ப ஒதுக்கின் சொத்துக்களினது இருபது சதவீதத்துக்குக் குறையாததும் 38ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பேணப்படுகின்ற நீண்டகாலக் காப்புறுதி நிதியத்துக்கான சொத்துக்களின் முப்பது சதவீதத்துக்குக் குறையாததும் ஆன சொத்துக்கள் அரசாங்கப் பிணைப் பொறுப்புக்களின் வடிவத்திலிருத்தல் வேண்டும். மீதியாகவுள்ள சொத்துக்கள் சபையினால் தீர்மானிக்கப்படவேண்டிய வேறு அத்தகைய முதலீடுகளின் வடிவத்திலிருத்தல் வேண்டும்.

(2) சபையானது, இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஒதுக்கில் அல்லது நிதியத்தில் உள்ள எவையேனும் சொத்துக்களின் ஏதேனும் முதலீடு பொருத்தமற்றதெனக் கருதுமிடத்து, பணிப்புகளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய முதலீட்டைக் கையாளுவதற்கான அத்தகைய பணிப்புக்களை வழங்குவதற்கு அது தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் காப்புறுதியாளரொருவரினால் பேணப்படுகின்ற ஓர் ஒதுக்கின் அல்லது நிதியத்தின் சொத்துக்களும் அத்தகைய காப்புறுதியாளரின் மற்றெல்லாச் சொத்துக்களும், காப்புறுதியாளரொருவரினால், அதற்கென விண்ணப்பம் செய்யப்படுவதன்மேல் சபையினால் வேறுவகையாக அனுமதிக்கப்பட்டாலொழிய, இலங்கையில் வைத்திருக்கப்படல் வேண்டும். சபையினால் அனுமதியளிக்கப்படுவதற்கான வழிகாட்டுநெறிகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

26. (1) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், காப்புறுதித் தொழிலின் ஒவ்வொரு வகுப்புத் தொடர்பிலும், அதற்கென ஆக்கப்படும் விதிகளினால் அந்த வகுப்பினதான காப்புறுதித் தொழில் தொடர்பில் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகையினதான கடனிறுப்பு விளிம்பைப் பேணுதல் வேண்டும்.

(2) அத்தகைய எவரேனும் காப்புறுதியாளரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற காப்புறுதித் தொழிலின் வகுப்புத் தொடர்பில் பேணப்படவேண்டிய கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும்நோக்கத்துக்காகச் சொத்துக்களின் பெறுமதியையும் அவற்றின் ஏலதகைமையையும் பொறுப்புக்களின் தொகையையும் தீர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காகச் சபையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

(3) காப்புறுதியாளர்களின் பொறுப்புக்களுக்கெதிராக சொத்துக்களைத் தவறாகத் தொடுப்பதைத் தடுப்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காகச் சபையானது காலத்துக்குக்காலம் அதன் சார்பில் செய்யப்படும் விதிகள் மூலம் அவற்றின் பொறுப்புகளுக்கெதிராக அவற்றின் சொத்துக்களின் ஆகக்குறைந்த எல்லைகளைத் தீர்மானிப்பதில் ஏற்புடைத்தாக்கப்படவேண்டிய விதிமுறைகளை அதன் சார்பில் செய்யப்படும் விதிகள்மூலம் விதிக்கலாம்.

## பாகம் 111

### காப்புறுதியாளர்களுக்கு ஏற்புடைத்தான பொது ஏற்பாடுகள்

27. காப்புறுதியாளர் ஒருவர், காப்புறுதித் தொழிலின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பினவான தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து, அத்தகைய காப்புறுதியாளர் காப்புறுதித் தொழிலின் ஒவ்வொரு வகுப்புத் தொடர்பிலும் எல்லாப் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவுகளின் தனிவேறான கணக்குகளை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் அது கொண்டுநடாத்துகின்ற பொதுவான காப்புறுதித் தொழிலின் ஒவ்வொரு உப வகுப்பினதும் தொடர்பில் தனிவேறான கணக்குகளைப் பேணுதலும் வேண்டும்.

28. காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், அத்தகைய காப்புறுதியாளர்களினால் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற எல்லாக் காப்புறுதித்தொழில் தொடர்பிலும் -

(அ) காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு காப்புறுதிப் பத்திரம் தொடர்பிலும் காப்புறுதிப் பத்திரமுடையவரின் பெயர் மற்றும் முகவரி, காப்புறுதிப்பத்திரம் பயனுறும் தேதி, மற்றும் காப்புறுதியாளர் அறிந்திருக்கும் ஏதேனும் கைமாற்றம், சாட்டுதல் அல்லது பெயர் நியமனம் ஆகிய விபரங்கள் பதியப்பட வேண்டியதான காப்புறுதிப் பத்திரங்களின் இடாப்பு அல்லது பதிவேடு ஒன்றை ; அத்துடன்

(ஆ) காப்புறுதியாளர்களுக்கு முன்வைக்கப்பட்ட உரிமைக் கோரிக்கை ஒவ்வொன்றுடனும் உரிமைக் கோரிக்கையின் தேதி அத்துடன் உரிமைகோருநரின் பெயரும், முகவரியும் உரிமைக் கோரிக்கை ஒன்று மறுதலிக்கப்பட்டுள்ளவிடத்து, மறுதலிக்கப்பட்ட தேதி மற்றும் அதற்கான ஏதுக்கள் என்பன தீர்த்து வைக்கப்பட்ட தேதி மற்றும் உரிமைக் கோரிக்கை சேர்த்துப் பதியப்படவேண்டியதான உரிமைக் கோரிக்கை இடாப்பு அல்லது பதிவேடு ஒன்றை

வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

29. (1) காப்புறுதியாளர் எவரும், அத்தகைய காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவராகப் பதவிவகிக்கின்றவரான எவரேனும் ஆளுக்கு அல்லது அத்தகைய ஓர் ஆள் அத்தகைய ஏதேனும் பதவியை வகிக்கின்றதான ஏதேனும் கம்பெனிக்கு, சபையின் முன்னங்கீகாரமின்றி அக்காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட ஆயுள் காப்புறுதிப் பத்திரம்

ஒன்றை ஈடுவைப்பதன் மீதான கடன் ஒன்று தவிர்ந்த ஏதேனும் கடனை வழங்குதலாகாது. சபையானது கடனை மீள் கொடுப்பனவு செய்வதற்குப் போதுமான பிணைப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதென திருப்திப்பட்டால் மாத்திரம் அத்தகைய அங்கீகாரத்தை வழங்கலாம்.

(2) அத்தகைய காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அத்தகைய ஆள் பணிப்பாளர் ஒருவராக இருக்கின்ற ஏதேனும் கம்பனிக்கு காப்புறுதியாளரினால் ஆயுட்காப்புறுதிப் பத்திரமொன்றின் ஈட்டின்மீது கடன் ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய கடனானது நியமிக்கப்பட்ட தேதியன்று நிலுவையாக உள்ளவிடத்தும், சபையானது, கடனை மீளக் கொடுப்பனவு செய்வதற்காக அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பின் போதுமாந்தன்மையைப் பரிசோதிப்பதற்கு, ஏதேனும் உடன்படிக்கையில் அல்லது ஒப்பந்தத்தில் முரணாகவுள்ளது. எது எப்படியிருப்பினும், தத்துவம் கொண்டதாதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு செய்வது அவசியமானதென சபை கருதினால், குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் கடன் மீளச் செலுத்தப்படல் வேண்டுமென அல்லது மேலதிகப் பிணைப்பொறுப்பு வழங்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துதல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் கடனை மீள்கொடுப்பனவு செய்ய அல்லது மேலதிக பிணைப்பொறுப்பு வழங்க அத்தகைய ஆள் தவறினால் அவர், அத்தேதியிலிருந்து ஒருவருட காலப்பகுதி முடிவடைந்ததன்மேல் அத்தகைய காப்புறுதியாளரின் பணிப்பாளராகப் பதவிவகிப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

30. எவரேனும் காப்புறுதியாளரின் சொத்துக்கள் எவையும் காப்புறுதியாளரின் பெயரிலன்றி வேறுவகையில் வைத்திருக்கப்படலாகாது.

31. (1) காப்புறுதியாளர் ஒருவர், காப்புறுதிப் பத்திரம் உடையவர்களினதும் காப்புறுதியாளர்களினதும் நலனானது போதுமானளவு பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சபையினால் குறிததுரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வேறெவரேனும் காப்புறுதியாளருடன் முதலில் கூறப்பட்ட காப்புறுதியாளரினால் பயனுறுத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து அல்லது பத்திரத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் பொறுப்புடைமையை மீள் காப்புறுதி செய்யலாம்.

(2) சபையானது, எழுத்திலான அறிவித்தல் மூலம் மீள் காப்புறுதி செய்துகொண்டுள்ள எவரேனும் காப்புறுதியாளரை, அத்தகைய காப்புறுதியாளர்மீது செய்யப்படக்கூடிய ஏதேனும் உரிமைக் கோரிக்கையைத் திருப்திப்படுத்துவதற்கு அத்தகைய காப்புறுதியாளர் அவசியமான நிதியத்தைக் கொண்டுள்ளாரா எனக் கண்டறிவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(3) சபையானது, காலத்திற்குக் காலம் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்புமூலம் இலங்கையில் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதித் தொழில் தொடர்பாக வழங்கப்பட்ட அல்லது பயனுறுத்தப்பட்ட காப்புறுதிப்பத்திரங்கள் அல்லது ஒப்பந்தங்கள் மீதான இடர்களை மீள்காப்புறுதியாளருடனான ஏதேனும் அத்தகைய ஒழுங்கு தேசிய நலனுக்குக் குந்தகமானதாக இருக்குமிடத்து இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் குறித்துரைக்கப்பட்ட மீள் காப்புறுதியாளருடன் மீள் காப்புறுதி செய்து கொள்வதிலிருந்து எல்லாக் காப்புறுதியாளர்களையும் தடைசெய்யலாம்.

ஆயின் எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் ஏதேனும் அறிவிப்பை வழங்குமுன்னர், சபையானது இலங்கைக்கு வெளியே அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மீள்காப்புறுதியாளருடன் மீள்காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற காப்புறுதியாளருக்கு அல்லது காப்புறுதியாளர்களுக்கு அத்தகைய அறிவிப்பை வழங்குவதற்கான அதன் முன்னம்பற்றித் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன் உத்தேச முடிவு தொடர்பாக அத்தகைய காப்புறுதியாளரினால் அல்லது காப்புறுதியாளர்களினால் செய்யப்பட்ட எவையேனும் முறைமீடுகளைச் சீர்தூக்கிப்பார்த்தலும் வேண்டும்.

32. (1) காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவராகப் பட்டயம்பெற்ற காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினரெனத் தகைமையை அல்லது சபை ஏற்கக்கூடியதாகவுள்ள சமமான தகைமையைக் கொண்டுள்ளவரும், முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது தகைமைக்குப் பின்னரான ஐந்தாண்டு அனுபவத்தையாவது உடையவருமான ஆள் ஒருவரையேனும் தொழிலுக்கமர்த்தல் வேண்டும்.

(2) குறித்துரைக்கப்பட்ட அலுவலராகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவர் காப்புறுதியாளரின் முதன்மை அலுவலராகவும் பணியாற்றலாம் ; ஆயின் அத்தகைய அலுவலர் 94ஆம் பிரிவின்கீழ் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான முதன்மை அலுவலரொருவரின் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

33. (அ) காப்புறுதியாளர் ஒருவரின் காப்புறுதியாளர் அல்லது கொளி அல்லது இணை அல்லது துணைநிலைக் கம்பெனி எவரும் அல்லது எதுவும் ;அல்லது

(ஆ) காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர், பிரதான அலுவலர் அல்லது குறித்துரைக்கப்பட்ட அலுவலர் கொளி ஒன்றின் அல்லது இணை ஒன்றின் அல்லது காப்புறுதியாளர் ஒருவரின் துணை நிலைக் கம்பெனி ஒன்றின் பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர்.

எவரும் இச்சட்டத்தின் கீழ் தரகர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் பங்குதாரர் ஒருவராகவோ பணிப்பாளர் ஒருவராகவோ அல்லது ஊழியர் ஒருவராகவோ இருத்தலாகாது ;

ஆயினும், காப்புறுதியாளரொருவர் அல்லது இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவரான எவரேனும் அத்தகைய ஆள் பதிவுத் தேதியன்றுள்ளவாறு இச் சட்டத்தின் கீழ் தரகர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் ஒரு பங்குதாரராக, பணிப்பாளராக அல்லது ஊழியராக இருக்குமிடத்து, அத்தகைய காப்புறுதியாளர் அல்லது ஆள் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள், விடயத்திற்கேற்ப அத்தகைய பங்குகளைக் கையுதிர்க்குமாறு அல்லது பணிப்பாண்மையை அல்லது தொழிலைத் துறக்குமாறு தேவைப்படுத்தல் வேண்டும்.

34. காப்புறுதியாளரெவரும், பின்வருவோரிடமிருந்து தவிர காப்புறுதித் தொழிலை ஏற்றுக்கொள்ளுதலாகாது:-

(அ) காப்புறுதி பற்றிய விடயப்பொருளில் காப்புறுதி செய்தகு அக்கறையை உடைய எவரேனுமாள்;

(ஆ) மீள் காப்புறுதி தொடர்பில் இன்னொரு காப்புறுதியாளர் ;

(இ) காப்புறுதி முகவரொருவர் ;அல்லது

(ஈ) இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதித் தரகரொருவர்.

35. ஆயுட் காப்புறுதித்தொழில் அல்லாத காப்புறுதித் தொழில் தொடர்பில் காப்புறுதியாளரொருவரினால் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் அல்லது காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் வருமதியாகவுள்ள ஏதேனும் தொகையை –

(அ) அத்தகைய தொகை செலுத்தப்படற்பாலதாக வரும் தேதியன்று அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் அல்லது பத்திரத்தின் கீழ் வருமதியாகவுள்ள முழுக் கட்டுப்பணங்களும் செலுத்தப்பட்டிருந்தாலொழிய ;அல்லது

(ஆ) அத்தகைய கட்டுப்பணங்களைக் கொடுப்பனவு செய்வதற்கான வங்கி உத்தரவாதமொன்று அத்தகைய தொகை செலுத்தப்படற்பாலதாக வந்த தேதியன்று காப்புறுதி செய்யப்பட்டவரினால் அல்லது தரகரினால் கொடுத்துதவப்பட்டு, காப்புறுதி செய்யப்பட்டவர் அல்லது தரகர் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய கட்டுப்பணங்களைச் செலுத்தினாலொழிய,

அத்தகைய காப்புறுதியாளர் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

36. (1) சபையானது, காலத்துக்குக் காலம் காப்புறுதியாளர்களினால் விதிக்கப்பட்ட எவையேனும் கட்டண வரையறைகளினால் காப்புறுதிப்பத்திரம் உடையோர் பங்கமான முறையில் பாதிக்கப்படுகின்றனரெனக் கருதுமிடத்து, அத்தகைய காப்புறுதியாளர்களினால் வழங்கப்படவேண்டிய காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பில் அவர்களினால் இறுக்கப்பட வேண்டிய மோட்டார், தீ மற்றும் தொழில்தருநரின் பொறுப்புப்பற்றிய ஆகக்குறைந்த கட்டணத்தை நிர்ணயிக்கலாமென்பதுடன் மோட்டார் காப்புறுதித் தொழிலுக்கான ஆகக்கூடிய கட்டணத்தையும் நிர்ணயிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய காப்புறுதியின் உபவகுப்புத் தொடர்பில் அதனால் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின்கீழ் அல்லது காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்புறுதியாளரெவரும் –

(அ) ஒராம் உட்பிரிவின்கீழ் மோட்டார், தீ மற்றும் தொழில்தருநர்கள் பொறுப்பு என்பன தொடர்பில் நிர்ணயிக்கப்படக் கூடிய ஆகக்குறைந்த வீதத்துக்குக் குறைவாகவுள்ள ;அல்லது

(ஆ) ஒராம் உட்பிரிவின்கீழ் மோட்டார் காப்புறுதி தொடர்பில் நிர்ணயிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வீதத்துக்குக் கூடுதலாகவுள்ள.

தொகையொன்றைக் கட்டுப்பணங்களாக ஏற்றுக் கொள்ளுதலாகாது.

37. (1) சபையானது, எழுத்துமூலமான அறிவித்தலினால், காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்போரின் நலன்கள் போதியளவு பாதுகாக்கப்படுகின்றனவாவென்பதைப் பரிசோதனை செய்யும் நோக்கத்துக்காக, எவரேனும் காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களின் பிரதிகளை அதற்குக் கொடுத்துதவுமாறு அத்தகைய காப்புறுதியாளரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய காப்புறுதியாளரின் கடமையாதலும் வேண்டும்.

(2) சபையானது, அத்தகைய காப்புறுதிப்பத்திரப் படிவத்தினால் மேவப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்தின் நியதிகள் நியாயமானவையாகவும் ஒப்புரவானவையாகவும் உள்ளதனை உறுதிப்படுத்துவதற்கான தேவையைக் கவனத்திற்கொண்டு (1) ஆம் உட்பிரிவின்கீழ் சபைக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் காப்புறுதிப் பத்திரப் படிவத்திற்கான திருத்தங்களைப் பணிக்கலாமென்பதுடன் அத்தகைய திருத்தங்களுக்குப் பயன்கொடுத்தல் அத்தகைய படிவங்களைக் கொடுத்துதவுகின்ற காப்புறுதியாளரின் கடமையாதலும் வேண்டும்.

(3) சபையின் எவரேனும் உறுப்பினரினால் அல்லது அதன் எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் இப்பிரிவின்கீழ் பெறப்பட்ட தகவலெதுவும் சட்ட நீதிமன்றமொன்றினால் வெளியிடப்படுமாறு அல்லது பயன்படுத்தப்படுமாறு தேவைப்படுத்தப்படுகின்றபோது தவிர, அல்லது சபையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கும் புரியும் அத்துடன் நிறைவேற்றும் நோக்கத்துக்காகத் தவிர, அத்தகைய ஆளினால் அவ்வாறு வெளியிடப்படுதலோ அல்லது பயன்படுத்தப்படுதலோ ஆகாது.

## பாகம் 1V

### நீண்டகாலக் காப்புறுதித் தொழில்

38. (1) தனியாகவோ அல்லது பொதுக் காப்புறுதித் தொழிலுடன் சேர்த்தோ நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் -

(அ) “நீண்டகாலக் காப்புறுதி நிதியம்” என அழைக்கப்படவேண்டிய தனிவேறான நிதியமொன்றைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய காப்புறுதியாளரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற நீண்டகாலக் காப்புறுதித்தொழில் தொடர்பில் பெறப்படும் எல்லாப் பணத்தையும் அந்நிதியத்துக்கு வரவு வைத்தலும் வேண்டும் : அத்துடன்

(ஆ) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் தொடர்பிலான சொத்துக்களை வேறேதேனும் வகுப்பினதான காப்புறுதித் தொழிலின் சொத்துக்களிலிருந்து தனிவேறாக வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் காப்புறுதியாளரொருவரினால் பேணப்படும் நீண்டகாலக் காப்புறுதி நிதியம், காப்புறுதியாளரின் தொழில் நீண்டகாலக் காப்புறுதித் தொழிலாக மட்டுமே இருந்திருப்பின், அந்நிதியம் பொறுப்புடையதாக இருந்திராத காப்புறுதியாளரின் எவையேனும் ஒப்பந்தங்களுக்கு அது பொறுப்புடையதாதலாகாது என்பதுடன் அக்காப்புறுதியாளரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற நீண்டகாலக் காப்புறுதித் தொழிலின் நோக்கங்கள் தவிர்ந்த எவையேனும் நோக்கங்களுக்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்புடையதாக்கப்படுதலுமாகாது.

(3) காப்புறுதியாளரொருவர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுகிறாராவென்பதைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காகச் சபையானது -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலான விபரத் திரட்டொன்றைக் காலத்துக்குக் காலம் கொடுத்துதவுமாறு அத்தகைய காப்புறுதியாளரைக் கோரலாம்;

(ஆ) அத்தகைய காப்புறுதியாளர் நீண்டகாலக் காப்புறுதித் தொழிலை எவ்விடத்தில் கொண்டு நடாத்துகின்றாரோ அவ்விடத்தினுள் நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசித்து அத்தகைய தொழில் தொடர்பாக அத்தகைய காப்புறுதியாளரின் எவையேனும் புத்தகங்களை, இடாப்புக்களை அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்யுமாறு அலுவலரொருவருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாமென்பதுடன், அத்தகைய காப்புறுதியாளர் அத்தகைய விபரத்திரட்டைக் கொடுத்துதவுதல் வேண்டும் அல்லது அத்தகைய இடத்தினுள் பிரவேசித்து அத்தகைய பரிசோதனையைச் செய்யும்படி அத்தகைய அலுவலருக்கு அனுமதியளித்தலும் வேண்டும்.

(4) நாற்பத்தெட்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற காப்புறுதியாளரொருவரின் நிதியலுவல்கள் பற்றிய விலைமதிப்பீட்டு நுண்ணாய்வையடுத்து, விநியோகத்துக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ளதென விலைமதிப்பீட்டாளர் விதித்துரைத்துள்ள பங்குபற்றுகின்ற காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பில் தாபிக்கப்பட்ட மேன்மிகையொன்று உள்ளவிடத்து, காப்புறுதியாளர், அம்மேன்மிகையின் ஆகக்குறைந்தது தொண்ணூறு சதவீதத்தையாவது பங்குபற்றுகின்ற காப்புறுதிப் பத்திரங்களை உடையோருக்கு மிகையூதியங்களாகக் கொடுப்பனவு செய்வதற்காகக் குறித்தொதுக்கியிருந்தாலொழிய, அம்மேன்மிகையின் ஏதேனும் பாகத்தைக் குறிக்கின்ற சொத்துக்களைக் கைமாற்றுதலோ அல்லது வேறுவகையில் பிரயோகித்தலோ ஆகாது.

39. (1) பிரதிபயனுடனோ அல்லது பிரதிபயனின்றியோ நீண்ட காலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரத்தைக் கைமாற்றுதல் அல்லது சாட்டுதல் செய்தல், காப்புறுதிப் பத்திரத்தின் மீதான புறக்குறிப்பொன்றின் மூலம் மட்டுமே அல்லது இரு விடயங்களில் ஒன்றில் கைமாற்றுபவரினால் அல்லது சாட்டுதல் செய்பவரினால் அல்லது உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அவரது முகவரினால் ஒப்பமிடப்பட்டதும் ஆகக்குறைந்து ஒரு சாட்சிக்காரரினாலாவது அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான தனிவேறான சாதனத்தின் மூலம் செய்யப்படலாம் அத்துடன் கைமாற்றம் அல்லது சாட்டுதல் பற்றிய நிகழ்வை இது குறிப்பாக எடுத்துக் கூறுதலும் வேண்டும்.

(2) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரத்தின் கைமாற்றம் அல்லது சாட்டுதல் எதுவும், அது (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க செய்யப்பட்டாலொழியவும், கைமாற்றம் அல்லது சாட்டுதல் பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்று சாதனத்துடனும் அல்லது புறக்குறிப்புடனும் அல்லது சரியானதெனக் கைமாற்றத்துக்கான அல்லது சாட்டுதலுக்கான திறத்தவர்களினால் அல்லது அவர்கள் சார்பில் அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற அதன் பிரதியொன்றுடனும் சேர்த்து இலங்கையில் அதன் பிரதான தொழிலிடத்தில் காப்புறுதியாளருக்குச் சேர்ப்பிக்கப்படும்வரையும் காப்புறுதியாளருக்கெதிராக ஏதேனும் பயனுடையதாதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், காப்புறுதியாளருக்குச் சேர்ப்பிக்கப்படும் தேதி, காப்புறுதிப் பத்திரத்தில் அக்கறைகொண்டுள்ள ஆட்களுக்கிடையே உள்ளவாறு நீண்ட காலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரங்கள் கைமாற்றத்தின் அல்லது சாட்டுதலின் கீழான எல்லா உரிமைக் கோரிக்கைகளினதும் முதன்மையை ஒழுங்குபடுத்துதல் வேண்டும் என்பதுடன் கைமாற்றம் அல்லது சாட்டுதல் பற்றி ஒன்றுக்கு மேற்பட்டசாதனங்கள் இருக்குமிடத்து, அத்தகைய சாதனங்களின் கீழான உரிமைக் கோரிக்கைகளின் முதன்மையானது (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல்கள் எந்த ஒழுங்கு வரிசைப்படி சேர்ப்பிக்ககப்படுகின்றனவோ அந்த ஒழுங்கு வரிசையினால் ஆளப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் பெறப்பட்டதன்மேல் காப்புறுதியாளர், அத்தகைய கைமாற்றம் அல்லது சாட்டுதல் பற்றிய நிகழ்வை, அதற்கான தேதியுடனும் கைமாற்றம் பெறுபவரின் அல்லது சாட்டுதல் பெறுபவரின் பெயருடனும் சேர்த்து, பதிதல் வேண்டுமென்பதுடன், எவ்வாளினால் அறிவித்தல் கொடுக்கப்பட்டதோ அவ்வாளின் அல்லது கைமாற்றம் பெறுபவரின் அல்லது சாட்டுதல் பெறுபவரின் வேண்டுகோளின்மீது, அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டமைபற்றி எழுத்திலான ஏற்றுக்கொள்ளலை அறிவித்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் ஏற்றுக்கொள்ளுதலானது, அத்தகைய ஏற்றுக் கொள்ளுதல் எந்த அறிவித்தல் தொடர்பானதோ, அந்த அறிவித்தலை அத்தகைய காப்புறுதியாளர் உரிய முறையில் பெற்றுள்ளாரென்பது பற்றிக் காப்புறுதியாளருக்கெதிரான முடிவான சான்றாதல் வேண்டும்.

(5) கைமாற்றத்தின் அல்லது சாட்டுதலின் நியதி நிபந்தனைகளுக்கமைய, காப்புறுதியாளர் (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து, அந்த அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்பட்டகைமாற்றம் பெறுபவரை அல்லது சாட்டுதல் பெறுபவரை காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் நன்மை பெறுவதற்கு உரித்துள்ள ஒரே ஆளாக ஏற்றங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள், கைமாற்றல் அல்லது சாட்டுதல் தேதியில் கைமாற்றம் செய்பவர் அல்லது சாட்டுதல் செய்பவர் அமைந்தவராகவிருந்த எல்லாப் பொறுப்புக்களும் ஒப்புரவுகளுக்கும் அமைந்தவராகவிருத்தலும் வேண்டும்; அத்துடன் கைமாற்றம் செய்பவரின் அல்லது சாட்டுதல் செய்பவரின் சம்மதத்தைப் பெறாமல் அல்லது எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கான திறத்தவராக அவரைச் சேர்க்காமல் காப்புறுதிப்பத்திரம் தொடர்பான அத்தகைய வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(6) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட ஒரு சாட்டுதலின் கீழ் அல்லது கைமாற்றத்தின் கீழ் நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரத்தின் சாட்டுதல் பெறுநருக்குள்ள அல்லது கைமாற்றம் பெறுபவருக்குள்ள எவையேனும் உரிமைகளும் பரிகாரங்களும் இப்பிரிவின் ஏற்பாடுகளினால் பாதிக்கப்படலாகாது.

(7) ஏதேனும் சட்டத்தில் அல்லது சட்டவலுவைக் கொண்ட வழக்காறில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எவ்வாளின் ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதோ அவ்வாளின் ஆயுட் காலத்தின்போது குறித்துரைக்கப்பட்ட சம்பவமொன்று ஏற்படுவதன்மீது அக்கறையானது இன்னோராளைச் சென்றடைதல் வேண்டுமென்ற நிபந்தனையுடன் செய்யப்பட்டதும் ஆளொருவருக்குச் சாதகமானதுமான சாட்டுதல் ஒன்றும், பல்லெண்ணிக்கையினரான ஆட்களுக்குப்பின் உயிரோடிருப்பவருக்கு அல்லது உயிரோடிருப்பவர்களுக்குச் சாதகமான சாட்டுதல் ஒன்றும் செல்லுபடியானவையாதல் வேண்டும்.

40. (1) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரத்தின் நியதிகளின்படி, காப்புறுதிப் பத்திரமானது உயிரோடிருப்பதன்மேல் நிர்ணயிக்கப்பட்டவொரு தேதியன்று அல்லது அத்தகைய ஆளின் இறப்பின்மீது முதிர்வடையவிருக்குமிடத்தும் காப்புறுதிப் பத்திரமானது நிர்ணயிக்கப்பட்டவொரு காலத்துக்கு ஒருசீரான வீதத்தில் அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அல்லது அத்தகைய நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுறுமுன்னர் இறப்பு ஏற்படுமிடத்து அத்தகைய இறப்புத் தேதிவரை கட்டுப்பணக் கொடுப்பனவுக்கு அமைந்ததாகவுள்ளவிடத்தும், அத்துடன் எல்லாக் கட்டுப்பணங்களும் அடுத்தடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்டுள்ளவிடத்தும், காப்புறுதிப் பத்திரமானது மீள் ஒப்புடைப்புப் பெறுமதியொன்றைப் பெறுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் முரணான ஏதேனும் ஒப்பந்தத்தில் எது எவ்வாறிருப்பினும் மேலதிகக் கட்டுப்பணத்தை கொடுப்பனவு செய்யாமை காரணமாகக் காலம் கடந்து போதலுமாகாது ; ஆனால் அத்தகைய கொடுப்பனவு செய்யாமையைப் பொருட்படுத்தாது, அதன் செலுத்தப்பட்ட பெறுமதியின் அளவுக்கு வலுவில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக மீள் ஒப்படைப்புப் பெறுமதிகளையும் செலுத்தப்பட்ட பெறுமதிகளையும் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய முறை விலை மதிப்பீட்டாளர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) காப்புறுதியாளரொருவருக்கு வருமதியாகவுள்ள கடனொன்று, காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரத்தினால் பிணைப் பொறுப்பளிக்கப்படுமிடத்தும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் காப்புறுதிப் பத்திரமானது, அதன் செலுத்தப்பட்ட பெறுமதியின் அளவுக்கு உயிர்ப்புடையதாக வைத்திருக்கப்படுமிடத்தும், காப்புறுதியாளர் –

(அ) அக்கட்டளை அவ்வாறு உயிர்ப்புடன் வைத்திருக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரத்தினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடனொன்றாகக் கருதலாமென்பதுடன் அதன்மேல் அவ்வாறு உயிர்ப்புடன் வைத்திருக்கப்பட்ட காப்புறுதிப்பத்திரம் அக்கடனுக்கான பிணைப் பொறுப்பொன்றாகவிருத்தலும் வேண்டும். ; அல்லது

(ஆ) எந்தத் தொகையின் தற்போதைய பெறுமதி கடன் தொகைக்குச் சமமாகவுள்ளதோ அந்தத் தொகையினால் அத்தகைய செலுத்தப்பட்ட பெறுமதித் தொகையைக் குறைக்கலாமென்பதுடன், அதன்மேல் அக்கடனானது காப்புறுதியாளருக்கு வருமதியானதாக இல்லாதொழிதலும் வேண்டும்.

3. (அ) காப்புறுதி செய்யப்பட்ட பணத்தொகை எழாதிருக்கக்கூடிய எதிர்பாராச் சம்பவமொன்று ஏற்படுவதன் மீது மட்டுமே செலுத்தப்படற்பாலதாகவிருக்கின்ற ;

(ஆ) காப்புறுதிப் பத்திரத்தின் செலுத்தப்பட்ட பெறுமதி காலத்துக்குக் காலம் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய தொகையிலும் குறைவானதாகவிருக்கின்ற ;

(இ) கட்டுப்பணக் கொடுப்பனவில் தவறுகை ஏற்பட்ட பின்னர், வேறேதேனும் ஒழுங்குக்குத் திறத்தவர்கள் எழுத்தில் உடன்படுகின்ற; அல்லது

(ஈ) கட்டுப்பணங்கள் கொடுப்பனவு செய்யப்படாமையைப் பொருட்படுத்தாது காப்புறுதிப் பத்திரத்தை வலுவில் வைத்திருப்பதாகக் காப்புறுதிப் பத்திரத்தின் மீள் ஒப்படைப்புப் பெறுமதி ஒப்பந்தத்தின் நியதிகளின்கீழ் தானாகவே பிரயோகிக்கப்படுகின்ற,

ஏதேனும் விடயத்தில் இப்பிரிவு ஏற்புடையதாதலாகாது.

41. நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரமெதுவும், அக்காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுற்றபின்னர் காப்புறுதிப் பத்திரம் எந்த முன்மொழிவின் அல்லது வேறு ஆவணத்தின் விசுவாசத்தின்மீது வழங்கப்பட்டதோ அல்லது மீள வழங்கப்பட்டதோ அந்த முன்மொழிவில் அல்லது வேறு ஆவணத்தில் அல்லது மருத்துவ அலுவலரொருவரின் அல்லது ஆற்றுப்படுத்தப்பட்டவரின் ஏதேனும் அறிக்கையில் அளிக்கப்பட்ட கூற்று, அத்தகையவொரு கூற்று முக்கியமானதொரு கருமத்தின் மீது

அளிக்கப்பட்டதெனவும் அல்லது மறைத்துவைத்ததெனவும் அத்துடன் காப்புறுதிப்பத்திரம் உடையவரினால் அது மோசடியான முறையில் அளிக்கப்பட்டதெனவும், கூற்றை அளித்த நேரத்தில் அக்கூற்று பொய்யானதெனவும் அல்லது வெளிபிடுவதற்கு முக்கியமானதாகவிருந்த நிகழ்வுகளை அது மறைத்து வைத்ததெனவும் காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர் அறிந்திருந்தாரெனவும் எவரேனும் காப்புறுதியாளர் காட்டினாலொழிய, அது செம்மையற்றதாகவிருந்தது அல்லது பொய்யானதாகவிருந்ததது என்ற ஏதுவின்மீது அத்தகைய காப்புறுதியாளரினால் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

ஆமின் இப்பிரிவிலுள்ளதெதுவும், காப்புறுதிப்பத்திர நிபந்தனைகளின் கீழ் காப்புறுதியாளர் வயதுபற்றிய எண்பிப்பைக் கோருவதற்கு அது உரித்துடையதாகவிருப்பின் எந்நேரத்திலும் அவ்வாறு கோருவதனைத் தடுத்தலாகாது என்பதுடன் காப்புறுதி செய்யப்பட்ட ஆளின் வயது முன்மொழிவில் பிழையாகக் கூறப்பட்டதென்ற எண்பிப்பைத் தொடர்ந்து காப்புறுதிப் பத்திரம் எதனதும் நியதிகளில் சரிசெய்யப்பட்டமை காரணமாக மட்டும் அக்காப்புறுதிப் பத்திரம் கேள்விக்குட்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

42. (1) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரம் தொடர்பான ஏதேனும் கட்டுப்பணம், அது செலுத்தப்படற்பாலதான தேதியன்று செலுத்தப்படாதவிடத்து, காப்புறுதிப்பத்திரம் உடையவருக்குக் கிடைக்கக்கூடிய விருப்பத் தெரிவுகள் பற்றிய அறிவித்தல், சொல்லப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதக் காலப்பகுதி முடிவுறு முன்னர், அவ்விருப்பத் தெரிவுகள் காப்புறுதிப் பத்திரத்தில் தரப்பட்டிருந்தாலொழிய காப்புறுதியாளரினால், அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கிடைக்கக்கூடிய விருப்பத் தெரிவுகள் பற்றிய மேலதிக அறிவித்தல், அதன் பின்னர் காப்புறுதிப் பத்திரமுடையவருக்குக் கொடுக்கப்படுதலும் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒவ்வொன்றும், காப்புறுதிப் பத்திரத்திற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முகவரிக்கு அவருக்கு அனுப்பப்படின் அல்லது முகவரியானது அவ்வாறு குறித்துரைக்கப்படாதவிடத்து, கட்டுப்பணம் புதுப்பித்தல் அறிவித்தல் அல்லது பற்றுச்சீட்டு, காப்புறுதிப் பத்திரம், உடையவருக்குக் காப்புறுதியாளரினால் கடைசியாக எம் முகவரிக்கு அனுப்பப்பட்டதோ அம்முகவரிக்கு அனுப்பப்படின், காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு உரியமுறையில் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) காப்புறுதியாளரொருவருக்கு அதன்சார்பில் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, காப்புறுதியாளர், காப்புறுதிப் பத்திரம் உடையவருக்கு அல்லது அவரது சட்ட பிரதிநிதிக்கு அல்லது காப்புறுதிப்பத்திரத்தின் ஒரு சாட்டுதல் பெறுபவருக்கு, காப்புறுதிப் பத்திரத்துக்கான முன்மொழிவினதும் முன்மொழிபவரினால் மருத்துவ அலுவலருக்கு அளிக்கப்பட்ட தனிப்பட்ட கூற்றினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை, அவற்றின் பிரதிகள் காப்புறுதிப் பத்திரத்தோடு இணைக்கப்பட்டிருந்தாலொழிய வழங்குதல் வேண்டும்.

43. (1) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய காப்புறுதிப் பத்திரத்தை உடையவர், அக்காப்புறுதிப் பத்திரத்தைப் பயனுறுத்தும்போது அல்லது கொடுப்பனவுக்காக அக்காப்புறுதிப் பத்திரம் முதிர்வடையமுன்னர் எந்நேரத்திலும் காப்புறுதிப் பத்திரத்தினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட பணம் அவர் இறக்கும் பட்சத்தில் எவ்வாளுக்கு அல்லது எவ்வாட்களுக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அவ்வாளை அல்லது அவ்வாட்களைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

ஆமின், நியமத்தர் எவரும் பராயமடையாதவராக இருக்குமிடத்து, நியமத்தர் பராயமடையாதவராக இருக்கும்போது காப்புறுதிப் பத்திரமுடையவர் இறக்கும் பட்சத்தில் காப்புறுதிப் பத்திரத்தினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட பணத்தைப் பெறக்கூடியவரும் பராயமடையாதவரின் சார்பிலானவருமான எவரேனுமாளை விதித்துரைக்கப்பட்ட முறையில் நியமிப்பது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான பெயர் நியமனம் ஒன்று, அது காப்புறுதிப் பத்திரத்தின் உரையிலேயே சேர்க்கப்பட்டிருந்தாலொழிய, காப்புறுதிப் பத்திரத்தின்மீதான புறக்குறிப்பொன்றின் மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய புறக்குறிப்பானது எழுத்திலான அறிவித்தல் மூலம் காப்புறுதியாளருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும். அக்காப்புறுதிப் பத்திரம் தொடர்பான பதிவேட்டில் அல்லது இடாப்பில் அத்தகைய புறக்குறிப்பை அவர் பதிவு செய்தல் வேண்டும். அத்தகைய ஏதேனும் பெயர், நியமனம் காப்புறுதிப் பத்திரம் கொடுப்பனவுக்காக முதிர்வடையுமுன்னர், எந்நேரத்திலும், விடயத்திற்கேற்ப இன்னுமொரு புறக்குறிப்பினால் அல்லது காப்புறுதிப் பத்திரம் உடையவரின் இறுதி விருப்பாவணத்தினால் இல்லாதாக்கப்படலாம். அல்லது மாற்றப்படலாம்; அத்துடன் அத்தகைய ஏதேனும் இல்லாதாக்குகை அல்லது மாற்றம்பற்றிய எழுத்திலான அறிவித்தல் காப்புறுதிப்பத்திரம் உடையவரினால் காப்புறுதியாளருக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் ஒழிய, காப்புறுதிப் பத்திர உரையில் கூறப்பட்ட

அல்லது காப்புறுதியாளரின் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட நியமத்தர் ஒருவருக்கு அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதும், காப்புறுதிப் பத்திரத்தின் கீழானதுமான ஏதேனும் கொடுப்பனவுக்குக் காப்புறுதியாளர் பொறுப்புடையவராதலாகாது.

(3) காப்புறுதியாளர், பெயர் நியமனமொன்றைப் பதிவு செய்தமை பற்றிய அல்லது அதன் ஏதேனும் இல்லாதாக்குகை அல்லது மாற்றம் பற்றிய எழுத்திலான ஏற்றுக்கொள்ளுதலொன்றை காப்புறுதிப் பத்திரம் உடையவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(4) முப்பத்தொன்பதாம் பிரிவுக்கிணங்கச் செய்யப்பட்ட காப்புறுதிப் பத்திரமொன்றின் கைமாற்றம் அல்லது சாட்டுதல் ஒன்று பெயர் நியமனமொன்றை இல்லாதாக்குகின்ற பயனைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

ஆயின், காப்புறுதிப் பத்திரமொன்று காப்புறுதியாளருக்குச் சாட்டுதல் செய்யப்பட்ட நேரத்தில், காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியினுள் ஒரு காப்புறுதிப் பத்திரத்தின் பிணைப்பொறுப்பின் மேல் வழங்கப்பட்ட கடனொன்றின் பிரதிபயனாக அல்லது கடன் திருப்பிக்கொடுக்கப்பட்டதன் மீதான மீள்சாட்டுகையின் பிரதிபயனாகக் காப்புறுதிப் பத்திரத்தின் மீதான அபாயத்தைத் தாங்குகின்ற அக்காப்புறுதியாளருக்கு அக்காப்புறுதிப் பத்திரம் சாட்டுதல் செய்யப்படுதலானது, பெயர் நியமனமொன்றில் இல்லாதாக்குகையைப் பயனுறுத்தலாகாது. ஆனால் காப்புறுதிப் பத்திரத்தில் காப்புறுதியாளருக்குள்ள அக்கறையின் அந்த அளவுக்கு மட்டுமே நியமத்தரின் உரிமைகளைப் பாதித்தல் வேண்டும்.

(5) எவ்வாளின் ஆயுட் காப்புறுதி செய்யப்பட்டதோ அவ்வாளின் ஆயுட் காலத்தின்போது காப்புறுதிப் பத்திரமானது கொடுப்பனவுக்காக முதிர்வடையுமிடத்து அல்லது நியமத்தர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர்கள் இருப்பின் எல்லா நியமத்தர்களும் காப்புறுதிப் பத்திரமானது கொடுப்பனவுக்காக முதிர்வடையுமுன்னர் இறக்குமிடத்து, காப்புறுதிப்பத்திரத்தினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட தொகை, விடயத்துக்கேற்ப, காப்புறுதிப் பத்திரம் உடையவருக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்கு அல்லது சட்டப் பிரதிநிதிகளுக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(6) நியமத்தர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர்கள் இருப்பின் அத்தகைய நியமத்தர்களுள் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர், எவ்வாளின் ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டதோ அவ்வாளுக்குப் பின்னர் உயிரோடிருக்குமிடத்து, காப்புறுதிப் பத்திரத்தினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட பணத்தொகை அத்தகைய உயிரோடிருப்பவருக்கு அல்லது உயிரோடிருப்பவர்களுக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

44. நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற காப்புறுதியாளர் எவரும், பங்குதாரர்களுக்கான ஏதேனும் பங்கிலாபத்தை அல்லது அதன் காப்புறுதிப் பத்திரம் உடையோருக்கான ஏதேனும் மிகையூதியத்தை வெளிப்படுத்தும் அல்லது செலுத்தும் நோக்கத்துக்காக, அல்லது கணக்கின் மீது எவையேனும் கடன்தொகுதிப்பத்திரங்களை, கடன்களை அல்லது முற்பணங்களைச் சேவையிலான ஏதேனும் கொடுப்பனவாகச் செலுத்தும் நோக்கத்துக்காக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நீண்ட காலக் காப்புறுதி நிதியத்தின் அல்லது காப்புறுதித் தொழிலின் அத்தகைய வேறு வகுப்பினது நிதிகளின் ஏதேனும் பாகத்தை, காப்புறுதியாளரின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் விலைமதிப்பீட்டுக் கணிப்பீட்டின் விளைவாக 48ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொழிப்பின் பாகமாகச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விலைமதிப்பீட்டு ஐந்தொகையில் காட்டப்பட்ட மேன்மிகையொன்று தவிர, பயன்படுத்தலாகாது; அத்துடன் அத்தகைய மேன்மிகை ஏதேனும் ஒதுக்கு நிதியத்திலிருந்தான உதவு தொகைகளினால் அல்லது வேறு வகையாக மேற்கூறப்பட்ட விலைமதிப்பீட்டுத் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் நீண்டகாலத் தொழிலுக்கு ஏற்புடைத்தான அரசிறைக் கணக்கின்மூலம் அத்தகைய உதவுதொகைகள் அரசிறையாகக் கொண்டுவரப்பட்டிருந்தாலொழியவும், இச்சட்டத்தின் 49ஆம் பிரிவின் கீழ் எம்மேன்மிகைகள் தொடர்பில் விபரத்திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவோ அந்த மேன்மிகைகளிலிருந்தும் விலை மதிப்பீட்டின் மூலம் வெளிவிடப்பட்ட இதையொத்த மேன்மிகைகளிலிருந்துமான கைமாற்றங்களினால் மட்டுமே ஒதுக்கு நிதியம் அமைக்கப்படும்போது தவிரவும், அதிகரிக்கப்படுதலாகாது.

45. இச்சட்டத்தில் முரணாக அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், கடைசியாக முற்போந்த விலைமதிப்பீட்டில் செய்யப்பட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரின் விதப்புரையின் மீது, இடைவிலைமதிப்பீட்டுக் காலப்பகுதியின்போது இறப்புக்காரணமாக அல்லது வேறு வகையாக அவர்களின் காப்புறுதிப் பத்திரங்கள் கொடுப்பனவுக்காக முதிர்வடைகின்ற நீண்டகாலத் தொழிற் காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்போருக்கு இடைக்கால மிகையூதியத்தை அல்லது மிகையூதியங்களை வெளிப்படுத்துவதற்குக் காப்புறுதியாளரொருவர் சுதந்திரமுடையவராதல் வேண்டும்.

46. நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் விலைமதிப்பீட்டாளரொருவரை நிரந்தரமானவோர் அடிப்படையில் தொழிலுக்கமர்த்துதல் அல்லது வைத்திருத்தல் வேண்டும்.

## பாகம் V

### கணக்குகளும் சோதனையும் நுண்ணாய்வும்

47. (1) அதன் சார்பில் ஆக்கப்படும் விதிகளின் மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் காப்புறுதியாளரொருவர் அதன் கணக்குகளைத் தயாரித்துப் பேணுதல் வேண்டும்.

(2) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், சபையினால் வழங்கப்படவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர்கள் நிரலிலிருந்தும் அதனுள்ளிருந்தும் தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வாளரொருவரினால் அதன் ஆண்டுக் கணக்குகளைக் கணக்காய்வு செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரதியொன்றை, சபை தீர்மானிக்கக்கூடியவாறு நிதியாண்டு முடிந்த பின்னர் அத்தகைய காலப்பகுதியினுள் சபையிடம் சமர்ப்பித்தலும் வேண்டும். காப்புறுதியாளரின் கணக்கீட்டுப் பதிவேடுகள், காப்புறுதியாளரின் நிதிநிலைமையினது உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும் வகையில் அதன்சார்பில் சபையினால் ஆக்கப்படும் விதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட முறையில் பேணப்பட்டுள்ளனவாவென்பதைக் கணக்காய்வாளர் தமது அறிக்கையில் கூறுதல் வேண்டும்.

(3) சபையானது, கணக்காய்வாளரின் அறிக்கையைப் பெற்றதன்மேல், பின்வருவனவற்றைச் சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளரைக் கோரலாம் –

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் படிவம் அத்துடன் அதன் சாராம்சங்கள் தொடர்பான தகவல் ;அத்துடன்

(ஆ) அவசியமானதெனச் சபை கருதக்கூடியவாறான கணக்காய்வுகள் தொடர்புபட்ட வேறேதேனும் மேலதிக தகவல்.

48. (1) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், காப்புறுதியாளரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற எல்லா நீண்டகாலக் காப்புறுதித் தொழில் தொடர்பிலும், அத்தகைய நீண்டகாலக் காப்புறுதித் தொழிலின் நிதி நிலைமைபற்றி ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், அத்தொழில் தொடர்பில் அதன் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் விலை மதிப்பீடு உட்பட, விலை மதிப்பீட்டாளரொருவரினால் நுண்ணாய்வொன்றைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், சபைதீர்மானிக்கப்படக் கூடியவாறாக நிதியாண்டு முடிந்த பின்னர் அத்தகைய காலப்பகுதியினுள் அதன் சார்பில் சபையினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்கப் பொழிப்பொன்றைத் தயாரித்தலும் வேண்டும். காப்புறுதியாளரின் ஒதுக்குகள் அதன் காப்புறுதிப்பத்திரம் உடையவரின் எல்லா நடப்பு மற்றும் எதிர்பாராப் பொறுப்புக்களையும் ஈடுசெய்வதற்குப் போதுமானவையாக உள்ளனவாவென்பதை விலைமதிப்பீட்டாளர் அத்தாட்சிப்படுத்தி மேன்மிகையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், காப்புறுதிப் பத்திரம் உடையோருக்குச் செலுத்தப்படக்கூடிய மிகையூதியத் தொகையை விதந்துரைத்தலும் வேண்டும். காப்புறுதியாளரின் பங்குதாரர்களுக்கும் கைமாற்றப்படுவதற்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ள மேன்மிகையையும் விலைமதிப்பீட்டாளர் விதந்துரைத்தல் வேண்டும்.

(2) பொழிப்பொன்றைத் தயாரித்தல் தொடர்பாக (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், மேன்மிகையைப் பகிர்ந்தளிக்கும் நோக்குடன் காப்புறுதியாளரின் நிதிநிலைமை பற்றிய நுண்ணாய்வொன்று அல்லது அதன் பெறுபேறுகள் பகிரங்கமானதாக்கப்படுகின்ற நுண்ணாய்வொன்று வேறெந்த நேரத்திலும் செய்யப்படும் போதெல்லாம் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் பொழிப்பொன்றின் பிரதியொன்று சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையானது, விலைமதிப்பீட்டுக் கணிப்பீடு தொடர்பாக ஏதேனும் கூடுதலான தகவலையும் எவையேனும் ஆவணங்களையும் கோருவதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவினால் அல்லது (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பொழிப்புடனும் ஒன்றில் உள்ளபடியான அல்லது எதிர்பாராப் பொறுப்பொன்று எந்தக் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உள்ளதோ அந்தக் காப்புறுதிப் பத்திரம் ஒவ்வொன்றும் பற்றிய முழுமையானவையும் செம்மையானவையுமான விபரங்கள், நுண்ணாய்வின் நோக்கங்களுக்காக விலை மதிப்பீட்டாளருக்குக் கொடுத்துதவப்பட்டுள்ளனவென காப்புறுதியாளரின் பணிப்பாளரினால் அல்லது முதன்மை அலுவலரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவினால் அல்லது (2)ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பொழிப்புடனும், அத்தகைய பொழிப்பின் நோக்கங்களுக்காக, காப்புறுதியாளரின் கணக்குகள் எத்தேதிவரை தயாரிக்கப்படுகின்றனவோ அத்தேதியில் உள்ளதான நீண்டகாலக் காப்புறுதித் தொழில் பற்றிய கூற்றொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.

(6) கணக்காண்டின் கடைசித் தேதியல்லாத ஒரு தேதியில் காப்புறுதியாளரொருவரின் நிதிநிலைமை பற்றிய நுண்ணாய்வொன்று செய்யப்படுமிடத்து, முற்போந்த கணக்காண்டின் முடிவுக்குப் பின்னர் கழிகின்ற காலப்பகுதிக்கான கணக்குகளும் நுண்ணாய்வு செய்யப்படும் தேதியன்றுள்ளவாறான ஐந்தொகையையும் இச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

49. காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைச் சபைக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் –

(அ) காப்புறுதியாளரின் தொழில் தொடர்பானதும், கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அல்லது காப்புறுதியாளரின் காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்போருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிக்கை அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டதனை உடனடுத்து அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று; அத்துடன்

(ஆ) அதன் சார்பில் ஆக்கப்படும் விதிகளின் மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டுள்ள காலாண்டு விபரத்திரட்டு.

50. (1) காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் காலத்துக்குக் காலம், இலங்கையில் அத்தகைய காப்புறுதியாளரினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வகுப்பினதான காப்புறுதித் தொழில் தொடர்பான அதன் மீள் காப்புறுதி உடன்பாடுகள் மீளாயப்பட்ட உடன்பாடுகள் உட்பட ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குகள் என்பவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சபைக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் ;

ஆயின் நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலுள்ளவாறான அத்தகைய மீள் காப்புறுதி உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குகள் என்பவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குக் கொடுத்துதவப்பட்ட எல்லா மீள்காப்புறுதி உடன்பாடுகளையும், ஒப்பந்தங்களையும், ஒழுங்குவிதிகளையும், அத்தகைய உடன்பாடு ஒப்பந்தம் அல்லது ஒழுங்கு, காப்புறுதியாளரின் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் நலனுக்கு அல்லது காப்புறுதித் தொழில் அபிவிருத்திக்கு அல்லது தேசிய நலனுக்கு எவ்வகையிலேனும் பங்கம் விளைவிக்கின்றதாவென்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, மீளாய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். காப்புறுதியாளர்களினதும் பொதுமக்களினதும் நலன்கள் போதியளவு பாதுகாக்கப்படவில்லையெனச் சபை கருதுமிடத்து, சபையானது, காப்புறுதித் தொழிலின் அபிவிருத்திக்கு அவசியமென அது கருதுகின்ற எவையேனும் திருத்தங்களை விதந்துரைப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) திருத்தங்களுக்கான எவையேனும் விதப்புரைகள் செய்யப்படுமிடத்து விடயத்துக்கேற்ப அத்தகைய உடன்பாடு, ஒப்பந்தம் அல்லது ஒழுங்கு புதுப்பித்தலுக்கு வரும்போது அத்தகைய உடன்பாட்டுக்கு, ஒப்பந்தத்துக்கு அல்லது ஒழுங்குக்கு அவசியமான திருத்தங்களைச் செய்தல் காப்புறுதியாளரின் கடமையாதல் வேண்டும்.

51. (1) இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சபைக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டு செம்மையற்றது அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில் குறைபாடுள்ளது என அதற்குத் தோன்றின் –

(அ) அத்தகைய விபரத்திரட்டை சரி செய்வதற்கு அல்லது குறைநிரப்புவதற்கு அவசியமென அது கருதக் கூடியவாறாக சபை அவ்வாறு பணித்தால் அத்தகைய கணக்காய்வாளரினால் அல்லது விலைமதிப்பீட்டாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய மேலதிகத் தகவலைக் காப்புறுதியாளரிடமிருந்து தேவைப்படுத்தலாம் ;

(ஆ) ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை அல்லது வேறு ஆவணங்களைக் காப்புறுதியாளரின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது பிரதான தொழிலிடத்தில் அதன் பரிசோதனைக்காகச் சமர்ப்பிக்கும்படி அல்லது அந் நோக்கத்துக்காகக் காப்புறுதியாளருக்குச் சேர்ப்பிக்கப்படும் அறிவித்தலொன்றில் அது குறித்துரைக்கக் கூடிய ஏதேனும் கூற்றை வழங்கும்படி காப்புறுதியாளரைக் கோரலாம் ;

(இ) விபரத் திரட்டுத் தொடர்பாகச் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது காப்புறுதியாளரின் எவரேனும் அலுவலரை விசாரணை செய்யலாம் ;அல்லது

(ஈ) சபையினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய மேலதிகத் தகவல், அத்தகைய மேலதிகத் தகவலைக் கோருகின்ற தேவைப்பாடு காப்புறுதியாளருக்கு ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலம் முடிவுறுமுன்னர் அல்லது தேவைப்பாட்டில் சபை குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய மேலதிகக் காலம் முடிவுறுமுன்னர் கொடுத்துதவப்பட்டலொழிய அத்தகைய விபரத்திரட்டை ஏற்க மறுக்கலாம்.

(2) ஒரு மாவட்ட நீதிமன்றம், காப்புறுதியாளரொருவரின் விண்ணப்பத்தின் மேலும் சபையை விசாரித்த பின்னரும், சபையின் நடவடிக்கை சூழ்நிலைகளில் நியாயமற்றதாக இருந்ததெனக் காப்பறுதியாளர் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தினால், சபை ஏற்க மறுத்துள்ள ஏதேனும் விபரத்திரட்டை ஏற்குமாறு பணிக்கலாம் ;

ஆயின், இவ்வுட்பிரிவின் கீழான விண்ணப்பமெதுவும், சபையானது கட்டளையை ஆக்கிய அல்லது விபரத்திரட்டை ஏற்க மறுத்த தேதிக்குப் பின்னர் இரண்டு மாதங்கள் முடிவுறுமுன்னர் அது செய்யப்பட்டாலொழிய மாவட்ட நீதிமன்றத்தினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தில் மாவட்ட நீதிமன்றத்தின் முடிவானது இறுதியானதாதல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீடு எதற்கும் அமைவாக இருத்தலுமாகாது.

(4) இப்பிரிவின் கீழ் மாவட்ட நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்று, சுருக்கமுறை நடவடிக்கை மூலமான மனுமூலம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நடவடிக்கை தொடர்பில் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் அது தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

52. (1) நாற்பத்தெட்டாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட புலனாய்வொன்று அல்லது மதிப்பீடொன்று, மதிப்பீடு செய்வதில் பிழையான, அடிப்படையொன்று பின்பற்றப்பட்டது. எனச் சபைக்குத் தோற்றுகின்ற காரணத்தினால் காப்புறுதியாளரின் அலுவல்களின் நிலைமையை சரியாகக் காட்டவில்லை எனச் சபைக்குத் தோன்றினால், சபை, காப்புறுதியாளருக்கு நியாயமான அறிவித்தல் கொடுத்த பின்னரும் அவர் தம்பக்க வாதத்தை எடுத்துரைப்பதற்குச் சந்தர்ப்பமொன்று வழங்கிய பின்னரும், அறிவித்தலில் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று புலனாய்வொன்றையும் மதிப்பீடு ஒன்றையும் காப்புறுதியாளரின் செலவில், அந்நோக்கத்திற்கெனக் காப்புறுதியாளரினால் நியமிக்கப்பட்டுச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவரினால் செய்விக்கலாம்.அத்துடன் காப்புறுதியாளர் அத்தகைய காப்பீட்டுக் கணிப்பாளரின் பார்வைக்கு சபை குறித்துரைக்கக் கூடியவாறான மூன்று மாதங்களுக்குக் குறையாத அத்தகைய காலப்பகுதிக்குள் புலனாய்வு செய்யும், மதிப்பீடு செய்யும் நோக்கங்களுக்காக அத்தகைய காப்பீட்டுக் கணிப்பாளரினால் தேவைப்படுத்தப்படும் எல்லாப் பத்திரங்களையும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) பொழிப்புகள் தயாரிப்பது தொடர்பில் 48ஆம் பிரிவின் (1)ஆம், (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ் செய்யப்பட வேண்டிய ஏதேனும் புலனாய்வு மற்றும் மதிப்பீடு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். ஆயின் அத்தகைய புலனாய்வு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டதன் விளைவாக தயாரிக்கப்பட்ட பொழிப்பானது சபை குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அத்தகைய தேதிக்கு முன்னர் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

53. காப்புறுதியாளர் எவரினாலும் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டுக்களை, மீள்காப்புறுதி உடன்படிக்கைகளை, ஒப்பந்தங்களை மற்றும் ஒழுங்குகளை பரிசோதனை செய்ததன் மேல், காப்புறுதியாளரினால் 21ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட வைப்பானது அல்லது காப்புறுதியாளரின் காப்புறுதித் தொழில் தொடர்பிலான சொத்துக்களின் அளவானது, அவரினால் செய்யப்பட்ட காப்புறுதித் தொழிலின் அளவு தொடர்பில் மிகமிகக் குறைவாக இருக்கிறதெனச் சபைக்குத் தோன்றுகின்றவிடத்து, சபை காப்புறுதியாளருக்கு தம்பக்க வாதத்தைக் கூறச் சந்தர்ப்பமொன்று அளித்த பின்னர், 21ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம் மற்றும் (5)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் மேலதிக வைப்பொன்றைச் செய்யுமாறு காப்புறுதியாளருக்கு கட்டளையிடலாம் என்பதுடன், 22ஆம் மற்றும் 23ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய மேலதிக வைப்புக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், காப்புறுதியாளர், இலங்கையில் அவருக்குள்ள சொத்துக்கள், அத்தகைய காப்புறுதியாளரினால் இலங்கையில் செய்யப்பட்ட காப்புறுதித் தொழில் தொடர்பில் வெளிநிலுவையாக இருக்கும் உரிமைக் கோரிக்கைகளையும் காலாவதியாகாமல் இருக்கும் இடர்களையும் சமாளிப்பதற்குப் போதுமானவையாக இருக்கின்றன எனச் சபையைத் திருப்தி செய்யும் விதத்தில் தாபிக்கின்றவிடத்து, அத்தகைய மேலதிக வைப்பானது 21 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வைப்புடன் சேர்த்து, 26ஆம் பிரிவின் கீழ் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறான கடனிறுப்பு விளிம்பை விஞ்சுதலாகாது.

54. (1) சபையானது -

(அ) காப்புறுதியாளர் ஒருவரின் காப்புறுதிப் பத்திரம் உடையோர்களின் நலனுக்கு ஆபத்து உள்ளதென; அல்லது

(ஆ) காப்புறுதியாளர் எவரும், தமது கடப்பாடுகளைத் திருப்திசெய்ய இயலாமல் இருக்கிறார் அல்லது இச் சட்டத்தின் ஏற்பாடுகளில் எவற்றுடனும் இணங்கியொழுகுவதில் தவறுகை புரிந்துள்ளாரென,

நம்புவதற்குக் காரணம் இருக்கின்றவிடத்து, சபையானது காப்புறுதியாளருக்கு நியாயமான அறிவித்தல் கொடுத்த பின்னரும், அவர் தம்பக்க வாதத்தைக் கூறச் சந்தர்ப்பம் ஒன்று அளித்த பின்னரும், கணக்காய்வாளர் ஒருவரினால் அல்லது காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவரினால் அல்லது ஒரே நேரத்தில் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் மற்றும் காப்பீட்டுக் கணிப்பாளர் ஆகிய இருவரினாலும் அல்லது முதலில் கணக்காய்வாளரினால் மட்டும் அல்லது காப்பீட்டுக் கணிப்பாளரினால் மட்டும் அத்துடன் அதன்பின்னர் காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவரினால் அல்லது கண்காய்வாளரினால் சபையின் சார்பில் காப்புறுதியாளரின் அலுவல்கள் புலனாய்வு செய்யப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம் அல்லது தாமே அத்தகைய புலனாய்வைச் செய்யலாம்.

ஆயின், சபையினால் அந்நோக்கத்துக்கென நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் அல்லது காப்பீட்டுக் கணிப்பாளர் ஒருவர் காப்புறுதியாளரின் ஊழியத்தில் இருக்கும் ஒரு கணக்காய்வாளராகவோ அல்லது காப்பீட்டுக் கணிப்பாளராகவோ இருத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான புலனாய்வு எதற்குமான செலவுகள் காப்புறுதியாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் புலனாய்வொன்றை நிறைவேற்றுகையில், சபையானது எழுத்திலான அறிவித்தல் மூலம் -

(அ) காப்புறுதியாளர் அல்லது காப்புறுதியாளரின் சார்பில் கணக்குப் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைக் கட்டுக்காவலில் வைத்திருக்கும் எவரேனும் வேறு ஆளை ;

(ஆ) காப்புறுதியாளரின் பணிப்பாளராக, காப்பீட்டுக் கணிப்பாளராக, கணக்காய்வாளராக அலுவலர் அல்லது சேவையாளராக அல்லது முகவர் ஒருவராக இருக்கின்ற அல்லது எந்நேரத்திலும் அவ்வாறு இருந்திருக்கின்ற அல்லது செயலாற்றியிருக்கின்ற ஆளெவரையும் ;அல்லது

(இ) காப்புறுதியாளரின் கடந்தகால அல்லது தற்போதைய உறுப்பினர் எவரையும் அல்லது காப்புறுதிப் பத்திரம் உடைய ஏவரையும்,

சபையினால் சோதனை செய்யப்படுவதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பிரதி எடுக்கப்படுவதற்கும், அத்தகைய தொழிலின் நோக்கங்களுக்காக காப்புறுதியாளரினால் வைத்திருக்கப்படும் சொத்துக்களின் உரித்துக்குச் சான்றாக இருக்கும் ஆவணங்கள் உட்பட, காப்புறுதியாளரின் எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தலாம் ;

ஆயின், இந்த உட்பிரிவின் கீழான தேவைப்பாடொன்றானது, அத்தகைய ஏதேனும் தொழிலின் நோக்கங்களுக்காக, காப்புறுதியாளரினால் வைத்திருக்கப்படும் சொத்துக்களின் உரித்துக்குச் சான்றாக இருப்பவையும், காப்புறுதியாளரினால் கொண்டு நடாத்தப்படுகின்றதுமான தொழில் சம்பந்தமான ஆவணங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் புலனாய்வொன்றைச் செய்கையில் சபையானது, (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய ஆளெவரையும் அதற்கு முன்னர்தோன்றி காப்புறுதியாளரின் தொழில் தொடர்பில் சத்தியத்தின்மீது விசாரிக்கப்படுவதற்கு தேவைப்படுத்தலாம்; அத்துடன் இப்பிரிவின் நோக்கத்துக்காக, அது சத்தியத்தை எடுத்தோதுவிக்கலாம்.

(5) தமது கட்டுக்காவலில் உள்ள ஏதேனும் ஆவணத்தை முன்வைக்குமாறு (3)ஆம் அல்லது (4) ஆம் பிரிவுகளின் கீழ் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்வதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆளெவரும் அல்லது சபையினால் அல்லது அதனால் நியமிக்கப்பட்ட ஆளெவரினாலும், சோதனை செய்யப்படுவதற்காகத் தோன்றுவதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு அல்லது அத்தகைய சோதனையின்போது அவரிடம் கேட்கப்படும் வினா எதற்கும் மறுமொழி கூற மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழ் செய்யப்படும் ஏதேனும் புலனாய்வின் பெறுபேறுகள் விடயத்துக்கேற்றவாறு, நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் அல்லது காப்பீட்டுக் கணிப்பாளரினால் எழுத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்துடன் பதிவேட்டின் பிரதிகள் சபைக்கும் காப்புறுதியாளருக்கும் வழங்கப்படுதலும் வேண்டும்.

55. காப்புறுதியாளர், ஒருவர் தொடர்பில் 54ஆம் பிரிவின் கீழ் புலனாய்வு எதுவும் செய்யப்படுகின்றவிடத்து, 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 162ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அச்சட்டத்தில் அப்பிரிவைப் பின்பற்றிச் செய்யப்படும் புலனாய்வொன்றுக்கு அவை ஏற்புடையனவாவதுபோன்று அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காக ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய புலனாய்வுக்கான, மற்றும் அதன் இடைநேர்விளைவான செலவுகள் எல்லாம், காப்புறுதியாளரினால் கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் காப்புறுதியாளரிடமிருந்து வருமதியான மற்ற தனிசுகளைப் பார்க்கிலும் இதற்கு முன்னுரிமை அளிக்கப்படுதலும் வேண்டும்.

56. காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளினால் சபைமூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக விபரத்திரட்டுக்களை அல்லது பொழிப்புக்களை அல்லது திருத்தப்பட்ட அல்லது பதிலீடாக விபரத்திரட்டுக்களை அல்லது பொழிப்புக்களை சபைக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

57. (1) காப்புறுதியாளர் எவரினதும் அலுவல்கள் பொதுமக்களுக்கு அல்லது தேசிய நலனுக்கு அல்லது காப்புறுதிப் பத்திரம் உடையவர்களின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் அல்லது காப்புறுதியாளரின் நலனுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில், கொண்டு நடாத்தப்படுகின்றன என சபை திருப்திப்படுகின்றவிடத்து, அவசியமானதென சபை கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை காப்புறுதியாளருக்கு அது வழங்கலாம்; அத்துடன் குறிப்பாக காப்புறுதியாளரை பின்வருவனவற்றைச் செய்யத் தேவைப்படுத்தலாம் –

(அ) நிலைஉறுதியான காப்புறுதிக் கோட்பாடுகளுக்கிணங்க அதனலுவலைக் கொண்டு நடாத்துவதற்கு அதை இயலச் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு அல்லது அத்தகைய முகாமைத்துவ ஆளணியினரை எடுப்பதற்கு ;

(ஆ) அதனோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்குத் தகுதியற்றவரென சபை கருதுகின்ற அதன் பணிப்பாளர்களில் எவரையும் அல்லது ஆள் எவரையும் அகற்றுவதற்கு ;

(இ) அதன் சொத்துக்களின் நிலைமை தொடர்பில் அல்லது சொத்துக்கள் எவற்றையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ;

(ஈ) சட்ட விரோதமாக அல்லது தவறான முறையில் செலுத்தப்பட்டதென சபைக்குத் தோன்றுகின்ற பணத்தொகைகள் காப்புறுதியாளரினால் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு; அத்துடன்

(உ) மீள் காப்புறுதி தொடர்பில் அவசியமானவை என சபை கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்வதற்கு.

(2) சபை அதற்கு பிரதிநிதித்துவம் செய்யப்பட்டதன் மேல் அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மேல் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளைத் திரிபுபடுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம். அத்துடன் அவ்வாறு செய்கையில் தகுந்ததென அது கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளை விதிக்கலாம்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற காப்புறுதியாளர்எவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் காப்புறுதியாளர் ஒருவர் வழங்கப்பட்ட பணிப்பொன்றுடன் தொடர்ந்தும் இணங்கி ஒழுகத்தவறுகின்றவிடத்து சபையினால் குறித்துரைக்கப்பட வேண்டிய காலப்பகுதியொன்றுக்கு வழங்கப்பட்ட பதிவை இடைநிறுத்தம் செய்வதற்கான தத்துவத்தைச்சபை கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், 18ஆம் பிரிவில் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவ்விடைநிறுத்தக் காலப் பகுதியின்போது அத்தகைய காப்புறுதியாளர் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### பிரசித்தம்

58. (1) இச்சட்டத்தின்கீழ் சபைக்குக் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டு ஒவ்வொன்றும் அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சபையின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அந்தரங்கமானதென சபை கருதக் கூடியவாறான அத்தகைய தகவல், தவிர சபை குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரங்களில் சபையின் அங்கீகாரத்துடன் ஆளெவரினாலும் பார்வையிடப்படுவதற்கென அது வைக்கப்படுதல் வேண்டும். அந்தரங்கமானதென சபை அபிப்பிராயப்படுகின்ற தகவல் எதுவும் ஆளெவரும் பார்வையிடுதலுக்கென வைக்கப்படுதலாகாது.

(2) (அந்தரங்கமான தகவல் தவிர) அது சார்பில் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் சபை தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய கட்டணத்தைச் செலுத்தியதன் மேல் ஆளொருவர் ஏதேனும் விபரத்திரட்டின் பிரதியொன்றை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

59. சபைக்குக் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டொன்றின் பிரதியொன்றென சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதெனக் கொள்ளப்படும் ஆவணம் ஒவ்வொன்றும் அவ்விபரத்திரட்டின் பிரதியொன்றெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கும் மூல விபரத்திரட்டுக்கும் இடையில் வேறுபாடு எதுவும் இருக்கிறதென எண்பிக்கப்பட்டாலொழிய அது முழுவிபரத் திரட்டென்றாற்போன்று சான்றில் ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

60. சபையானது ஒவ்வோராண்டும் அமைச்சர் பணிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் காப்புறுதியாளர்களினாலும் தரகர்களினாலும் சபைக்கு இச்சட்டத்தின் கீழ் கொடுத்துதவப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற கணக்குகளின், ஐந்தொகைகளின் கூற்றுக்களின், பொழிப்புக்கள் அத்துடன் வேறு விபரத்திரட்டுகளின் சுருக்கமொன்றை வெளியிடுதல் வேண்டும் ;அத்துடன் அத்தகைய சுருக்கத்துடன் அதன்மீது சபையினால் செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பையும் அத்துடன் அது தொடர்பிலான ஏதேனும் கடிதப் போக்குவரத்தையும் இணைக்கலாம் ;

ஆயின், எவ்வாறாயினும் குறிப்பிலுள்ள அத்தகைய குறிப்பீடு உள்ளடக்கப்படுவதற்கு எதிராக பிரதிநிதித்துவம் செய்வதற்காக காப்புறுதியாளருக்குச் சந்தர்ப்பமொன்று வழங்கப்பட்டிருந்தாலொழிய, எவரேனும் குறிப்பிட்ட காப்புறுதியாளரைப் பாதிக்கின்ற ஏதேனும் விடயம் பற்றி அத்தகைய ஏதேனும் குறிப்பில் குறிப்பீடு எதுவும் செய்யப்படுதலாகாது.

61. காப்புறுதியாளர் ஒருவரால் சமர்ப்பிக்கப்படும் விபரத்திரட்டு ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது அதே படிவத்தில் வெளியிடவும் படலாம் ;

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும் பிரசித்தப்படுத்தும் நோக்கத்துக்காக அத்தகைய விபரத் திரட்டுக்களிலிருந்து உண்மையான செம்மையான பிரித்திடுகையொன்றை வெளியிடுதலில் இருந்து காப்புறுதியாளர் ஒருவரைத் தடை செய்தலாகாது.

## பாகம் VII

### நிருவாகத்திலான முகாமையும் ஒடுக்குதலும்

62. (1) நீண்டகால அடிப்படையில் காப்புறுதித் தொழிலை அத்துடன் அல்லது பொதுக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கின்ற காப்புறுதியாளர் ஒருவர், காப்புறுதிப் பத்திரம் உடையோர்களின் நலன்களுக்கும் பங்கம் விளைவிக்கும் முறையில் செயற்பட்டுள்ளார் அல்லது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என சபைக்கு எந் நேரத்திலும் எத்தன்மையானதுமான எம்மூலத்திலிருந்து கிடைக்கக்கூடியதாகவிருக்கும் தகவலிலிருந்து நம்புவதற்குக் காரணமாகவிருந்தால், தம்பக்க வாதத்தைக் கூறுவதற்கு தகுந்ததென சபை கருதக்கூடியவாறான அத்தகைய சந்தர்ப்பத்தைக் காப்புறுதியாளருக்கு வழங்கிய பின்னர், சபை, அதுபற்றி அமைச்சருக்கு அறிக்கையொன்றைச் செய்யலாம்.

(2) அமைச்சர் அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னர், அவ்வாறு செய்வது அவசியமானதெனவும் சரியானது எனவும் அபிப்பிராயப்பட்டால், சபையின் பணிப்பாளரின் கீழும் மற்றும் கட்டுப்பாட்டின் கீழும் காப்புறுதியாளரின் தொழிலை முகாமை செய்வதற்கு நிருவாகியொருவரை நியமிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் நிருவாகியொருவருக்கு அமைச்சர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய ஊதியம் நிருவாகியினால் முகாமை செய்யப்படும் நிதியிலிருந்து செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலின் முகாமை, (2)ஆம் உட்பிரிவின் கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் அத்தகைய நிருவாகிக்கு உருவாக்கப்படுதல் வேண்டும். அத்துடன் காப்புறுதியாளர் நிருவாகம் செய்யப்படும் காலப்பகுதியின்போது, அத்தகைய தொழில் தொடர்பில் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதில் இருந்து இல்லாதொழித்தல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும் நிருவாகியொருவர் சபையின் அங்கீகாரத்துடன் அல்லாமல் புதிய காப்புறுதிப் பத்திரங்கள் எவற்றையும் வழங்குதலாகாது.

(5) அமைச்சர் நிருவாகியாகச் செய்யப்பட்ட ஆளெவரினதும் நியமனத்தை எந்நேரத்திலும் இல்லாதாக்கி, நிருவாகியாக வேறு ஆள் எவரையும் நியமிக்கலாமென்பதுடன் அதன் பின்னர் முதலில் குறிப்பிடப்பட்ட ஆள் காப்புறுதியாளரின் அலுவல்களை முகாமை செய்யும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(6) விடயத்தின் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு விரும்பத்தக்கதெனச் சபை கருதக் கூடியவாறானஅத்தகைய பணிப்புகளை சபையானது, நிருவகிக்கும் அவருடைய தத்துவங்கள் மற்றும் கடமைகள் தொடர்பில், வழங்கலாம். அத்துடன் நிருவாகி காப்புறுதியாளரின் தொழில் முகாமை தொடர்பிலான அல்லது அத்தகைய முகாமையின்போது எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பிலான அறிவுறுத்தல்களுக்காகச் சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

63. (1) நிருவாகி காப்புறுதியாளரின் தொழிலின் முகாமையை திறமையுடன் கூடியமிகுந்த சிக்கனத்துடன் கொண்டு நடாத்துதல் வேண்டும். அத்துடன் இயலக் கூடியவாறு விரைவாக ஆயுள்காப்புறுதிப் பத்திரங்கள் உடையவர்களின் பொதுவான நலனுக்கு பின்வரும் ஏதுக்களில் எவ்வேதுக்கள், சூழ்நிலைகளில் மிக அனுகூலமாக இருக்கின்றதோ அவ்வேதுக்களைக் கூறும் அறிக்கையொன்றைச் சபையில் கோப்பிடுதல் வேண்டும் ; அவையாவன ;

(அ) அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய நிறுவனமொன்றுக்குத் தொழிலை மாற்றுதல் ;

(ஆ) காப்புறுதியாளரை ஒடுக்குதல் ; அல்லது

(இ) உசிதமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு வழிமுறை,

(2) சபையில் அறிக்கையைக் கோப்பில் இட்டதன் மேல், சபையானது பொதுவாக காப்புறுதிப் பத்திரங்கள் உடையவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தகுந்ததென அது கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அதனால் செய்யப்படும் செயல் எதுவும் காப்புறுதியாளரின் அமைப்புப் புறவிதிகளில் அல்லது அமைப்பு அகவிதிகளில் எது எவ்வாறிருப்பினும், பயனுடையதாதல் வேண்டும்.

64. நிருவாகியொருவர் காப்புறுதியாளர் ஒருவரது அலுவல்களை முகாமை செய்வது தொடர்ந்திருக்கும்போது அவர் அல்லது அவள் எந்நேரத்திலும் காப்புறுதிப் பத்திரங்களை உடையவர்களின் நலனுக்குப் பங்கம் விளைவித்துள்ளதென அல்லது விளைவிக்கின்றதென நிருவாகி திருப்திப்படுகின்ற காப்புறுதியாளருக்கும் எவரேனும் வேறு ஆளுக்குமிடையில் உள்ள காப்புறுதிப் பத்திரம் தவிர்ந்த ஏதேனும் வேறு ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை (ஒன்றில் நிபந்தனையற்ற முறையில் அல்லது விதிப்பதற்குத் தகுந்ததென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய) இல்லாதாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம். அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தைஅல்லது உடன்படிக்கையை இல்லாதாக்கு முன்னர் அல்லது வேறுபடுத்த முன்னர், நிருவாகி, அத்தகைய இல்லாதாக்கல் அல்லது வேறுபடுத்தல் காரணமாகப் பாதிக்கப்படக்கூடிய எல்லா ஆட்களுக்கும் தம்பக்கவாதத்தை எடுத்துக்கூறுவதற்குச் சந்தர்ப்பமொன்று அளித்தல் வேண்டும்.

65. சபையினால் அதன் சார்பில் செய்யப்பட்ட அறிக்கையொன்றின் மேல், நிருவாகியொருவரை நியமிப்பதற்கான நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது என அல்லது ஏதேனும் காரணத்துக்காக அத்தகைய நியமனம் தொடர்ந்திருப்பது விரும்பத்தக்கதல்லவென எந்நேரத்திலும் அமைச்சருக்குத் தோன்றினால், அமைச்சர் நியமனத்தை மீளப்பெறலாம். அத்துடன் அதன்மேல் காப்புறுதியாளரின் தொழிலை முகாமை செய்யும் நிருவாகியின் உரித்தானது விடுவிக்கப்படல் வேண்டும். அந்நியமனம் அமைச்சரால் வேறுவகையில் பணிக்கப்பட்டாலொழிய நிருவாகியின் நியமனத் தேதிக்கு நேர் முன்னரான அதுஎவ்வாளுக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததோ அவ்வாளுக்கு மீண்டும் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

66. அறுபத்து இரண்டாம் பிரிவை அல்லது 65ஆம் பிரிவைப் பின்பற்றி அமைச்சரினால் எடுக்கப்படும் முடிபு எதுவும் இறுதியானதாதல் வேண்டும்.

67. காப்புறுதியாளரின் நிருவாகி, எவரும் எத்தொழிலின் நிருவாகம் நிருவாகியிடம் உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்நிருவாகம் தொடர்பான ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை அல்லது வேறு எவையேனும் ஆவணங்களை நிருவாகியிடம் ஒப்படைக்கத் தவறினால் அல்லது அத்தகைய காப்புறுதியாளரின் ஆதனம் எதனையும் வைத்திருந்தால், அவர் அல்லது அவள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

68. வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலானது சபையின் முன்னங்கீகாரமின்றி தன்னிச்சையாக ஒடுக்கப்படுதலாகாது.

69. (1) மாவட்ட நீதிமன்றமானது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்துக்கிணங்க காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்குமாறு கட்டளையிடலாம். அத்துடன் அதற்கிணங்க அச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) மாவட்ட நீதிமன்றமானது :-

(அ) மூன்றாண்டுகளுக்குக் குறையாமல் வலுவில் இருக்கின்றனவும், முதிர்ச்சியின்மேல் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத மொத்தப் பெறுமதி கொண்டதுமாக இருக்கின்றனவும் அக்காப்புறுதியாளரினால் வழங்கப்பட்டனவுமான நீண்டகாலக் காப்புறுதிப் பத்திரங்களில் ஒரு சதவீதத்துக்குக் குறையாமல் வைத்திருப்பவரினால் அதன்சார்பில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டால் ;அல்லது

(ஆ) அவ்வாறு செய்யுமாறு இத்தால் அதிகாரமளிக்கப்பட்ட சபையானது பின்வரும் எவையேனும் ஏதுக்களின்மீது அதற்கென மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தால், அவையாவன :-

(i) காப்புறுதியாளர் 21ஆம் பிரிவின் அல்லது 26ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடனும், 57ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுடனும் இணங்கியொழுகத் தவறிவிட்டார் என,

(ii) காப்புறுதியாளர் இச் சட்டத்தின் ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறியபின் அத்தகைய தவறுகையை தொடர்ந்து செய்திருக்கின்றார் அல்லது இச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறியதன்பின் அத்தகைய தவறுகை அல்லது மீறுகை பற்றி காப்புறுதியாளர்களுக்குச் சபையினால் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரும் அத்தகைய மீறுகையை மூன்று காலப்பகுதியொன்றுக்குத் தொடர்ந்து செய்திருக்கிறார் என ;

(iii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டுக்களிலிருந்து அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் புலனாய்விலிருந்து கிடைத்த பெறுபேறுகளிலிருந்து காப்புறுதியாளர் கடனிறுக்கவகையற்றவராக இருக்கிறார் எனத் தோன்றினால் ; அல்லது

(iv) காப்புறுதியாளர் தொடர்ந்திருப்பது காப்புறுதிப்பத்திரம் உடையவர்களின் நலனுக்குப் பங்கம் விளைவிப்பதாக இருந்தால் ;

காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்குமாறு கட்டளையிடலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்; செய்யப்பட்ட மனு எதுவும் அற்பத்தனமாக அல்லது அலைக்கழிக்கும் நோக்குடன் செய்யப்பட்டிருக்கிறது எனக் காணப்படுகின்றவிடத்து, மாவட்ட நீதிமன்றமானது மனுவின் விளைவாகவும், அதன் மீதான வழக்கு நடவடிக்கைகள் காரணமாகவும் காப்புறுதியாளரினால் உண்மையாகவும் நியாயமான முறையிலும் உறப்பட்ட செலவுகளைக் கொடுப்பனவு செய்வதற்கான கட்டளையை ஆக்கலாம்.

70. (1) காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்குதலில் அதன் சார்பில் சபையினால் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கும் உகந்தவாறாக மாவட்ட நீதிமன்றத்தினால் விடுவிக்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கும் இணங்க, செயல் முறைக்கு உகந்தவாறு அமைவாக, தகுந்ததென ஒடுப்போன் கருதக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய அடிப்படையின் மேலும், காப்புறுதியாளரின் சொத்துக்களும் பொறுப்புக்களும் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

(2) காப்புறுதியாளர் ஒருவரின் ஒப்பந்தங்களின் தொகைகளில் ஏதேனும் கழிவு மாவட்ட நீதிமன்றத்தினால் செய்யப்படும் நோக்கங்களுக்காக காப்புறுதியாளரின் சொத்துக்களினதும் பெறுமதிகளினதும் பெறுமதியும், காப்புறுதியாளரால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பிலான எல்லா உரிமைக் கோரிக்கைகளும், சபையினால் அதன்சார்பில் ஆக்கப்படக்கூடிய எவையேனும் விதிகளைக் கருத்திற் கொண்டு, நீதிமன்றம் சரியெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய அடிப்படையிலும் உறுதி செய்யப்படல் வேண்டும்.

71. (1) காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்குதலில் நீண்டகாலக் காப்புறுதித் தொழில் தொடர்பில் காப்புறுதியாளர்களின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியானது காப்புறுதியாளர்களின் வேறு எவையேனும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியிலிருந்து தனிவேறாக, சபையினால் நியமிக்கப்படும் சுதந்திரமான ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரினால் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்; அத்துடன் முதலில் குறிப்பிட்ட சொத்துக்கள் நீண்டகால காப்புறுதித் தொழில் தொடர்பிலான பொறுப்புக்களின் முதலில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் விஞ்சாத அளவுவரை, நீண்டகாலக் காப்புறுதித் தொழில் தொடர்பிலான பொறுப்புக்கள் தவிர்ந்த வேறு எவையேனும் பொறுப்புக்களை விடுவிப்பதற்கும் பிரயோகப்படுத்தப்படுதல் ஆகாது.

(2) நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற காப்புறுதியாளர் எவரினதும் தொழிலை ஒடுக்குகையில், காப்புறுதியாளரின் சொத்துக்களும் பொறுப்புக்களும் கண்டறியப்படும்போது (இதனகத்துப் பின்னர் "முதற்றோற்ற அளவிலான மேன்மிகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொறுப்புக்களுக்கு மேலான சொத்துக்களின் மேன்மிகையொன்று இருக்கின்றதெனவும், ஒடுக்குதல் தொடங்குவதற்கு முற்போந்த பத்தாண்டு காலப்பகுதியின்போது, மேன்மிகையின் பாகம் எதுவும் எந்நேரத்திலும் நீண்டகாலக் காப்புறுதிப் பத்திரம் உடையவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது எனவும் காணப்படுகின்றவிடத்து, பின்வரும் ஏற்பாடுகள் பயன் உடையனவாதல் வேண்டும்:-

(அ) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் தொடர்பிலான காப்புறுதியாளரின் பொறுப்புகளுக்கு, அப்பத்தாண்டுகளுக்கு நீண்டகாலக் காப்புறுதித் தொழிலிலிருந்து எழுகின்ற மொத்த மேன்மிகைக்கு, மேலே கூறப்பட்ட பத்தாண்டுகளின் போது இலாபத்துடன் கூடிய பத்திரங்களை உடைய காப்புறுதிப் பத்திரங்களை உடையவர்களுக்கு ஒதுக்கப்பட்டவாறான மேன் மிகையின் கூட்டு மொத்தத் தொகை என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரம் முதற்றோற்றளவிலான மேன்மிகைக்குக் கொண்டுள்ளதான ஒரு தொகை சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ஆ) காப்புறுதியாளரின் சொத்துக்கள், அத்தகைய சேர்த்தல் செய்யப்பட்ட பின்னர் அவை காப்புறுதியாளரின் பொறுப்புக்களை விஞ்சுவதாக இருக்கின்ற அளவுவரை மட்டுமே, அதன் பொறுப்புக்களை விஞ்சுவதாகக் கருதப்படுதல் வேண்டும்;

ஆயின் -

(i) ஏதேனும் விடயத்தில் அத்தகைய ஒதுக்குகை எதுவும் இருந்திருக்காவிட்டால் அல்லது சிறப்புச் சூழ்நிலைகள் காரணமாக நீண்டகாலக் காப்புறுதித் தொழில் தொடர்பில் காப்புறுதியாளரின் பொறுப்புக்களுக்கு சேர்க்கப்பட வேண்டிய தொகையானது மேலே கூறப்பட்ட அத்தகைய விகிதத்துக்குச் சமமான தொகையொன்றாக இருத்தல் வேண்டுமென்பது ஒப்புரவல்லாததாக இருக்கும் என மாவட்ட நீதிமன்றத்துக்குத் தோன்றினால், அவ்வாறு சேர்ப்பிக்கப்பட வேண்டிய தொகையானது மாவட்ட நீதிமன்றம் பணிக்கக் கூடியவாறான அத்தகைய தொகையாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஏதேனும் விடயத்துக்கு இவ்வுட்பிரிவானது ஏற்புடையதாகும் நோக்கத்துக்காக, ஒடுக்குதல் தொடங்கப்பட முன்னர் பிரச்சனைக்குரிய நீண்ட காலக்காப்புறுதித் தொழில் வகுதி ஒன்றில் மாத்திரமே மேலே கூறப்பட்டவாறான அத்தகைய மேன்மிகையின் விகிதமொன்றானது நீண்ட காலக் காப்புறுதிப் பத்திரங்கள் உடையவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றவிடத்து அவ்வகுதி தொடர்பில் காப்புறுதியாளரின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியானது நீண்டகாலத் தொழில் தொடர்பில் அத்தகைய காப்புறுதியாளர்களின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதி கண்டறியப்பட்டவாறான அதே முறையில் தனிவேறாகக் கண்டறியப்படுதல் வேண்டும். அத்துடன் பொறுப்புக்களுக்கு மேலாக அவ்வாறு காணப்படும் சொத்துக்களின் மேன்மிகை எதுவும், நீண்ட காலக் காப்புறுதித் தொழில் தொடர்பில் காப்புறுதியாளர்களின் பொறுப்புகளுடன் சேர்க்கப்பட வேண்டிய தொகையைக் கண்டறியும் நோக்கத்துக்காக முதற்றோற்ற அளவிலான மேன்மிகை எனக் கருதப்படுதல் வேண்டும்.

72. எழுபத்து மூன்றாம் பிரிவு ஏற்புடைத்தாகின்ற விடயமொன்று தவிர்ந்த காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்கும் விடயத்தில், ஒழிப்போன் 21ஆம் பிரிவின்கீழ் அல்லது 53 ஆம் பிரிவின் கீழ் காப்புறுதியாளரினால் செலுத்தப்பட்ட வைப்புப் பணத்தை மீளளிப்பதற்கான கட்டளையொன்றுக்காக மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், நீதிமன்றம், அது பணிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வைப்புப் பணத்தைத் திருப்பி அளிக்குமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

73. (1) காப்புறுதியாளரின் பொறுப்பு முயற்சியில் அடங்கியுள்ள எவ்வகுப்பைச் சேர்ந்ததுமான காப்புறுதித் தொழில் தொடர்பில் காப்புறுதியாளர் ஒருவரின் அலுவல்கள் ஒடுக்கப்பட வேண்டியது உசிதமெனவும், ஆனால் பொறுப்பு முயற்சியில் அடங்கியுள்ள வேறு ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த காப்புறுதித் தொழில் காப்புறுதியாளரினால் தொடர்ந்து கொண்டு நடாத்தப்படுதல் வேண்டுமென அல்லது அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் வெளிப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய நிறுவனமொன்றுக்கு கைமாற்றப்படுவது உசிதமானதென எந்நேரத்திலும் தோன்றினால் அத்தகைய நோக்கத்துக்காக இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க செயற்றிட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, மாவட்ட நீதி மன்றத்தினால் உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் செயற்றிட்டம் எதுவும் எவையேனும் வகுப்பையும் சேர்ந்தவர்களான பயனுறுத்தப்பட்ட காப்புறுதிப் பத்திரங்கள் உடையவர்களுக்கிடையே (உத்தேசிக்கப்பட்ட ஒடுக்குதலின் மீது எழக்கூடிய மேன்மிகையான சொத்துக்களின் ஒதுக்கீடு உட்பட) காப்புறுதியாளரின் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் ஒதுக்கீடு பகிர்ந்தளித்தல் என்பவற்றுக்காகவும், அவர்களின் காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பிலான ஒவ்வொரு வகுப்பினரான காப்புறுதியாளர்களினதும் வருங்கால உரிமைகளுக்காகவும் ஒடுக்கப்பட வேண்டுமென உத்தேசிக்கப்பட்ட காப்புறுதியாளரின் அலுவல்கள் எவையும் ஒடுக்கப்படவேண்டிய முறைக்காகவும் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்துடன், காப்புறுதியாளரின் அமைப்புப் புறவிதிகளின் குறிக்கோள்கள் தொடர்பில் அமைப்புப் புறவிதிகளை மாற்றுவதற்கான ஏற்பாடுகளையும் அத்துடன் செயற்றிட்டத்துக்குப் பயன்கொடுப்பதற்கு உசிதமாகக் கூடியவாறான அத்தகைய வேறு ஏற்பாடுகளையும் கொண்டிருக்கலாம்.

(3) ஒழித்துக் கட்டலில் காப்புறுதியாளர்களின் பொறுப்புக்களின் மதிப்பீடு மற்றும் ஒழித்துக் கட்டலில் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மேன்மிகைச் சொத்துக்களின் பிரயோகம் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான செயல் திட்டத்துக்கு இணங்க, காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்கலில் அவை ஏற்புடையனவாகின்ற அதே போன்ற முறையில், காப்புறுதியாளர் ஒருவரின் அலுவல்களின் ஏதேனும் பகுதி ஒடுக்கப்படுவதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் கம்பெனி ஒன்று தொடர்பில் இப்பிரிவின் கீழான செயற்றிட்டம் எதுவும், கம்பெனிகள் ஒடுக்கப்படுவது தொடர்பிலான 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றுக்கும், அவசியமான திரிபுகளுடன் ஏற்புடையதாகலாம்.

(4) இப்பிரிவின் கீழான செயற்றிட்டமொன்றை உறுதிப்படுத்தும் மாவட்ட நீதிமன்றத்தின் எக்கட்டளை ஒன்றின் மூலம் அக்கம்பெனியின் அமைப்புப் புறவிதிகளின் குறிக்கோள்கள் தொடர்பில் அவ்வமைப்பு புறவிதிகள் மாற்றப்பட்டனவோ, அக் கட்டளையொன்றானது, அம் மாற்றம் தொடர்பில், 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட கட்டளையொன்று என்றாற்போன்று பயனுடையதாதல் வேண்டுமென்பதுடன், அப்பிரிவின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் செயற்றிட்டம் ஒன்றை உறுதி செய்கின்ற கட்டளையொன்றை ஆக்கும்போது, மாவட்ட நீதிமன்றம், காப்புறுதியாளர், தொடர்ந்து கொண்டு நடாத்துகின்ற காப்புறுதித் தொழில் வகுப்புக்கள் எவையேனும் இருந்தால் அவ்வகுப்புக்களோடு தொடர்பில்லாததும், 21ஆம் அல்லது 53ஆம் பிரிவின் கீழ் காப்புறுதியாளரினால் செய்யப்பட்ட வைப்பின் அந்த அளவைக் கையுதிர்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய கட்டளைகளை ஆக்கலாம்.

74. சொத்துக்களின் பணப் பகிர்ந்தளிப்பைச் செய்யும் நோக்கத்துக்காகக் காப்புறுதியாளர் ஒருவரின் தொழிலை ஒடுக்குகையில், ஒழிப்போன் காப்புறுதியாளரால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களுக்கு உரித்துடைய அல்லது அவற்றில் அக்கறை கொண்ட காப்புறுதியாளரின் புத்தகங்களில் காணப்படுகின்ற ஒவ்வோர் ஆளுக்குமுள்ள பொறுப்பின் பெறுமதியைக் கண்டறிதல் வேண்டுமென்பதுடன், மாவட்ட நீதிமன்றம் பணிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தகைய பெறுமதி பற்றிய அறிவித்தலைக் கொடுத்தலும் வேண்டும். அத்துடன் எவ்வாளுக்கு அவ்வாறு, அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் மாவட்ட நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய காலத்துக்குள்ளும், அத்தகைய பெறுமதி மீதான பிணக்குப் பற்றிய தனது முன்னம் பற்றிய அறிவித்தல் கொடுத்தாலொழிய, அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட பெறுமதிக்குக் கட்டுப்பட்டவரால் வேண்டும்.

75. (1) காப்புறுதியாளர் ஒருவர், ஒழித்துக் கட்டப்படுகின்றவிடத்து, மாவட்ட நீதிமன்றம், காப்புறுதியாளரின் காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான தொகைகளைக் குறைக்கின்ற கட்டளையொன்றை, நீதியானதென மாவட்ட நீதிமன்றம் கருதக் கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் ஆக்கலாம்.

(2) நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தும் காப்புறுதியாளர் ஒருவர், கடனிறுக்கவகையற்றவர் என எண்பிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, மாவட்ட நீதிமன்றம் தகுந்ததென அது கருதினால், ஒடுக்குதல் கட்டளையொன்றை ஆக்குவதற்குப் பதிலாக, நீதியானது என மாவட்ட நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் காப்புறுதியாளரின் காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான தொகைகளைக் குறைக்கலாம்.

(3) இப்பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்று, ஒன்றில் ஒழிப்போனால் அல்லது காப்புறுதியாளரினால் அல்லது அவரின் சார்பில் அல்லது காப்புறுதிப் பத்திரமொன்று உடையவரினால் அல்லது சபையினால் செய்யப்படலாம்; அத்துடன் சபையும், எவ்வாளுக்குப் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறு உண்டென மாவட்ட நீதிமன்றம் கருதுகின்றதோ, அவ்வாளும் அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தின் மேல் விசாரணை செய்யப்பட உரித்துடையராதல் வேண்டும்.

76. நீண்ட காலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தும் காப்புறுதியாளர் ஒருவர் அத்தகைய தொழிலை ஒடுக்கியிருக்குமிடத்து அல்லது அத்தகைய தொழிலை ஒடுக்குவதற்கு நடபடிகள் எடுக்கின்றவிடத்து, அத்துடன் அத்தகைய காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட நீண்டகால காப்புறுதித் தொழிலின் பத்திரங்களின் கீழ் நிலவுகின்ற பொறுப்புக்களைச் சமாளிப்பதற்கு அத்தகைய தொழில் தொடர்பான சொத்துக்கள் போதுமானவையாக இல்லாதிருக்கின்றவிடத்து அத்தகைய காப்புறுதிப் பத்திரமொன்றை வைத்திருக்கின்ற ஒவ்வொருவரும், தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றம் ஒன்றில் தொடர்ந்த வழக்கு மூலம் அத்தேதியன்றோ அல்லது அதன் பின்னரோ அத்தகைய காப்புறுதியாளரின் ஒவ்வொரு பணிப்பாளரினதும் சொத்துக்களுக்கு எதிராக வழங்குகை தொடர்ந்து நடாத்துவதற்கும் நீண்டகாலக் காப்புறுதித் தொழில் காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் வேண்டுமென்ற அசட்டை, மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாகவே ஒடுக்கப்பட்டது என எண்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் நிலுவையாக உள்ள ஏதேனும் பணத் தொகையை அறவிடுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

77. மாவட்ட நீதிமன்றம் ஒன்றானது, 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினதும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகள் முரணாக, எது எவ்வாறிருப்பினும் காப்புறுதியாளரின் தொழிலை 69ஆம் பிரிவின் கீழ் ஒடுக்குவதற்கான கட்டளையை ஆக்குமிடத்து, காப்புறுதியாளரின் காப்புறுதிப் பத்திரம் உடையவர்கள் அத்தகைய காப்புறுதியாளரின் சொத்துக்களைப் பகிர்ந்தளித்தலில் முன்னுரிமைக் கோரிக்கை உடையவர்களாதல் வேண்டும்.

## பாகம் VIII

## தரகர்களையும் காப்புறுதி முகவர்களையும் பதிவு செய்தல்

78. (1) காப்புறுதியாளர் ஒருவர் அல்லது தரகர் ஒருவர் காப்புறுதி முகவர் ஒருவராக தனி ஆளொருவரை நியமிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார். அவர், அத்தகைய காப்புறுதி முகவர் ஒருவராக அத்தகைய காப்புறுதியாளருடன் அல்லது தரகருடன் பதிவு செய்யப்படல் வேண்டும். காப்புறுதியாளர் அல்லது தரகர் ஒவ்வொருவரும், அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் சபையினால் குறித்துரைக்கபப்பட்டவாறான அத்தகைய முறையில் காப்புறுதி முகவர்களாக அவர்களுடன் பதிவு செய்யப்பட்ட எல்லாத் தனி ஆட்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) காப்புறுதியாளர் அல்லது தரகர் ஒவ்வொருவரும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்பட்டுவரும் இடாப்பின் பிரதியொன்றைப் சபைக்கு ஆண்டு தோறும் அனுப்புமாறும் நிரலில் செய்யப்படும் எவையேனும் சேர்த்தல்கள் அல்லது அழித்தல்கள் பற்றிச் சபைக்கு அறிவிக்குமாறும் தேவைப்படுத்தப்படுகிறார்.

(3) காப்புறுதிப்பத்திரங்கள் உடையவர்களின் அக்கறைகளைக் கொண்டு, சம்பந்தப்பட்ட ஆள் காப்புறுதி முகவர் ஒருவராகப் பணிபுரிவதற்குப் பொருத்தமற்றவர் எனச் சபை கருதுகின்ற போது, அத்தகைய காப்புறுதியாளரினால் அல்லது தரகரால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இடாப்பில் காணப்படும் காப்புறுதி முகவர் எவரினதும் பெயரை

அழிக்குமாறு, விடயத்துக்கு ஏற்றவாறு காப்புறுதியாளரை, அல்லது தரகரை தேவப்படுத்துவதற்கான உரிமை சபைக்கு இருத்தல் வேண்டும்.

(4) சபை, அதன் சார்பில் ஆக்கப்படும் விதிகள் மூலம் காப்புறுதி முகவர் ஒருவராக நியமிக்கப்படும் நோக்கங்களுக்காக ஆளெவருக்கும் இருக்க வேண்டிய தகைமைகளைத் தீர்மானிக்கலாம்.

(5) காப்புறுதியாளர் அல்லது தரகர் எவரும், வேறு எவரேனும் காப்புறுதியாளருடன், அல்லது தரகருடன் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள ஆளெவரையும் காப்புறுதி முகவர் ஒருவராக நியமித்தலாகாது.

79. ஆளொருவர் சபையினால் தரகர் ஒருவராக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்றை வைத்திருந்தாலொழியவும் அத்துடன் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட காப்புறுதித் தரகர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்தாலொழியவும் காப்புறுதித் தரகர் ஒருவராக ஆள் எவரும் செயலாற்றுதலோ அல்லது காட்டிக்கொள்ளுதலோ ஆகாது.

80. (1) ஆளெவரும்:-

(அ) அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைக்குக் குறையாத செலுத்தப்பட்ட பங்கு மூலதனமொன்றைக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனியாக இருந்தாலொழிய;

(ஆ) அதன் ஊழியத்தில் அல்லது பணிப்பாளர்கள் சபையில், சபையினால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலானவான அத்தகைய தகைமைகளையும; அனுபவத்தையும் காப்புறுதித் தொழிலில் கொண்டிருக்கும் ஆட்களை கொண்டிருந்தாலொழிய;

(இ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களுடன் தொழில்சார் நட்டோத்தரவாதத்துக்காக, காப்புறுதிப்பத்திரம் ஒன்றை அல்லது பத்திரங்களை எடுத்தாலொழிய; அத்துடன்

(ஈ) காப்புறுதி செய்யப்பட்ட பொது மக்களின் அக்கறை பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கத்துக்காக, அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் சபையினால் விதிக்கப்பட்ட அத்தகைய வேறு தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருந்தாலொழிய;

(2) கம்பெனி எதுவும்-

(அ) அத்தகைய கம்பெனி எவரேனும் காப்புறுதியாளரின் பங்குதாரரொருவராக; அல்லது

(ஆ) (i) அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் அல்லது குறித்துரைக்கப்பட்ட அலுவலர்; அல்லது

(ii) அத்தகைய கம்பெனியின் இணை அல்லது துணைநிலைக் கம்பெனியொன்றின் பணிப்பாளரொருவர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரொருவர்,

எவரேனும் காப்புறுதியாளரின் பணிப்பாளரொருவராக அல்லது பங்குதாரர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக

இருக்குமிடத்து காப்புறுதி தரகரொருவராக பதிவுசெய்யப்படுவதற்கு உரித்துடையதாக-மாட்டாது.

81. தரகர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அந்நோக்கத்துக்கெனச் சபையினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அப்படிவத்துடன் பின்வருவன இணைக்கப்படல் வேண்டும்.-

(அ) கம்பனியின் அமைப்புப் புறவிதிகளினதும் அமைப்பு அகவிதிகளினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;

(ஆ) கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;

(இ) பின்வருவன தொடர்பிலான விபரங்களைத் தரும் கூற்றுக்கள் ;?

(i) கம்பனியின் பங்குதாரர்கள்

(ii) கம்பனியின் பணிப்பாளர்களும் சிரேஷ்ட முகாமையாளர்களும் ;

(iii) 80 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் சபையினால் விதிக்கப்படுகின்ற தேவைப்பாடுகள் எவையும் இருந்தால் அவை நிறைவேற்றப்பட்டது பற்றிய கூற்று ;

(ஈ) முறையாக நிரப்பப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட கம்பெனிகள் பதிவாளரால் வழங்கப்பட்ட படிவம் 48 இன் ஒரு பிரதி ;

(உ) கம்பனியின் செய்யப்பட உத்தேசிக்கப்பட்ட காப்புறுதித்தொழில் வகுப்பு அல்லது வகுப்புக்கள் பற்றித் தருகின்ற ஒரு கூற்று ;

(ஊ) கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்குமூலதனத்தைப் பற்றி தருகின்ற ஒரு கூற்று ;

(எ) நீண்டகால காப்புறுதித்தொழில் மற்றும் பொதுக் காப்புறுதித்தொழில் ஆகிய ஒவ்வொன்றுக்கும். அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகள்மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு கட்டணம் ;

(ஏ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய தொகைக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களினால் வழங்கப்பட்ட தொழில்சார் நட்டோத்தரவாதக் காப்புறுதிப்பத்திரத்தின் அல்லது பத்திரங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி; அத்துடன்

(ஐ) சமர்பிக்கப்படல் வேண்டுமெனச் சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்களும் தகவலும்.

82. (1) சபையானது-

(அ) விண்ணப்பகாரர் ஒருவருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கக்கூடிய தொழிலின் அளவும் அவரின் சம்பாதிக்கக்கூடிய அனுகூலங்களும் போதுமானவையாக இருக்கின்றன என ;

(ஆ) எத்தொழில் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்பட்டதோ அத்தொழில், ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அத்தொழில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நியமங்களுக்கு இணங்கக் கொண்டுநடாத்தப்படும் என ;

(இ) விண்ணப்பகாரரின் நிதி நிலைமை நன்றாக இருக்கின்றதென ;

(ஈ) விண்ணப்பகாரரின் ஊழியத்தில் இருப்பவர்களின், காப்புறுதித் தரகுத்தொழிலில் உள்ள அறிவுத்திறன் மற்றும் அனுபவம் போதுமானவையென ; அத்துடன்

(உ) கம்பெனியானது, காப்புறுதித்தரகுத்தொழிலைக் கொண்டுநடாத்தும் ஒரே நேரத்துக்காகவே, 1982ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனியின் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது என,

திருப்திப்படுகின்றவிடத்து, சபை, அத்தகைய விண்ணப்பகாரரை, விண்ணப்பம் எவ்வகுப்பை அல்லது வகுப்புக்களைச் சார்ந்த காப்புறுதித்தொழிலுக்காகச் செய்யப்பட்டதோ, அவ்வகுப்பை அல்லது வகுப்புக்களைச் சார்ந்த காப்புறுதித் தொழிலுக்குக் காப்புறுதித் தரகர் ஒருவராகப் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் காப்புறுதித்தரகர் ஒருவரைப் பதிவுசெய்ததன்மேல், பதிவுச்சான்றிதலொன்று அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய சபையினால் விண்ணப்பகாரருக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது ஓராண்டு காலப்பகுதிக்கு வலிதுடையதாதலும் வேண்டும். தனிவேறான பதிவுச்சான்றிதழ்கள் நீண்டகாலக் காப்புறுதித்தொழில் மற்றும் பொதுக் காப்புறுதித்தொழில் தொடர்பில் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) சபையினால் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழ், அதில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு, அச்சான்றிதழை வைத்திருப்பவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் தரகர் ஒருவருக்கு வழங்கப்படும் பதிவுச்சான்றிதழொன்று –

(அ) வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றப்படல் ஆகாது அத்துடன் அத்தகைய கைமாற்றம் எதுவும் வெற்றாதலும் வறிதாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வேறு எவரேனும் ஆளின் நன்மைக்குப் பயன்படுத்தப்படலாகாது.

(5) சபையானது, காப்புறுதித்தரகர் ஒருவரின் பதிவுக்கான ஏலவேயுள்ள நிபந்தனைகளுக்கு எந்நேரத்திலும் எதனையும் சேர்க்கலாம் அல்லது அவற்றை வேறுபடுத்தலாம். அல்லது மீளப்பெறலாம் அல்லது புது நிபந்தனைகளைச் சுமத்தலாம்.

83. தரகர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்று அதன்சார்பில் சபைக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படலாம். அத்துடன் அத்தகைய விண்ணப்பத்துடன் பின்வருவன இணைக்கப்படுதல் வேண்டும்;-

(அ) தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய தொகைக்கும் தொழில்சார் காப்புறுதி நட்டோத்தரவாதப் பத்திரமொன்று ;

(ஆ) முற்போந்த நிதியாண்டில் செய்யப்பட்ட தொழில் பற்றிய கூற்றொன்று ;

(இ) அத்தகைய புதுப்பித்தல் தொடர்பில் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய புதுப்பித்தல் கட்டணமொன்று ; அத்துடன்

(ஈ) சபையினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்கள்.

84. (1) சபை -

(அ) தரகர், வலுவில் இருக்கும் சட்டத்தின்கீழ் விடுவிக்கப்படாத வங்குறோத்துக்காரர் அல்லது கடனிறுக்க வகையற்ற ஒருவர் என காணப்படுகின்றவிடத்து ;

(ஆ) சபையினால் விடுவிக்கப்படும் அறிவுறுத்தல்கள் எவற்றுக்கும் தரகர் விடாப்பிடியாகக் கீழ்ப்படியாமல் இருக்கின்றவிடத்து ;

(இ) (i) தரகரின் பணிப்பாளர் ஒருவர் அல்லது குறித்துரைக்கப்பட்ட அலுவர் ஒருவர் ; அல்லது

(ii) அத்தகைய தரகரின் இணை அல்லது துணைக் கம்பெனியொன்றில் பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் ஒருவர்

காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் அல்லது பங்குதாரர் அல்லது ஊழியர் ஒருவராக இருக்கின்றவிடத்து;

(ஈ) தரகர் இச்சட்டத்தின்கீழ் தவறு எதற்கும் குற்றவாளியெனக் காணப்படுகின்றவிடத்து, அல்லது ஆகக்குறைந்தது மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சபையினால் எழுத்தில் அவருக்கு எச்சரிக்கை அல்லது எச்சரிப்புக் கண்டிப்பு விடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து ; அல்லது

(உ) தரகரினால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தில், கணக்கில் எழுத்திலான தகவலில் அல்லது ஆவணத்தில் உள்ள கூற்று எதுவும், பொய்யாதெனெ அல்லது பிறழ்வழி உய்க்கின்றதென காணப்பட்டவிடத்து,

தரகர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பதிவு ஒன்றை இடைநிறுத்தம் செய்யலாம் அல்லது இல்லாதாக்கலாம் அல்லது வழங்கப்பட்ட சான்றிதழொன்றைப் புதுப்பிப்பதற்கு மறுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையின் முடிவினால் இன்னலுறும் தரகர் ஒருவர் அதனின்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மேன்முறையீடு தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

85. (1) தரகர் ஒவ்வொருவரும், அத்தகைய தரகரின் தொழில் சம்பந்தமாக பதிவுசெய்யப்பட்ட காப்புறுதியாளர்களால் அல்லது அவர்களது தற்போதைய அல்லது முந்திய ஊழியர்களினால் உறப்பட்ட எவ்விவரணத்தைச் சேர்ந்ததுமான குடியியல் பொறுப்புத் தொடர்பிலான கோரிக்கைகளில் இருந்து எழுகின்ற இழப்புக்களுக்கு எதிராக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதியாளர்களுடன் காப்புறுதிப் பத்திரங்களை ஏற்படுத்திப்பேணுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, அத்தகைய காப்புறுதிப்பத்திரமானது, ஏதேனும் கவனயீனமான செயல், பிழை அல்லது செய்யாமை காரணமாகத் தொழில் தொடர்பிலான கடமை மீறலுக்காக காப்புறுதி செய்யப்பட்டவருக்கு எதிராகச் செய்யப்பட்ட கோரிக்கைகளில் இருந்து எழுகின்ற இழப்புக்களுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டோத்தரவாதம் வழங்குதல் வேண்டும் :

ஆயின் ஏதேனும் நேர்மையற்ற அல்லது மோசடியான செயலை அல்லது செய்யாமையைப் புரிகின்ற செய்கின்ற அல்லது ஆள் எவருக்கும் நட்டோத்தரவாதம் அளிப்பதற்குக் காப்புறுதிப்பத்திரம் தேவைப்படுத்தப்படலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட காப்புறுதிப்பத்திரம், பதிவுச்சான்றிதழ் புதுப்பிக்கப்படும் தேதியில், ஒன்றில் -

(அ) ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபா மொத்தப் பணத்தொகையொன்றில் ; அல்லது

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, ஆகக்கூடிய பொறுப்பின் வரையறை ஒன்றுக்கு அமைய காப்புறுதிப்பத்திரம் தொடங்குவதற்கு அல்லது புதுப்பிக்கப்படுவதற்கு முன்னர் முடிவுறுகின்ற கடைசிக் கணக்கீட்டுப் பகுதிக்கான தொழிலின் தரகுக்கூலியைவிட மூன்று மடங்குகளுக்குச் சமனான பணத்தொகையொன்றில்,

ஆகக்குறைந்ததொரு வரையறையைக் கொண்ட நட்டோத்தரவாதத்தை வழங்குதல் வேண்டும்.

(4) காப்புறுதிப்பத்திரம் எதுவும், சபையின் எழுத்திலான அங்கீகாரமின்றி, ஆகக்குறைந்த நட்டோத்தரவாத வரையறையின் 2.5 வீதத்தை விஞ்சுகின்ற தொகையை விஞ்சுதொகையாக அல்லது கழிவுத்தொகையாக வைத்திருத்தல் ஆகாது,

86. (1) தரகர் ஒவ்வொருவரும், அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகள்மூலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய படிவத்திலும் கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

(2) தரகர் ஒவ்வொருவரும், கணக்கீட்டுப் காலப்பகுதி முடிவுற்ற ஆறு மாதங்களுக்குள், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும், இவை தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஐந்தொகையொன்று, இலாப நட்டக் கணக்கொன்று மற்றும் அத்தகைய கணக்குகளுக்கான குறிப்பொன்று என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) தரகர் ஒவ்வொருவரும் எக்காப்புறுதியாளர்களுடன் அவர் தொழில் செய்கின்றாரோ அக்காப்புறுதியாளர்களின் பெயர்கள், அத்துடன் அவ்வாறு முன்வைத்துள்ள அத்தொழிலின் சதவீதம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் விபரத்திரட்டொன்றைச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு முன்வைக்கப்படும் தொழிலின் சதவீதமானது சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வரையறையை விஞ்சவில்லை என்ற பயன்கொண்ட சான்றிதழ் ஒன்று, அத்தகைய தரகரின் இரு பணிப்பாளர்களால் முறையாகக் கையொப்பமிடப்பட்ட ஆண்டுதோறும் சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) தரகர் ஒவ்வொருவரும் காப்புறுதித் தரகுக் கணக்கு என அழைக்கப்படுவதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அவரால் பேணப்படுவதுமான கணக்கொன்றுக்கு, காப்புறுதி ஒப்பந்தமொன்றின் தொடர்பில் அத்தகைய தரகரால் பெறப்படும் எல்லாப் பணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

(5) தரகர் ஒருவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் கணக்கு, கூற்று அல்லது விபரத்திரட்டு செம்மையானதல்ல அல்லது பூரணமானதல்ல என சபைக்குத் தோன்றினால் சபையானது –

(அ) மேலதிகத் தகவலைத் தருமாறு தேவைப்படுத்தலாம். இது, சபை அவ்வாறு பணித்தால் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகையதொரு கணக்காய்வாளரினால் அல்லது வேறு ஆளினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) பரிசோதனை செய்வதற்காக மேலதிக ஆவணம் எதனையும் தேவைப்படுத்தலாம்.

87. தரகர் ஒருவராகப் பதிவுசெய்வதற்கான அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் எதுவும், அத்தகைய விண்ணப்பம் ஏன் நிராகரிக்கப்படுதலாகாது என அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் காரணம் காட்டுமாறு, அத்துடன் விண்ணப்பதாரர்

(அ) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் காரணம் காட்டத் தவறினால் ; அல்லது

(ஆ) சபையினால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான போதுமான அளவு காரணத்தைக் காட்டத்தவறினால் விண்ணப்பதாரருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்படாமல் சபையினால் நிராகரிக்கப்படுதலாகாது.

88. சபையானது தரகர் அல்லது காப்புறுதி முகவர் ஒருவரால் கொண்டுநடாத்தப்படும் ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த காப்புறுதித்தொழில் தொடர்பில் காப்புறுதியாளர் ஒருவரினால் தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய தரகுக்கூலி வீதத்தைத் தீர்மானித்தல் வேண்டும்.

89. காப்புறுதியாளர் ஒருவரின் சார்பில் தரகர் அல்லது காப்புறுதி முகவர் ஒருவரால் சேகரிக்கப்படும் கட்டுப்பணங்களை, அவ்வாறு சேகரிக்கப்பட்ட இரு வாரங்களுக்குள் அனுப்பிவைப்பது அத்தகைய தரகர் ஒருவரின் அல்லது காப்புறுதி முகவர் ஒருவரின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் IX

### தவறுகள்

90. (அ) இச்சட்டத்தின்கீழ் முறையாகப் பதிவுசெய்யப்படாத காப்புறுதித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது ஏதேனும் காப்புறுதித்தொழிலைத் தொடங்குகின்ற ; அல்லது

(ஆ) அது எந்த வகையான காப்புறுதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்படவில்லையோ, அந்த ஏதேனும் வகையான காப்புறுதி தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற,

ஏதேனும் கம்பெனி, தவெறான்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டிற்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

91. காப்புறுதி முகவரொருவராக காப்புறுதியாளர் அல்லது தரகர் ஒருவராக பதிவுசெய்யப்படாமல் காப்புறுதி முகவரொருவராகத் தொழிலைக் கொண்டுநடாத்தும் ஆளொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டிற்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

92. இச்சட்டத்தில் 82 ஆம் பிரிவின்கீழ் முறையாகப் பதிவுசெய்யப்படாமல் தரகர் ஒருவராகத் தொழிலைக்கொண்டு நடாத்தும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விசாரணையின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டிற்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

93 தவறொன்றுக்கு விசேட தண்டம் ஒன்றைக் குறித்துரைக்கும் பிரிவு 54,57,67,90,91 அல்லது 92 ஆம் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் சபையால் அனுப்பப்பட்ட ஏதேனும் பணிப்பிற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையில் சுருககமுறை விசாரணையின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்திற்கும் அத்துடன் தவறொன்று தொடர்ந்துறும் விடயத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு அவ்வாறு தொடர்ந்துறும் ஒவ்வொரு நாளுக்கும் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாத மேலும் ஒரு குற்றப்பணததிற்கும் ஆளாதலும் வேண்டும்

## பாகம் X

### பொது

94. (1) ஒவ்வாரு காப்புறுதியாளரும் தரகரும் பிரதான அலுவலகமொன்றைப் பேணுதலும், அதன் சார்பில் சபையால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய தகைமைகளையுடைய ஆளொருவரை பிரதான அலுவலகத்தின் பிரதான அலுவலராக நியமித்தலும் வேண்டும்; இவர், அதன் தொழில் நடவடிக்கைகளின் பொதுக் கட்டுப்பாட்டிற்கும் பணிப்பிற்கும், மேற்பார்வைக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) சபையானது, காப்புறுதியாளர் அல்லது தரகர் ஒருவர் காப்புறுதி செய்யப்பட்ட பொதுமக்கள் மட்டில் கொண்டிருக்கும் கடப்பாடுகளையும் காப்புறுதித்துறையில் தகைமைபெற்ற அல்லது அனுபவம்கொண்ட ஆட்கள் பிரதான அலுவலர்களாகத் தொழிலுக்கமர்த்தப்படவேண்டிய அவசியத்தையும் கருத்திற்கொண்டு, அத்தகைய

ஆள் அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவராகவும் பொருத்தமற்றவராகவும் இருக்குமிடத்து, பிரதான அலுவலர் ஒருவரின் நியமனத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) சபை, (2) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதான அலுவலரொருவரின் நியமனம் ஒன்றிற்கு ஆட்சேபனை தெரிவிக்குமிடத்து அவரைத் தொழிலுக்கமர்த்திய காப்புறுதியாளர் அல்லது தரகர் அவரது நியமனத்தை இல்லாதொழித்தலும் அவரது இடத்திற்கு வேறொருவரை நியமித்தலும் வேண்டும்.

95. ஒவ்வொரு காப்புறுதியாளரும் தரகரும் அதன் சார்பில் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பின்வருவன அடங்கியிருக்கவேண்டிய கொள்கைகளின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.-

(அ). காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவரின் பெயர் முகவரியுடன் வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரம் ஒவ்வொன்றினதும் விவரங்கள்,

(ஆ) காப்புறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட தேதியும் காப்புறுதிப்பத்திர இலக்கமும்;

(இ) பெறப்பட்ட கட்டுப்பணத்தொகையும் காப்புறுதி முகவர்களுக்கும் தரகர்களுக்கும் செலுத்தப்பட்ட தரகும் ;

(ஈ) காப்புறுதி செய்யப்பட்ட தொகையும் காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கும் தேதியும்.

(உ) செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் விவரங்களும் அத்தகைய உரிமைக்கோரிக்கைகள் செலுத்தப்பட்ட தேதிகளும் செலுத்தப்பட்ட தொகைகளும் ; அத்துடன்

(ஊ) உரிமைக்கோரிக்கையொன்று மறுக்கப்படும் பட்சத்தில் அத்தகைய மறுப்புக்கான காரணங்களும் அத்துடன் பகுதியளவிலான நிர்ணயத்தின் விடயத்தில் அதற்கான காரணங்களும்.

96 ஒரு காப்புறுதியாளரை, இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு தரகரை அல்லது அத்தகைய காப்புறுதியாளரின் அல்லது தரகரின் ஒரு காப்புறுதி முகவரைத் தவிர்ந்த வேறு ஆள் எவரும் சபையின் எழுத்திலான அங்கீகாரமின்றி அதன் பெயரின் தலைப்பின் அல்லது விவரணத்தின் ஒரு பாகமாக காப்புறுதி என்னும் சொல்லை அல்லது அதன் மருவுதல்கள் எதனையும் அல்லது ஏதேனும் மொழியில் அதனையொத்த வேறு ஏதேனும் சொல்லை, அத்தகைய ஆள் அப்பெயரில் தலைப்பில் அல்லது விவரணத்தில் இலங்கையில் காப்புறுதித்தொழிலைக் கொண்டுநடாத்துகின்றார் எனச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்துதலோ அல்லது ஏதேனும் விலைப்பட்டியல் தலைப்பில் கடிதத் தலைப்பில், அறிவித்தலில் அல்லது விளம்பரத்தில் அத்தகைய பயனுக்கு ஏதேனும் பிரதிப்படியைச் செய்தலோ ஆகாது ;

ஆயினும், இப்பிரிவிலுள்ள எதுவும் காப்புறுதி என்னும் சொல்லை அல்லது அதன் மருவுதல்கள் எவற்றையும் அல்லது ஏதேனும் மொழியில் அதனையொத்த சொல்லை அதன் பெயரின், தலைப்பின் பாகமாக அல்லது அதன் தொழிற்பாடுகளின் விவரணமாகப் பயன்படுத்துவதிலிருந்து காப்புறுதியாளர்களின் அல்லது தரகர்களின் கழகமொன்றைத் தடைசெய்தலாகாது.

97. எவரேனும் காப்புறுதியாளருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அறிவித்தல் அல்லது வேறு ஆவணம் எதுவும் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அடங்கியுள்ள அதன் சார்பிலான ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பணிப்பாளர் அல்லது முகாமையாளர் அல்லது அலுவலர் எவருக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு சேர்ப்பிக்கப்படின் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

98. காப்புறுதியாளரால் கொண்டுநடாத்தப்பட்ட காப்புறுதிதொழில் தொடர்பில் காப்புறுதியாளரால் வழங்கப்பட்ட எந்த நீண்டகாலக் காப்புறுதித் தொழிலின் காப்புறுதியினால் காப்புறுதி செய்யப்பட்ட பணத்தொகை சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சாதிருக்கின்றதோ (உத்தரவாதமளிக்கப்பட்ட ஓர் இலாபம் அல்லது மிகையூதியம் புறநீங்கலாக) அந்த நீண்ட காலத்தொழிலின் காப்புறுதிப்பத்திரமொன்றின் உரிமைக்கோரிக்கையொன்றின் நிர்ணயம் தொடர்பான பிணக்கொன்று காப்புறுதிப்பத்திரத்தின்கீழ் உரிமைக்கோருநருக்கும் காப்புறுதிப்பத்திரத்தை வழங்கிய அல்லது வேறு வகையில் அது தொடர்பில் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காப்புறுதியாளருக்குமிடையில் ஏற்படுமிடத்து, பிணக்கானது உரிமைக்கோருநரின் விருப்புத்தெரிவின்பேரில் சபையின் முடிவுக்காக அதற்கு ஆற்றுப்படுத்தப்படலாம் என்பதுடன் சபை, திறத்தவர்களுக்குத் தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பமொன்றை வைத்தபின்பு, அத்துடன் அது பொருத்தமானதெனக்

கருதக்கூடியவாறான அத்தகைய மேலும் விசாரணைகளைச் செய்தபின்னர் பிணக்கின்மீது, அதன் கட்டளையை ஆக்கலாம்.

99. (1) காப்புறுதியாளர்களாலும் காப்புறுதி முகவர்களாலும் தரகர்களாலும் வழங்கப்படும் விளம்பரங்கள் பொய்யான, தவறான அல்லது பொதுமக்களைப் பிறழ்வரி இட்டுச்செல்லும் சாத்தியமுள்ள ஏதேனும் தகவலை அல்லது விடயப்பொருளைக் கொண்டிருத்தலாகாது.

(2) பொய்யான, தவறான அல்லது பிறழ்வரி இட்டுச்செல்லும் தகவல் அல்லது விடயப்பொருள் அடங்கிய - ஏதேனும் விளம்பரம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்குழுவுக்குப் பணிப்புகளை வழங்குவதற்கான தத்துவம் சபைக்கு இருத்தல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பணிப்புக்களுக்கிணங்க அத்தகைய விளம்பரத்தைத் திருத்துவது அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் கடமையாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் காப்புறுதியாளராலும் காப்புறுதி முகவராலும் தரகராலும் வழங்கப்பட்ட விளம்பரம், கடிதத்தலைப்பு, பெயர்ப்பலகை விவரத்தொகுப்பு ஒவ்வொன்றிலும் அத்துடன் வேறு வெளியீடுகளிலும் காப்புறுதியாளர் காப்புறுதி முகவர் அத்துடன் தரகர் ஒவ்வொருவரினதும் அதனுடைய பெயரையடுத்து அது வியடத்திற்கேற்ப ஒரு காப்புறுதியாளராக, காப்புறுதி முகவரா அல்லத தரகரா என்பதைச் சுட்டிக்காட்டுவது அவர்களது கடமையாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, விளம்பரம் என்பது காப்புறுதி ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுமாறு அல்லது செய்துகொள்ள முனையுமாறு அழைப்புவிடுக்கும் ஓர் ஆவணம் எனப் பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும்படி அல்லது செய்துகொள்ள முனையும்படி ஆட்களை நேரடியாக அல்லது மறைமுகமாக இட்டுச்செல்வதற்கெனத் திட்டமிட்டு வகுக்கப்பட்ட ஏதேனும் தகவல் அடங்கிய ஏதேனும் ஆவணத்தையும் உள்ளடக்கும்.

100. காப்புறுதியாளர் அல்லது தரகர் எவரும் சபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, அது எந்தக் காப்புறுதித்தொழில் தொடர்பில் இசட்டத்தினகீழ் சபையிடமிருந்து பதிவொன்றைப் பெற்றுள்ளதோ அந்தக் காப்புறுதித்தொழிலைத் தவிர்ந்த வேறு காப்புறுதித்தொழில் எதனையும் கொண்டு நடாத்துதல் ஆகாது.

101.(1) இலங்கையிலுள்ள ஆளெவரும், சபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, மீள்காப்புறுதித்தொழில் தொடர்பில் தவிர, இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாத காப்புறுதியாளர் ஒருவருடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காப்புறுதித்தொழில் எதனையும் ஒப்படைத்தலாகாது.

(2) சபையானது, காப்புறுதித்தொழில் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கையையும் தேசிய நலனையும் கருத்திற்கொள்வதன்மீது மாத்திரம் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக எழுத்திலான அங்கீகாரத்தை வழங்கலாம்.

102. (1) காப்புறுதித்தொழிலின் ஏதேனும் கைமாற்றுகை மற்றும் ஒருங்கிணைப்புத் தொடர்பிலான எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் மாவட்ட நீதிமன்றமொன்றினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கும்போது அத்தகைய கைமாற்றுகை மற்றும் ஒருங்கிணைப்புமீதான சபையின் அவதானிப்புரைகளின் பிரதியொன்றும் நீதிமன்றத்திற்கு அதன் பார்வைக்கெனச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபை, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அதன் அவதானிப்புரைகளைச் செய்கையில் சுயேச்சையான விலைமதிப்பீட்டாளரால் சுட்டிக்காட்டப்பட்டவாறு கைமாற்றுகையினதும் ஒருங்கிணைப்பினதும் பயனைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அவசியமானவிடத்து, அத்தகைய அவதானிப்புரையைச் செய்யும் நோக்கத்திற்கு உத்தேச கைமாற்றுகை மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பில் ஏதேனும் மேலதிகத் தகவலையும் ஆவணங்களையும் கோருதலும் வேண்டும்.

(3) சபையின் அவதானிப்புரைகள், கையேற்றல்களும் ஒன்றிணைப்புகளும் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கும் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

103. 1) சபை காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர்களின் பாதுகாப்பு நிதியம் என அறியப்படும் நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும். ; (இது இப்பிரிவில் நிதியம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்). இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டதும் அறிவிடப்பட்டதுமான வரியிலிருந்து தேறிய பணம் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தில் வரவிலிருக்கும் பணம் காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர்களின் பொதுப்பாதுகாப்பிற்கும் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளால் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் திட்டவட்டமான நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் பணம் நல்ல வருவாயொன்றைக் கொடுக்கக்கூடியதும் முதலீட்டைப் பாதுகாக்கக்கூடியவாறானதுமான அத்தகைய சாமர்த்தியமான முறையில் சபையால் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

104. ஆட்கள் குழுவொன்றினால் இச்சட்டத்தின்கீழ் தவறொன்று புரியப்படுமிடத்து, அக்கூட்டிணைப்புக் குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒவ்வொருவரும் அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர், அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடை செய்வதற்கு முறையான எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்ததாக எண்பிப்பாராயின் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

105. (1) சபையானது, விதிகளால் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அது வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

106. ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், அவ்வாண்டின் அதன் நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையொன்றை அமைச்சரின் அங்கீகாரத்திற்கெனச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சரால் அங்கீகரிக்கப்படுவதன்மீது அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தின்முன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

107. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மோட்டார் வாகனக் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குப் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதியாளர் எவரும் மோட்டார் வாகனச் சட்டத்தின் பாகம் VIஎன்பதன் நோக்கங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதியாளர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தொழில்தருநர் பொறுப்புக் காப்புறுதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதியாளர் எவரும் வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தொழில்தருநர்களால் உறப்படக்கூடிய வேலையாட்களுக்கான பொறுப்புக்களுக்கெதிரான காப்புறுதியைப் பொறுப்பேற்பதற்கு அக்கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று அளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

108. (1) இச்சட்ட ஏற்பாடுகளின் அல்லது இதன்கீழ் உருவாக்கப்பட்ட ஏதாவது விதிகள் அல்லது ஒழுங்கு விதிகளின்கீழ் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக விடயத்திற்கேற்ப அத்தகைய உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் அல்லது சபையின் பணிப்பின்பேரில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

(2) சபையால் அல்லது சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் சபையால் உறப்பட்ட செலவுகள் எதுவும் சபையின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையால் பெறப்பட்ட ஏதேனும் செலவு சபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்பேரில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான எவரேனும் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் நீதிமன்றமொன்றில் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எதேனும் செலவு, அத்தகைய செலவு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால், அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவு அவரால் அறவிடப்பட்டாலன்றி சபையின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

109. சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபை உறுப்பினர் எவருக்கெதிராக ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கெதிரான எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

110. சபை இலஞ்ச சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அச்சட்டத்தின் ஏற்பாடுகள் வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

111. சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

112. (1) அமைச்சர், இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினகீழ் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றவோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதிப்படக் கூடியவாறான விரைவில் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதியைப் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

113. (1) ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபத்திரண்டாம் ஆண்டின் 25 ஆம் இலக்க, காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

(2) மேற்படிச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும் -

(அ) நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த காப்புறுதித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கெனப் பதிவுசெய்யப்பட்ட கம்பெனி ஒவ்வொன்றும் அவ்வகுப்பைச் சேர்ந்த காப்புறுதி தொழிலைக்கொண்டுநடாத்துவதற்கு இச்சட்டத்தின ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் காப்புறுதித்தரகர் ஒருவராகத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குப் பதிவுசெய்யப்பட்ட ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் காப்புறுதித்தரகர் ஒருவராகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலிருந்ததாக நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குவிதி அல்லது வழங்கப்பட்ட பணிப்புரை ஒவ்வொன்றும் அத்தகைய ஒழுங்குவிதி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் அல்லது வழங்கப்பட்ட பணிப்புரையால் திருத்தவும்படலாம் அல்லது இல்லாதொழிக்கவும் படலாம் ; அத்துடன்

(ஈ) நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் காப்புறுதிக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவருக்கெதிராக தொடரப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதியன்று ஏதேனும் ஆரம்ப நீதிமன்றத்திலாயினுஞ்சரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்திலாயினுஞ்சரி முடிவுறாதிருப்பதுமான வழக்கு, குற்றவழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றும் சபையால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கொன்றாக அல்லது நடவடிக்கையாகவும் நியமிக்கப்பட்ட தேதியன்று திருப்திப்படுத்தப்படாததாக இருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வழக்கு, குற்ற வழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றும் அது பூர்த்தியாகும்வரை தொடர்ந்து நடத்தப்படலாம் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம் ;

(உ) ஏதேனும் வழக்கில், கருமத்தில், நடவடிக்கையில் அல்லது விடயத்தில் ஏதேனும் நீதிமன்றத்தால் நியாயசபையால் அல்லத வேறு குழுவால் காப்புறுதிக் கட்டுப்பாட்டதிகாரிக்குச் சாதகமாக அல்லது

அவருக்கெதிராகப் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து சபைக்குச் சாதகமாக அல்லத அதற்கெதிராகப் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது அளிப்பாகக் கருதப்படலாம் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் காப்புறுதியாளர் ஒருவராகக் கருதப்பட்ட எவரேனும் காப்புறுதியாளர் ஆயுட்காப்புறுதித் தொழிலைச் செய்வதற்கு நீக்கஞ்செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தவிடத்தும் அத்துடன் நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு அத்தகைய பதிவுத்தேதியிலிருந்து அத்தகைய தொழிலின் மூன்றாண்டுகைளப் பூர்த்திசெய்யும்வரை ஆகக்குறைந்தது ஆண்டிற்கொரு முறையாவது அத்தொழில் தொடர்பில் அதன் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மதிப்பீடொன்று உட்பட அத்தகைய தொழிலின் நிதிநிலைமைபற்றி விலைமதிப்பீட்டாளர் ஒருவரால் புலனாய்வொன்றைச் செய்வித்தல் வேண்டும். அத்துடன் சபையால் அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க பொழிப்பொன்றைச் செய்வித்தலும் வேண்டும். விலைமதிப்பீட்டாளர் அதன் காப்புறுதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்களின் நடப்பு மற்றும் எதிர்பாரா பொறுப்புக்களை ஈடுசெய்வதற்கு ஒதுக்கீடுகள் போதியளவில் உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*114. (1)* இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"விலைமதிப்பீட்டாளர்" என்பது.

(அ) இங்கிலாந்திலுள்ள விலைமதிப்பீட்டு நிறுவகத்தின் அல்லது ஸ்கொத்லாந்திலுள்ள விலைமதிப்பீடுகள் பீடத்தின் இணையுரிமையாளர் ஒருவர் அல்லது சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் உயர்தொழில்சார் விலைமதிப்பீட்டு நிறுவனத்தின் இணையுரிமையாளர் ; அல்லது

(ஆ) இயைபான விலைமதிப்பீட்டு விடயங்களில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட உயர்தொழில்சார் விலைமதிப்பீட்டு நிறுவகங்களுள் ஏதேனுமொன்றின் இணை உறுப்பினர் ஒருவர் என்று பொருள்படும் ;

"தரகர்" என்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டவரும் தரகுக்கட்டணம் அல்லது தரகுப்பணம் என்றவகையில் கொடுப்பனவொன்றை எதிர்பார்த்து காப்புறுதியாளர் அல்லது மீள் காப்புறுதியாளர் ஒருவருடன் காப்புறுதியாளரொருவருக்காக, காப்புறுதிப்பத்திரம் வைத்திருக்கும் ஒருவருக்காக அல்லது காப்புறுதியை அல்லது மீள் காப்புறுதியை முன்மொழிபவர் ஒருவருக்காக, அல்லது அவர் சார்பில் காப்புறுதித்தொழிலை மேற்கொள்வதற்காக இடைநடுவர் ஒருவராகப் பணியாற்றும் காப்புறுதித்தரகர் என்று பொருள்படும்.

"சான்றுப்படுத்தப்பட்டது" என்பதுடன் ஏதேனும் கூற்று, கணக்கு அல்லத விவரத்திரட்டு அல்லது காப்புறுதியாளர் ஒருவரால் அல்லது அவர் சார்பில் கொடுத்துதவப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணெமான்றின் ஏதேனும் பிரதி அல்லது மொழிபெயர்ப்பு தொடர்பில் அத்தகைய கூற்று, கணக்கு அல்லது அப்பிரதி உண்மைப் பிரதியாகும் அல்லது அம்மொழிப்பெயர்ப்பு சரியான மொழிபெயர்ப்பாகும் என்ற பயன்பாட்டிற்கு சான்றிதழொன்று விடயத்திற்கேற்ப காப்புறுதியாளரால் அல்லது அதன் சார்பில் அதியாரமளிக்கப்பட்ட காப்புறுதியாளரின் பிரதான அலுவலரால் அதன்கண் புறக்குறிப்பு செய்யப்பட்டுள்ளது அல்லது அதனுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று பொருள்படும் ;

"உரிமைகோரப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத (ஐபீஎன்ஆர்) உரிமைக்கோரிக்கைகள்" என்பது நிதியாண்டொன்றில் காப்புறுதியாளர் ஒருவரால் வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தின்கீழ் அல்லது எவையேனும் காப்புறுதிப்பத்திரங்களின்கீழ் உறப்பட்டவையும் ஆனால் அறிவிக்கப்படாதவையுமான உரிமைக்கோரிக்கைகள் என்று பொருள்படும் ;

"நிலுவையிலுள்ள உரிமைக்கோரிக்கைகள்" என்பது காப்புறுதிசெய்தவரால் அறிவிக்கப்பட்டவையும் காப்புறுதிப்பத்திரமொன்றின் அல்லது காப்புறுதிப்பத்திரங்களின்கீழ் காப்புறுதியாளர் ஆளானவருமான ஆனால் தீர்க்கப்படாதிருப்பவையுமான எல்லா உரிமைக்கோரிக்கைகளுமாகும் என்று பொருள்படும்;

"காப்புறுதித் தொழிலின் வகுப்புக்கள்" என்பது பொதுக் காப்புறுதித் தொழிலும் நீண்டகாலக் காப்புறுதித் தொழிலிலும் ஆகும் என்று பொருள்படும்.

"அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைப்பொறுப்புக்கள்" என்பது, எந்தக் கடனின் வட்டியுடன் அதன் மீளக் கொடுப்பனவு இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்படுகின்றதோ அந்தக் கடனொன்று தொடர்பில் ஏதேனும் பிணைப்பொறுப்பை உள்ளடக்கும் ;

"அரசாங்கப் பிணைப்பொறுப்புக்கள்" என்பது நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ திரட்டப்பட்ட ஏதேனும் கடன்தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிப்பத்திரங்கள் (திறைசேரி உண்டியல்கள் உட்பட) பங்குத்தொகுதி, கொண்டு வருபவரின் முறிகள், அத்துடன் வேறு ஏதேனும் பிணைப்பொறுப்பு என்று பொருள்படும் என்பதுடன் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள வைப்பீடுகளை உள்ளடக்கும். ஆனால் நாணயத்தாள்களை உள்ளடக்குவதாகக் கருதப்படுதலும் ஆகாது ;

"மொத்தக் கட்டுப்பணம்" என்பது கழிவுகளையும், மீளளிப்புகளையும் தள்ளுபடிகளையும் கழிப்பனவு செய்தபின்னர் ஆனால் இணங்கிக்கொள்ளப்பட்ட மீள்காப்புறுதிக்கு காப்புறுதியாளர் ஒருவரால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான ஏதேனும் கட்டுப்பணத்தை அதிலிருந்து கழிப்பனவு செய்வதற்கு முன்னர் உள்ள கட்டுப்பணம் என்று பொருள்படும்.

"காப்புறுதி முகவர்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் காப்புறுதியாளர் அல்லது தரகர் ஒருவருடன் காப்புறுதி முகவரொருவராகப் பதிவுசெய்யப்பட்டவரும் தரகு ஒன்றிற்குப் பிரதிபயனாக விடயத்திற்கேற்ப அத்தகைய காப்புறுதியாளருக்கு அல்லது தரகருக்கு காப்புறுதித்தொழிலைப் பரிந்து கேட்பவரும் அல்லது பெற்றுக்கொள்பவருமான தனியாள் ஒருவர் என்று பொருள்படும். ;

"காப்புறுதித்தொழில்" என்பது –

(அ) நீண்டகாலக் காப்புறுதித்தொழில் என்று பொருள்படும். அதாவது மனித ஆயுளின்மீது காப்புறுதி ஒப்பந்கங்களைச் செய்துகொள்ளும் அல்லது பேணும் தொழில் ; அத்தகைய ஒப்பந்தங்களில் எந்த ஒப்பந்தங்களின் மூலம் இறப்பின் மீது அல்லது மனித ஆயுளின்மீது ஏதேனும் எதிர்பாரா சம்பவம் நிகழ்வதன்மீது பணக்கொடுப்பனவுக்கு வாக்குறுதியளிக்கப்படுகின்றதோ அந்த ஒப்பந்தத்தையும் அத்துடன் மனித ஆயுளைப் பொறுத்து ஒருதவணைக்குக் கட்டுப்பணத்தின் கொடுப்பனவுக்கு அமைந்த ஒப்பந்தங்களையும் உள்ளடக்கும் ; அத்தகைய ஒப்பந்தங்கள் பின்வரும் துணை வகுப்புக்களைக் கொண்டிருப்பனவாகவும் உள்ளடக்குவனவாகவும் கருதப்படும் : –

(i) ஆயுள் காப்புறுதி –காப்புறுதி ஒப்பந்தங்கள் மனித ஆயுளின்மீது தங்கியிருக்கும்.

(ii) இணைக்கப்பட்ட நீண்டகாலப்பகுதி – அனுகூலங்கள் முற்றாகவோ பகுதியளவிலோ சுட்டியொன்றுக்கு அல்லது ஏதேனும் விவரணத்தினதான சொத்துக்களின் பெறுமதிக்கு அல்லது அவற்றிலிருந்து வரும் வருமானத்திற்கு ஆற்றுப்படுத்துவதன்மூலம் தீர்மானிக்கப்படும். ;

(iii) ஆண்டுத்தொகைகள் – மனித ஆயுளைப் பொறுத்து ஆண்டுத்தொகைகளை அளிப்பதற்கான ஒப்பந்தங்கள் ;

(iv) ஒப்பந்தங்களில் அவ்வாறு குறித்துரைக்கப்பட்டிருப்பின் ஊனம், பல்லின நட்டோத்தரவாதம், விபத்து மற்றும் சுகவீனம் தொடர்பான அனுகூலங்களை அளிப்பதற்கான ஒப்பந்தங்கள் ஆனால் பிரதானமாக அல்லது முழுமையாக (i) (ii) (iii) (iv) (v) (vi) என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் வகையைச்சேர்ந்த காப்புறுதித்தொழில் புறநீங்கலாக ;

(v) நிரந்தர சுகாதாரம் – ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்குப் பணனுறுதியுடையனவையும் காப்புறுதியாளரால் இல்லா தொழிக்க முடியாதவையுமான விபத்தில் அல்லது சுகவீனத்திலிருந்தெழும் இயலாமைமீது குறித்துரைக்கப்பட்ட அனுகூலங்களை வழங்கும் காப்புறுதி ஒப்பந்தங்கள் ;

(vi) மூலதன மீட்பு ஒப்பந்தங்கள் ;

(vii.) ஓய்வூதியக் காப்புறுதிப்பத்திரங்கள் – தனியாட்களுக்கு இளைப்பாறலுக்கு முன்னும் பின்னும் அனுகூலங்கள் வழங்கும் காப்புறுதி ஒப்பந்தங்கள் ;

(ஆ) பொதுக் காப்புறுதிதொழில் என்பது "நீண்டகாலத் தொழில் " என்பதன் வரைவிலக்கணத்திற்கு உட்படாததும் பின்வரும் துணைவகுப்புக்களைக் கொண்டதும் அவற்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுவதுமான எல்லாக் காப்புறுதித்தொழில்கள் என்று பொருள்படும்

(i) "கடற்துறை வான்போக்குவரத்து அல்லது இடைப்போக்குக் காப்புறுதிப்பத்திரம்" என்பது –

(அ) கலங்கள் அல்லது பொறித்தொகுதி, தூண்டில் அல்லது தளபாடம் அல்லது வானூர்திகளின் உபகரணங்கள் மீது ; அல்லது

(ஆ) கலங்களின்மீது எத்தன்மையதுமான விவரணத்தை சேர்ந்த பண்டங்கள், வியாபாரப் பண்டங்கள் அல்லது ஆதனத்தின்மீது ;

(இ) கலங்களின் கேள்வின்மீது அல்லது அவற்றில் அல்லது அவை தொடர்பில் வேறு ஏதேனும் அக்கறையின் மீது ;

(ஈ) மூன்றாம் திறத்தவர்களின் விபத்துக்கள் உட்பட கலங்களின் பாவனையினின்றெழும் அல்லது அது தொடர்பிலான சேதத்திற்கு எதிரான காப்புறுதிப் பத்திரங்கள் என்று ;

(உ) இடைப்போக்கிற்கெதிரான (இடைப்போக்கு கடல் உண்ணாட்டு நீர்நிலை, தரை வான் வழியாகவாயினுஞ்சரி அல்லது பகுதியளவில் ஒரு வழியிலும், பகுதியளவில் மறுவழியில் ஆயினும்சரி) இடைப்போக்கின் ஆரம்பத்திலிருந்து இறுதி முடிவிடம்வரை காப்புறுதியால் மேவப்பட்டதான காப்புறுதி செய்யப்பட்ட இடைப்போக்கின் இடைநேர் விளைவான விபத்துக்கள் உட்பட ஆனால் எந்த விபத்துக்களின் காப்புறுதி மோட்டார் வாகனக் காப்புறுதித் தொழிலாக இருக்கின்றதோ அந்த விபத்துக்கள் உள்ளடங்காத காப்புறுதிப்பத்திரம் என்று ;

(ஊ) எந்த விபத்துக்களின் காப்புறுதி வழமையாக இந்த வரைவிலக்கணத்தின் முற்போந்த பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறு ஏதேனும் அத்தகைய தெர்ழிலுடன் சேர்ந்ததாக அல்லது அதன் இடைநேர்விளைவானதாக பொறுப்பேற்கப்படுகின்றதோ அந்தக் காப்புறுதியின் விபத்துக்கள் எவற்றிற்கும் எதிரான காப்புறுதிப்பத்திரம் என்று பொருள்படும்.

(ii) தீ விபத்துக் காப்புறுதித்தொழில் அதாவது, இடைநேர்விளைவாகத் தவிர வேறு வகையில், தீ விபத்துக் காப்புறுதிப்பத்திரங்களில் எந்த விபத்துக்களுக்கெதிராக காப்புறுதி செய்யப்படுகினற்தோ அந்த விபத்துக்களில் வழமையாக உள்ளடக்கப்படும் தீயினால் விளைவிக்கப்படும் அல்லது அதற்கு இடைநேர்விளைவான இழப்பிற்கு எதிராக வேறு வகுப்பைச் சேர்ந்த காப்புறுதிதொழிலை, காப்புறுதி ஒப்பந்தத்தைப் பயனுறுத்தும் தொழில் ;

(iii) மோட்டார் வாகனக் காப்புறுறுதி, அதாவது மூன்றாம் திறத்தவரின் விபத்து உட்பட, மோட்டார் வாகனங்களின் பாவனையிலிருந்து அல்லது அது தொடர்பாக எழும் மோட்டார் வாகனங்களின் இழப்புக்கு அல்லது சேதத்திற்கு எதிரான காப்புறுதி ஒப்பந்தங்களைப் பயனுறுத்தும் தொழில்

(iv) ஊழியர் பொறுப்புக் காப்புறுதித்தொழில் அதாவது, வேலையாட்களுக்கு அவர்களது தொழிலில் நட்டஈட்டை அல்லது சேதங்களைச் செலுத்தும் பொறுப்புக்கெதிராக தொழில்தருநர்களைக் காப்புறுதி செய்யும் காப்புறுதிப்பத்திரங்களிளின்கீழ் பொறுப்பை வழங்குதல் அல்லது பொறுப்பேற்றல் ;

(v) ஆளுக்குரிய விபத்துக் காப்புறுதி, நன்னம்பிக்கை உத்தரவாதக் காப்புறுதி, கொள்ளையடித்தல் தொடர்பான காப்புறதி, இடைப்போக்கிலுள்ள பணத்தின் காப்புறுதி, பெட்டகத்திலுள்ள பணத்தின் காப்புறுதி ஒப்பந்தக்காரர்களின் முழு விபத்துக் காப்புறுதி, நிறுவுகையின் முழு விபத்துக் காப்புறுதி, இலத்திரனியல் கணணிக் காப்புறுதி, கொதிகலன் காப்புறுதி, பொறித்தொகுதி செயலிழப்புக் காப்புறுதி என்பன உட்பட ஆனால், பிரதானமாக அல்லது முழுமையாக (i), (ii), (iii), (iv), என்னும் உட்பந்திகளில் அடங்கியுள்ள ஏதேனும் வகையை அல்லது எவையேனும் வகைகளைச் சேர்ந்தவைகளும் நீண்டகால இயல்பினதான ஒப்பந்தங்களை ஈடுபடுத்தும் "நீண்டகாலத் தொழில்" என்பதன் வரைவிலக்கணத்திற்குட்பட்ட வகுப்பைச் சேர்ந்தவைகளுமான காப்புறுதித் தொழில் புறநீங்கலாக நானாவித காப்புறுதி தொழில் ;

" காப்புறுதியாளர்" என்பது, இச்சட்டத்தின ஏற்பாடுகளின்கீழ் இலங்கையில் காப்புறுதித் தொழிலைக்

கொண்டு நடாத்துவதற்கெனப் பதிவுசெய்யப்பட்டவொரு கம்பெனி என்று பொருள்படுவதுடன் 113 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட கம்பெனியொன்றையும் உள்ளடக்கும் ;

"உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கி என்று பொருள்படும். ;

"உள்ளூர் அதிகாரசபை பிணைப்பொறுப்பு" என்பது, இலங்கையிலுள்ள ஏதேனும் உள்ளூர் அதிகார சபையால் அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்திற்கிணங்க வழங்கப்படக்கூடிய ஏதேனும் பிணைப்பொறுப்பு என்று பொருள்படும். ;

" நிலுவையிலுள்ள தேறிய உரிமைக்கோரிக்கைகள்" என்பது, காப்புறுதி செய்யப்பட்டவரால் அறிவிக்கப்பட்டவையும் காப்புறுதிப்பத்திரமொன்றின் அல்லது காப்புறுதிப்பத்திரங்களின்கீழ் காப்புறுதியாளரின் பொறுப்பாயிருப்பவையும் ஆனால் தீர்க்கப்படாதிருப்பவையுமான மீள் காப்புறுதி அறிவீடுகள் கழிந்த எல்லா உரிமைக்கோரிக்கைகளுமாகும் என்று பொருள்படும் ;

"தேறிய கட்டுப்பணம்" என்பது, மொத்தக் கட்டுப்பணத்திலிருந்து, இணங்கிக் கொள்ளப்பட்ட மீள் காப்புறுதிக் காப்புறுதியாளரால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான ஏதேனும் கட்டுப்பணத்தை கழிப்பனவு செய்தபின்னர் மொத்தக் கட்டுப்பணத்தின் மிகுதி என்று பொருள்படும் ;

"தேறிய, சம்பாதிக்கப்படாத கட்டுப்பணம்" என்பது, காப்புறுதியாளர் ஒருவரின் நிதியாண்டொன்றின் முடிவுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட காப்புறுதி ஒப்பந்தமொன்றின்கீழ் அத்தகைய நிதியாண்டின் முடிவின் பின்னர் அத்தகைய காப்புறுதியாளரால் ஏற்கப்படவுள்ள விபத்து தொடர்பிலான கட்டுப்பணங்களிலிருந்து அந்நிதியாண்டின் முடிவிலுள்ளவாறு ஒதுக்கப்பட்ட தொகை என்று பொருள்படும் ;

"பங்குபற்றும் காப்புறுதிப் பத்திரங்கள்" என்பது அத்தகைய காப்புறுதிப் பத்திரங்களிலிருந்து எழும் மிகையில் பங்கொன்றுக்கு தொடர்ச்சியாக உரித்துடையதாகும் ஒரு காப்புறுதியாளரால் வழங்கப்படும் காப்புறுதிப் பத்திரங்கள் என்று பொருள்படும்.

"காப்புறுதிப்பத்திரம்" என்பது ;

(அ) நீண்டகாலக் காப்புறுதித்தொழில் தொடர்பில் மனித ஆயுளின்மீது ஆண்டுத்தொகையொன்றைச் செலுத்துவதற்கான ஒப்பந்தமொன்றுக்குச் சான்றளிக்கும் சாதனமொன்றை உள்ளடக்கும் ;

(ஆ) முறி முதலீட்டுத் தொழில் தொடர்பில் காப்புறுதியாளருடனான ஒப்பந்தத்திற்குச் சான்றளிக்கும் ஒரு முறியை, சான்றிதழை, பற்றுச்சீட்டை அல்லது வேறு சாதனத்தை உள்ளடக்கும் ; அத்துடன்

(இ) ஏனைய வகுப்புக்களைச் சேர்ந்த காப்புறுதித்தொழில் தொடர்பில், எந்தச் சாதனத்தின்கீழ் அப்போதைக்கு உளதாம் பொறுப்பொன்று ஏற்கனவே திரண்டுள்ளதோ அந்தச் சாதனத்தை அல்லது எந்தச் சாதனத்தின்கீழ் ஏதேனும் பொறுப்பு திரளக்கூடுமோ அந்தச் சாதனத்தை உள்ளடக்கும் ;

"காப்புறுதிப்பத்திரம் உடையவர்" என்பது காப்புறுதியாளருடன் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு அப்போதைக்கு சட்டபூர்வமாக காப்புறுதிப்பத்திரம் உடையவர் என்று பொருள்படும் ;

"கம்பனிகள் பதிவாளர்" என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 423 ஆம் பிரிவின்கீழ் கம்பனிகள் பதிவாளராகச் செயலாற்றுவதற்காகப் பெயர்குறித்து அல்லது பதிவியிலிருந்து நியமிக்கப்பட்ட ஆள் என்று பொருள்படும் என்பதுடன் அப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் பிரதிப் பதிவாளரையும் அல்லது உதவிப் பதிவாளரையும் உள்ளடக்கும் ;

"மீள் காப்புறுதி" என்பது, ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் அல்லது காப்புறுதிப்பத்திரத்தின்கீழ் உறப்பட்ட காப்புறுதியாளர்களின் பொறுப்பொன்றை மீள் காப்புறுதியாளர் ஒருவருக்குக் கைமாற்றுதல் என்று பொருள்படும். ;

"இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருள்படும் ;

"தொழில்நுட்ப ஒதுக்கீடு" என்பது, சம்பாதிக்கப்படாத தேறிய கட்டுப்பணம், முடிவுறாத விபத்துக்களுக்குச் செய்யப்பட்ட ஏற்பாடு, நிலுவையிலுள்ள தேறிய உரிமைக்கோரிக்கைகள், உறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத ஒதுக்கீட்டு உரிமைக்கோரிக்கைகள் (ஐபீஎன்ஆர்) எவையேனும் எதிர்பாரா ஒதுக்கீடுகள் என்பவற்றை எவையேனும் பிற்போடப்பட்ட கொள்ளல் செலவுகளைக் கழித்து உள்ளடக்கும் ;

"முடிவுறாத விபத்துக்கள்" என்பது காப்புறுதியாளர் ஒருவரின் நிதியாண்டின் முடிவிற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்தின்கீழ் அத்தகைய நிதியாண்டின் முடிவின்பின்னர் அத்தகைய காப்புறுதியாளரால் ஏற்கப்படவுள்ள விபத்துக்கள் தொடர்பில் (சம்பாதிக்கப்படாத தேறிய கட்டுப்பணங்களுக்கு மேலதிகமாக) அந்நிதியாண்டின் முடிவில் ஒதுக்கப்படும் தொகை என்று பொருள்படும்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ; ஆளொருவர்

(அ) அவ்வகுப்பைச் சேர்ந்த ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தை அல்லது ஒப்பந்தத்தை அப்போதைக்கு இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு வழங்குவாராயின் அல்லது அத்தகைய ஆளுடன்சேர்ந்து அதன் கீழான பொறுப்பைப் பொறுப்பேற்பாராயின் ; அல்லது

(ஆ) அத்தகைய முனைவு எவரேனும் அத்தகைய ஆளுக்கு நேரடியாகவாயினுஞ்சரி அல்லது பொதுவில் எவரேனும் அத்தகைய ஆளுக்கு ஏதேனும் விளம்பரத்தின், புத்தகத்தின் துண்டுப்பிரசுரத்தின் அல்லது எத்தன்மையதுமான ஏதேனும் ஆவணத்தின் வெளியீடு, அனுப்புகை அல்லது பரப்புதல் மூலமாயினுஞ்சரி ஏதேனும் காப்புறுதிப்பத்திரத்தை அல்லது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அல்லது அதன்கீழ் பொறுப்பை பொறுப்பேற்பதற்கு வாய்மூலமாகவாயினுஞ்சரி, எழுத்துமூலமாகவாயினுஞ்சரி முனைவராயின் ; அல்லது

(இ) மேற்கூறப்பட்டவாறு ஏதேனும் முனைவைச் செய்வதற்கு எவரேனும் ஆளை அத்தகைய வேறு ஆளுக்கு ஏதேனும் வேதனம் செலுத்தப்பட்டதாயினுஞ்சரி, செலுத்தப்படற்பாலதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி தொழிலுக்கமர்த்துவராயின், ஈடுபடுத்துவாராயின் அல்லது வேறேதேனும் முறையில் செய்விப்பாராயின் அல்லது ஊக்குவிப்பாராயின்

அத்தகைய ஆள் இலங்கையில் ஏதேனும் வகுப்பினைச் சேர்ந்த காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதாக அல்லது நிறைவேற்றுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

115.இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க, இலங்கை வங்கி (திருத்தச்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க, வங்கி வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் (397ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 7ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

"(1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனமானது, ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபா கொண்ட ஐம்பது மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஐம்பது பில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்"

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "ஒன்றில் 17ஆம் பிரிவில் அல்லது 19ஆம் பிரிவில் குறித்துரைப்பட்டுள்ளவாறாக" எனும் சொற்களுக்குப் பதிலாக " 17ஆம் பிரிவில் அல்லது 17அ என்னும் பிரிவில் அல்லது 19ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக" எனும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) " 17ஆம் பிரிவிற்கிணங்க " எனும் சொற்களுக்குப் பதிலாக, " 17ஆம் பிரிவிற்கு அல்லது 17அ எனும் பிரிவிற் கிணங்க " எனும் சொற்களை இடுவதன் மூலம்,

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

"அசையா ஆதனத்தைக் கொள்ளுவதற்கு முகாமையாளருக்கு அதிகாரமளித்தல்.

17. இருபதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சபையானது, எழுத்தில் பதியப்பட வேண்டிய தீர்மானத்தின் மூலம் தீர்மானத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளை, எக்கடன், மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதி தொடர்பில் தவறுகை செய்யப்பட்டுள்ளதோ அவ்வேதேனும் கடன், மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதிக்கான பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனம் எதனிலும் உட்புகுந்து அதனைக் கொள்ளுவதற்கும் அத்தகைய ஆதனத்தை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் அவர் தவறுகையைப் புரிந்திராவிடின் ஈடுவைப்பவரினால் பிரயோகிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அதே தத்துவங்களை அத்தகைய ஆதனத்தின் கட்டுப்பாட்டிலும் முகாமையிலும் பிரயோகிப்பதற்கு அதிகாரமளிக்கலாம்."

5. பின்வரும் பிரிவானது 17ஆம் பிரிவுக்குப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ எனும் பிரிவாகப் பயன்கொண்டதாதலும் வேண்டும் :-

"அசையும் ஆதனத்தை கைப்பற்றுவதற்கு ஆளுக்கு அதிகாரமளித்தல்.

17அ. இருபதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, எழுத்தில் பதியப்பட வேண்டிய தீர்மானத்தின் மூலம், தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளுக்கு எக்கடன், மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதி தொடர்பில் தவறுகை செய்யப்பட்டதோ அவ்வேதேனும் கடன், மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதிக்கான பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசையும் ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவானது, "அதிகாரமளிக்கலாம் " எனும் சொல்லுக்குப் பதிலாக, "அதிகாரமளிக்கலாம் என்பதுடன் , அதன் பின்னர் கடன் எடுத்தவர் அல்லது வங்கிக்கு ஈடுவைத்த தேதிக்குப் பின்னர் செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட கடனெடுத்தவருக்குள்ள மற்றும் ஆதனத்திலுள்ள உரிமை,

உரித்து அல்லது அக்கறையின் எத்தன்மைத்தான கையுதிர்ப்பு எதற்கூடாகவும் அல்லது எதன் கீழும் உரிமைகோருகின்ற எவரேனும் ஆள், ஏதேனும் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட தீர்மானத்தை அல்லது பிள்ளையை விற்பனையை எத்தன்மைத்தான காரணம் எதற்காகவும் செல்லுபடியற்றதாக்குவதற்காக பிரேரணை எதனையும் கொண்டுவருவது அவருக்குத் தகுதியுடையதாகாது என்பதுடன் நீதிமன்றம் எதுவும் அத்தகைய விண்ணப்பத்தை ஏற்றுக் கவனித்தலும் ஆகாது" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "17ஆம் மற்றும் 19ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள்" எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "17, 17அ மற்றும் 19 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள்" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :-

(2) (அ) (i) கடனெடுத்தவர் இறந்திருக்குமிடத்து;

(ii) அவர் இறந்து மூன்று மாத காலப்பகுதியினுள் அவரது இறப்புப்பற்றி எழுத்தில் வங்கிக்கு அறிவித்திருக்குமிடத்து ; அத்துடன்

(iii) அவரது இறுதிவிருப்பாவணத்தின் மரண சாதன அதிகாரப்பத்திரம் அல்லது அவரது மரணச்சொத்துக்கான நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் வழங்கப்பட்டிராதிருக்குமிடத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது அத்தகைய ஆதனமானது அமைந்துள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம், வங்கியினால் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் நீதி மன்றம் கட்டளையிடப்படக்கூடியவாறான, ஏதேனும் இருந்தால் அத்தகைய ஆட்களுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைச் சேர்ப்பித்த பின்னரும், அத்துடன் மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்குவது அல்லது நிருவாகத் தத்துவப்பத்திரங்கள் வழங்குவது, முறைகேடாகத் தாமதமாகும் எனத் திருப்திப்பட்டால், இப்பிரிவின் நோக்கங்களுக்காக கடனெடுத்தவரின் மரணச் சொத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆளொருவரை நியமிக்கலாம்.

(ஆ) கடனெடுத்தவர் இறந்திருக்குமிடத்தும் அவரது இறப்பின் பின் மூன்று மாத காலப்பகுதியினுள் அவரது இறப்புப்பற்றி எழுத்தில் அறிவித்திருக்குமிடத்தும், இப்பிரிவின்கீழ் அவரது மரணச் சொத்திற்கான பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டாலன்றியும் நியமிக்கப்படும் வரையும் 17ஆம் பிரிவில் அல்லது 17அ எனும் பிரிவில் அல்லது 19ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக சபையானது நடவடிக்கை எடுத்தல் ஆகாது.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

"ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தைக் விற்பதற்கான சபையின் தீர்மானம் பற்றிய அறிவித்தல்.

21. ஏதேனும் ஆதனத்தின் விற்பனையை அதிகாரமளிக்கின்ற 19ஆம் பிரிவின்கீழான ஒவ்வொரு தீர்மானம் பற்றிய அறிவித்தலும் கசெற்றில் வெளியிடப்படுவதற்கு மேலதிகமாக, மூன்று நாளாந்த செய்திப் பத்திரிகைகளில் முறையே சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிவித்தலின் பிரதிகள் கடனெடுத்தவரினால் வங்கிக்குக் கொடுத்துதவப்பட்ட முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதலும் வேண்டும்.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டம்

[2000ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**நிதி குத்தகைக்கு விடும் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும்; குத்தகை கொடுப்பவர்களினதும், குத்தகைக்கு எடுப்பவர்களினதும் அத்துடன் உபகரணம் வழங்குபவர்களினதும், உரிமைகளை குறித்துரைப்பதற்கும் கடமைகளை குறித்துரைப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச் சட்டம் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் 1

**நிதி குத்தகைக்கு விடும் தொழில்களைப் பதிவு செய்தல்**

2. நாற்பத்து நாலாம் பிரிவுக்கு அமைய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதற்கென வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றின் அதிகாரத்தின் கீழ்த் தவிர, ஆளெவரும் நிதி குத்தகைக்கு விடும் தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

3. ஆள் ஒருவர், அத்தகைய ஆள் –

(அ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாக அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கி ஒன்றாக;

(ஆ) 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நிதிக் கம்பனியொன்றாக; அல்லது

(இ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆகக் குறைந்தளவு வழங்கப்பட்ட மற்றும் செலுத்தப்படவுள்ள மூலதனத்தைக் கொண்டிருக்கின்ற 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாக,

இருந்தாலொழிய, இச் சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது

4. (1) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று, பணிப்பாளரினால் அந்நோக்கத்துக்கௌ வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பணிப்பாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பத்துடன் சேர்த்துப் பின்வருவன அனுப்பப்படுதலும் வேண்டும்:–

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் அல்லது உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றின் விடயத்தில், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ்ப் பணச்சபையினால் வழங்கப்பட்டதும், விண்ணப்பம் செய்யப்படும் தேதியன்று வலுவில் இருக்கின்றதுமான உரிமத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி;

(ஆ) நிதிக் கம்பெனியொன்றின் விடயத்தில், 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பணச்சபையினால் வழங்கப்பட்டதும், விண்ணப்பம் செய்யப்படும் தேதியன்று, வலுவில் இருக்கின்றதுமான உரிமத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி;

(இ) பகிரங்கக் கம்பெனியொன்றின் விடயத்தில் –

(i) கம்பெனியின் அமைப்புப் புறவிதிகள் மற்றும் அமைப்பு அகவிதிகள் ஆகியவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;அத்துடன்

(ii) கம்பெனியின் கூட்டிணைப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;

(ஈ) 7ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டிருக்கும் செயற்பாட்டுக் கைநூலின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ;

(உ) விதித்துரைக்கப்பட்டவாறான விண்ணப்பக்கட்டணம் ; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

(2) பணிப்பாளர், அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, விண்ணப்பம் பற்றித் தீர்மானிப்பதற்கு, அத்தகைய மேலதிகத் தகவலை அல்லது விபரங்களைக் கொடுத்துதவுமாறு விண்ணப்பகாரர் ஒருவரைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஒராம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில், அல்லது (1) ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவின் கீழ்க் கொடுத்துதவப்பட்ட ஆவணமொன்றில், தகவலொன்றில் அல்லது விபரங்களில் அவ்வாளின் அறிவுக்கெட்டியவரை எவையேனும் முக்கிய விபரங்களில், பொய் அல்லது தவறாக இட்டுச் செல்லும் எனத் தெரிந்துகொண்டே, கூற்றெதனையும் செய்கின்ற ஆளொருவர், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

5. (1) செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் தரப்பட்ட தகவலையும் 4ஆம் பிரிவின் கீழ்க் கொடுத்துதவப்பட்ட ஆவணங்களையும் தகவலையும் அத்துடன் விபரங்களையும் பரிசீலித்ததன்மேலும், அவசியமானதெனப் பணிப்பாளர் கருதக் கூடியவாறான அத்தகைய புலனாய்வைச் செய்ததன் பின்னரும், நிதி குத்தகைக்குவிடும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு விண்ணப்பகாரர் தகுந்தவரெனவும், தகுதி வாய்ந்தவரெனவும் பணிப்பாளர் திருப்திப்படுகின்றவிடத்து, தேசிய பொருளாதாரத்தின் அக்கறைகளைக் கவனத்திற் கொண்டு, பணிப்பாளர் –

(அ) விண்ணப்பகாரரைப் பதிவு செய்யலாம்; அத்துடன்

(ஆ) விண்ணப்பகாரருக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஆளொவ்வொருவரும், இதனகத்துப் பின்னர் “பதிவு செய்யப்பட்ட தாபனம்” எனக்குறிப்பீடு செய்யப்படும்) “பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் தாபனம்” ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட தாபனம் ஒவ்வொன்றும், அதற்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை, அத்தகைய தாபனத்தின் பிரதான தொழிலிடத்தில், துலாம்பரமான ஓரிடத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர், பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தாபனத்தினதும் இடாப்பு ஒன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

6. பதிவு செய்யப்பட்ட தாபனம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் முடிவுற்றதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வருடாந்தப் பதிவுக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

7. நாலாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயற்பாட்டுக் கைநூல் பின்வருவன தொடர்பிலான விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) நிதிக் குத்தகையொன்று நீடித்திருக்கும் காலம்;

(ஆ) நிதிக் குத்தகைமீது வருமதியான கொடுப்பனவுகளை அறவிடும் வழிமுறைகள்;8.

(இ) நிதிக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்ட உபகரணம் தொடர்பிலான உரிமைக் கோரிக்கைகளுக்கு எதிராக குத்தகை எடுத்தவரின் உரிமையை குத்தகை கொடுத்தவர் பாதுகாத்தல்;

(ஈ) நிதிக் குத்தகை முடிவுற்றதன் பின்னர், அத்தகைய உபகரணத்தைக் கையுதிர்த்தல் ;அத்துடன்

(உ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

8. பணிப்பாளரின் முன்னங்கீகாரம் இன்றி, பதிவு செய்யப்பட்ட தாபனமொன்று –

(அ) நாலாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலிற் தரப்பட்டுள்ள விபரங்களை மாற்றுதலோ அல்லது மாறுபடுத்துதலோ ஆகாது; அல்லது

(ஆ) அத்தகைய தாபனம் கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, அதன் அமைப்புப் புறவிதிகளையும் அமைப்பு அகவிதிகளையும் மாற்றுதல் ஆகாது.

9. (1) பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் பதிவானது, பின்வரும் ஏதேனும் ஓர் ஏதுவின் மீது அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது பணிப்பாளரினால் இடைநிறுத்தம் செய்யப்படலாம் அல்லது இல்லாததாக்கப்படலாம்:-

(அ) பதிவு செய்யப்பட்ட பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தொழிலை ஆரம்பிக்கத் தவறுதல்;

(ஆ) நிதி குத்தகைக்குவிடும் தொழிலைக் கொண்டுநடாத்துதலினின்றும் ஒழிதல்;

(இ) கடன் தருநர்களுடன் ஏதேனும் கூட்டமைதி ஒப்பந்தத்தை அல்லது ஒழுங்கைச் செய்வதற்கும் உத்தேசித்தல் அல்லது செய்திருத்தல் அல்லது ஒழித்துக்கட்டத் தொடங்கியிருத்தல் அல்லது ஒழித்துக் கட்டப்பட்டுக் கொண்டிருத்தல் அல்லது வேறுவகையில் கலைக்கப்பட்டிருத்தல்.

(ஈ) குத்தகை எடுத்தவர்களின் அக்கறைகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவாறான முறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்துதல்;

(உ) விடயத்துக்கேற்றவாறு, அதன் குத்தகை எடுத்தவர்களுக்கான, கடன்தருநர்களுக்கான அல்லது வழங்குநர்களுக்கான அதன் கடப்பாடுகளைத் திருப்திப்படுத்த இயலாதிருத்தல் ;

(ஊ) இச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது இச் சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் பணிப்பாளரால் சுமத்தப்பட்ட ஏதேனும் நிபந்தனையை அல்லது விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புகளை மீறிச்செயலாற்றுதல்;

(எ) பதிவுக்கான அதன் விண்ணப்பத்தில் பொய்யான, தவறாக இட்டுச் செல்லுகின்ற அல்லது செம்மையற்ற தகவலை மறைத்தல் அல்லது முக்கியமான நிகழ்வுகளைக் கொடுத்துதவுதல் வெளிப்படுத்தத் தவறுதல்; அல்லது

(ஏ) அத்தகைய தாபனமானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாக, உரிமம்பெற்ற விசேட வங்கியொன்றாக அல்லது உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனியொன்றாக இருக்கின்றவிடத்து, அத்தகைய தாபனத்துக்கு வழங்கப்பட்ட உரிமம், விடயத்துக்கேற்றவாறு, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற்சட்டத்தின்கீழ் அல்லது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ், அதை வழங்கிய அதிகாரசபையினால் இல்லாதொழிக்கப்பட்டிருத்தல்.

(2) பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஓர் ஏதுக்காக அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஏதுக்களுக்காக :-

(அ) குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் பதிவை இடைநிறுத்தம் செய்யலாம். இவ்விடைநிறுத்தம் செய்யும் காலப்பகுதியானது மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது. அத்துடன் தாபனமானது, இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலப்பகுதியின்போது, ஏதேனும் நிதிக் குத்தகை உடன்படிக்கையைச் செய்து கொள்ளுதலாகாது; அல்லது

(ஆ) பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் பதிவை இல்லாதாக்கலாம். அத்துடன் அத்தாபனமானது, அதன்பின்னர், இல்லாதாக்கல் பயனுக்குவருகின்ற தேதிக்கு முன்னரான தேதியன்று அது உடன்படிக்கை செய்துகொண்டிருந்தவாறான அத்தகைய தொழில் தவிர்ந்த வேறு ஏதேனும் நிதி குத்தகைக்கு விடும் தொழிலைக் கொண்டுநடாத்துதல் ஆகாது. என்பதுடன் அத்தகைய தொழிலைப் பூரணப்படுத்துகின்ற நோக்கத்துக்காக, அத்தாபனமானது, பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

10. (1) பணிப்பாளர், 9ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதுக்களில் ஏதேனும் ஒன்றின் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஏதுக்களின் காரணமாகப் பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் பதிவை இடைநிறுத்தம் செய்வதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு முன்னர், அத்தகைய தாபனத்துக்கு, முன்னப்பட்ட இடைநிறுத்தத்துக்கான அல்லது இல்லாதாக்குவதற்கான அத்தகைய நிகழ்வுகள் மற்றும் ஏதுக்கள் பற்றி அதற்கு அறிவிக்கின்ற எழுத்திலான அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட தாபனமொன்று, (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக் கொண்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள், அதன் பதிவானது ஏன் இல்லாதாக்கப்படக்கூடாது அல்லது இடைநிறுத்தம் செய்யப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டலாம்.

(3) பதிவு செய்யப்பட்ட தாபனமொன்று (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் காரணம் காட்டத் தவறுகின்றவிடத்து, பணிப்பாளர், விடயத்துக்கேற்றவாறு பதிவை இடைநிறுத்தல் செய்யலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(4) பதிவு செய்யப்பட்ட தாபனம், (1) உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் காரணம் காட்டுகின்றவிடத்து சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களைப் பரிசீலித்த பின்னர், பணிப்பாளர்-

(அ) தாபனமானது, அதன் பதிவு ஏன் இடைநிறுத்தல் செய்யப்படலாகாது அல்லது இல்லாதாக்கப்படலாகாது என்பதற்குப் போதுமான காரணம்காட்டியிருக்கின்றது. எனத் திருப்திப்பட்டால், அவர் பதிவை இடைநிறுத்தம் செய்வதை அல்லது இல்லாதாக்குவதைத் தவிர்க்கலாம்.; அல்லது

(ஆ) அதன் பதிவு ஏன் இடைநிறுத்தம் செய்யப்படலாகாது அல்லது இல்லாதாக்கப்படலாகாது என்பதற்கு போதுமான காரணம் காட்டியிருக்கவில்லையெனத் திருப்திப்பட்டால் அவர் பதிவை இடைநிறுத்தம் செய்யலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழான அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்பாளரின் முடிபானது, பதிவு செய்யப்பட்ட தாபனத்துக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது, அத்தகைய முடிபு எத்தேதியன்று தாபனத்துக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ அத்தேதியன்று பயனுக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் 11

## குத்தகை கொடுப்பவர்கள், குத்தகை எடுப்பவர்கள் அத்துடன் வழங்குநர்கள் ஆகியோரின் கடமைகள்

11. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிதிக் குத்தகை ஒன்றின் கீழ்க் குத்தகை எடுப்பவருக்கு வழங்கப்பட்ட உபகரணத்தின் குழப்பமற்ற, அமைதியான உடைமைக்கான உரிமை குத்தகை எடுப்பவருக்கு இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உரிமையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது குத்தகை கொடுக்கும் ஒருவரின் கடமையாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், குத்தகை எடுத்த ஒருவர் செய்த ஏதேனும் செயல் காரணமாக அல்லது ஏதேனும் செயலைச் செய்யாது விட்டுவிட்டதன் காரணமாக, உபகரணத்தின் குழப்பம் அற்ற, அமைதியான உடைமைக்கு உரித்தாவதிலிருந்து இல்லாதொழிந்திருக்கின்றவிடத்து, ஏற்புடையனவாதலாகாது.

12. (அ) நிதிக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்ட உபகரணத்தைச் சரியான முறையில் பேணுதல்;

(ஆ) அது எந்நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ, அந் நோக்கத்திற்காக அதனைப் பயன்படுத்துதல்; அத்துடன்

(இ) நியாயமான உராய்வுக்கும் தேய்வுக்கும் மற்றும் நிதிக் குத்தகைக்கான திறத்தவர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எவையேனும் திரிபுகளுக்கும் அமைவாக, குத்தகை எடுத்தவருக்கு அது எந்த நிலைமையில் ஒப்படைக்கப்பட்டதோ அந்த நிலைமையில் அதனை வைத்திருத்தல்,

குத்தகை எடுத்த ஒருவரின் கடமையாதல் வேண்டும்.

13. (1) நிதிக் குத்தகையொன்றில் குறித்துரைக்கப்பட்ட உபகரணமொன்று குத்தகை எடுத்த ஒருவரிடம் அதன் ஒப்படைப்புக்காக அத்தகைய குத்தகையின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டிருக்காதவிடத்து, அல்லது அத்தகைய நேரத்துக்குப் பின்னர் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றவிடத்து , அல்லது ஒப்படைக்கப்பட்ட உபகரணம் அத்தகைய உபகரணம் தொடர்பிலான வழங்கல் உடன்படிக்கையிலுள்ள நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள் அல்லது விபரக் குறிப்புகள் என்பவற்றுக்கு இணங்க இல்லாதிருக்கின்றவிடத்து குத்தகை எடுத்தவர் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உபகரணத்தை நிராகரிக்கலாம் என்பதுடன் அத்தகைய நிதிக் குத்தகையை முடிவுறுத்தவும் செய்யலாம்.

(2) குத்தகை எடுத்த ஒருவர் (1)ஆம் உட்பிரிவின் கீழ் நிதிக் குத்தகையொன்றை முடிவுறுத்துகின்றவிடத்து, குத்தகை எடுத்தவர், அத்தகைய நிதிக் குத்தகையின் கீழான கொடுப்பனவைச் செய்வதனை நிறுத்தலாம் என்பதுடன் மேலும் நிதிக் குத்தகையின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தை, பின்வருவன தொடர்பில் குத்தகை கொடுத்தவரால் பிடித்து வைக்கப்பட்ட ஏதேனும் நியாயமான பணத்தைக் கழித்ததன் பின்னர், குத்தகை கொடுத்தவரிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும் :-

(அ) முடிவுறுத்தலுக்கு முன்னராகக் குத்தகை எடுத்தவரால் பெறப்பட்ட எவையேனும் நன்மைகள்;

(ஆ) குத்தகை தொடர்பில் குத்தகை கொடுத்தவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள்; அத்துடன்

(இ) குத்தகை எடுத்தவரின் தவறுகை ஒன்று அல்லது அசட்டையீனம் காரணமாக எழுகின்ற உபகரணத்தின் பெறுமதியிலான ஏதேனும் இழப்பு.

(3) நிதிக் குத்தகையொன்றில் குறித்துரைக்கப்பட்டதும், ஒப்படைக்கப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் குத்தகை எடுத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டதுமான உபகரணமொன்று அத்தகைய உபகரணம் தொடர்பிலான வழங்கல் உடன்படிக்கையிலுள்ள நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள் அல்லது விபரக் குறிப்புக்கள் என்பவற்றுக்கு இணங்க இல்லாதிருக்கின்றவிடத்து அல்லது உபகரணம் ஒப்படைக்கப்படுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் அது ஒப்படைக்கப்பட முடியாமல் போகலாம் என நம்புவதற்கான காரணம் குத்தகை கொடுத்தவருக்கிருக்கின்றவிடத்து, குத்தகை கொடுத்தவர், வழங்கல் உடன்படிக்கையில் உள்ள நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள்அல்லது விபரக் குறிப்புக்கள் என்பனவற்றுடன் இணங்கியிருக்கின்ற வேறு உபகரணத்தைக் குத்தகை எடுத்தவருக்கு வழங்கலாம் என்பதுடன் நிதிக் குத்தகை வேறுவகையில் ஏற்பாடு செய்தாலொழிய, குத்தகை கொடுத்தவரிடமிருந்து உபகரணம் ஒப்படைக்கப்படுவதை குத்தகை எடுத்தவர் ஏற்றுக் கொள்வதற்கு உடன்பட்டுவிட்டார் என்றாற்போன்று உபகரணத்தை ஏற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

(4) குத்தகை எடுத்த ஒருவர், நிதிக் குத்தகையில் குறித்துரைக்கப்பட்ட உபகரணமொன்றை, அது ஒப்படைக்கப்படுவதற்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அது ஒப்படைக்கப்படவில்லை அல்லது அது அத்தகைய காலத்துக்குப் பின் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது அல்லது அத்தகைய உபகரணம் தொடர்பிலான வழங்கல் உடன்படிக்கையில் உள்ள அதுபற்றிய நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள் அல்லது விபரக் குறிப்புக்கள் என்பவற்றோடு இணங்க அது இருக்கவில்லை என்ற நிகழ்வு, எது எப்படியிருப்பினும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றவிடத்து, குத்தகை எடுத்தவர், அதன் பின்னர் விடயத்துக்கேற்றவாறு (1)ஆம் உட்பிரிவின்கீழ் உபகரணத்தை ஒன்றில் நிராகரிப்பதற்கான அல்லது குத்தகையை முடிவுறுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(5) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, குத்தகை கொடுத்தவர், வழங்குநர் ஒருவரினால் உபகரணம் ஒன்று ஒப்படைக்கப்படாத அல்லது காலம் பிந்தி ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் அல்லது வழங்கல் உடன்படிக்கையில் உள்ள நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள் அல்லது விபரக் குறிப்புக்கள் என்பவற்றுக்கு இணங்க அத்தகைய உபகரணம் இல்லாத காரணத்தால், அத்தகைய ஒப்படைக்காமை, காலம் பிந்தி ஒப்படைத்தமை அல்லது இணங்கி ஒழுகாமை என்பன குத்தகை கொடுத்தவரின் செயலொன்று காரணமாக அல்லது செயலொன்றைச் செய்யாதுவிட்டு விட்டமை காரணமாக நிகழ்ந்திருத்தாலொழிய, குத்தகை எடுத்தவருக்குப் பொறுப்பெதனையும் கொண்டிருத்தலாகாது.

14. நிதிக் குத்தகையொன்றின் கீழ் வழங்கப்பட்ட உபகரணத்தை குத்தகை எடுக்குமொருவர் ஏற்றுக் கொள்ளுகின்றவிடத்து, அதன்பின்னர் குத்தகைக்கான நியதிகளும், நிபந்தனைகளும் கைமீட்கப்பட முடியாதவையாதல் வேண்டும் என்பதுடன், குத்தகையின் கீழான கொடுப்பனவுகள் தொடர்பிலான நியதிகள் உட்பட, அத்தகைய எல்லா நியதிகளையும் நிபந்தனைகளையும் பின்பற்றுவது குத்தகை எடுத்தவரின் கடமையாதலும் வேண்டும்.

15. நிதிக் குத்தகையொன்றின் காலப்பகுதி முடிவுற்றதன்மேல் அல்லது இச் சட்டததின் கீழ் அது முன்னரே முடிவுறுத்தப்பட்டதன்மேல், குத்தகையெடுத்தவர் உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது மேலும் ஒரு காலப்பகுதிக்கு அதைத் தம்முடன் வைத்திருப்பதற்கான உரிமையொன்றைப் பெற்றிருந்தாலொழிய அவர் அந்த உபகரணத்தை 12ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய நிலையில் குத்தகை கொடுத்தவருக்குக் திருப்பிக் கொடுத்தல் வேண்டும். உபகரணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்குக் குத்தகை எடுத்தவர் தவறுகின்றவிடத்து குத்தகை கொடுத்தவர் அந்த உபகரணத்தின் உடைமையை மீளப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

16. (1) குத்தகை எடுக்கும் ஒருவர் குத்தகை கொடுப்பவரின் சம்மதமின்றி வழங்கல் உடன்படிக்கையொன்றை முடிவுறுத்தலோ அல்லது இல்லாதொழித்தலோ ஆகாது.

(2) வழங்கல் உடன்படிக்கையொன்று தொடர்பில் இச்சட்டத்தின் கீழ்க் குத்தகை எடுக்கின்ற ஒருவருக்கு அளிக்கப்பட்ட உரிமைகள், அத்தகைய மாறுபாட்டுக்கு குத்தகை எடுப்பவர் எழுத்தில் சம்மதம் அளித்திருந்தாலொழிய, அத்தகைய உடன்படிக்கையிலுள்ள நியதி, நிபந்தனை, கட்டுறுத்து அல்லது விபரக் குறிப்பு ஒன்றின் ஏதேனும் மாறுபாட்டினால் பாதிக்கப்படுதலாகாது.

17. (1) நிதிக் குத்தகையொன்றின் கீழ் உபகரணமொன்றின் வழங்கலுக்கு அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள் மற்றும் விபரக் குறிப்புக்கள் என்பவற்றுடன் எழுத்தில் குத்தகை எடுத்தவர் உடன்பட்டுக் கொள்ளும்வரை, குத்தகை கொடுக்கும் ஒருவர் வழங்குநர் ஒருவருடன் வழங்குதலுக்கான உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க குத்தகை கொடுக்குமொருவர் வழங்கல் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டிருக்கின்றவிடத்தும், அத்துடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட உபகரணமானது, அத்தகைய உடன்படிக்கையின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அல்லது நேரத்துக்கு முன் ஒப்படைக்கப்பட்டுள்ளவிடத்தும், உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள், நிபந்தனைகள், கட்டுறுத்துக்கள் மற்றும் விபரக் குறிப்புக்கள் என்பவற்றுக்கு இணங்க உபகரணம் இருந்தால், வழங்கப்பட்ட உபகரணத்தைக் குத்தகை எடுத்தவர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

18. (1) குத்தகை எடுக்கும் ஒருவருக்கு உபகரணம் ஒன்றை வழங்குவதற்கான வழங்கல் உடன்படிக்கையொன்றை குத்தகை கொடுக்கும் ஒருவர் செய்துகொள்ளுகின்றவிடத்து, அவ்வுடன்படிக்கைக்குக் குத்தகை எடுத்தவரும் திறத்தவர் ஒருவராக இருந்தாற்போன்று, அத்தகைய உடன்படிக்கையை வலுவுறுத்துவதற்கான உரிமையை குத்தகை எடுத்தவரும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) குத்தகை கொடுத்தவருக்கோ அல்லது குத்தகை எடுத்தவருக்கோ வழங்கல் உடன்படிக்கையொன்றின் மீதான பொறுப்பை வழங்குநர் நிறைவேற்றுகின்றவிடத்து, வழங்குநர் மற்றவருக்கான பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அத்தகைய விடயம் அல்லது கருமம் தொடர்பில் குத்தகை கொடுத்தவர் மற்றும் குத்தகை எடுத்தவர் ஆகிய இருவருக்கும் உள்ள ஏதேனும் பொறுப்பை வழங்குநர்மீது சுமத்துவதாகப் பொருள் கொள்ளப்படுதலுமாகாது.

19. (1) நிதிக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்ட உபகரணம் தொடர்பில் குத்தகை எடுத்தவருக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்புக்கு உபகரணத்தை தெரிவு செய்வதில் குத்தகை கொடுத்தவரின் திறனிலும் மதிப்பீட்டிலும் குத்தகை எடுத்தவர் வைத்திருந்த நம்பிக்கையில் இருந்து எழுகின்ற அல்லது வழங்குநரைத் தெரிவு செய்வதில் அல்லது உபகரணத்தின் விபரக் குறிப்புக்களில் குத்தகை கொடுத்தவரின் தலையீடுமீது வைத்திருந்த நம்பிக்கையிலிருந்து எழுகின்ற ஏதேனும் இழப்பின் அளவுக்குத் தவிர குத்தகை எடுத்தவருக்கான ஏதேனும் இழப்பிற்கான ஏதேனும் பொறுப்பை குத்தகை கொடுத்தவர் உறுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, குத்தகை கொடுத்த ஒருவர் என்ற தன்மையில், நிதிக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உபகரணத்தினால் அல்லது அதன் பாவனையினால் ஏற்பட்ட மரணம், ஆளுக்கான ஊறு அல்லது ஆதனத்துக்கான சேதம் என்பனமூலம் ஏற்பட்ட ஏதேனும் இழப்புக்காக குத்தகை கொடுத்தவர் பொறுப்பானவராக இருத்தல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், குத்தகை கொடுத்த ஒருவர் என்ற தன்மை தவிர்ந்த வேறொரு தன்மையில், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்புக்காகக் குத்தகை கொடுத்த ஒருவரின் பொறுப்பைப் பாதித்தலாகாது.

20. குத்தகை எடுத்த ஒருவர், அத்தகைய குத்தகையின் பொருளளவிலான தவறுகையொன்றாக இருக்கக் கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளில் நிதிக் குத்தகைகளின் குறித்த சில நியதிகளுடனும் நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, குத்தகை கொடுத்தவர், 21ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய .-

(அ) குத்தகையில் அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், குத்தகையின் கீழ் வருமதியாக உள்ள பணங்களைத் துரிதமாகச் செலுத்துமாறு குத்தகை எடுத்தவரைத் தேவைப்படுத்தலாம் ;அல்லது

(ஆ) பந்தி (அ)வின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு துரிதப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளைச் செய்வதற்கு குத்தகை எடுத்த ஒருவர் தவறுகின்றவிடத்து நிதிக் குத்தகையை முடிவுறுத்தலாம், அத்துடன் –

(i) வழங்கப்பட்ட உபகரணத்தின் உடைமையை மீளப் பெற்றுக்கொள்ளலாம்; அத்துடன்

(ii) நிதிக் குத்தகையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க இந்நிதிக் குத்தகையின் ஏற்பாடுகளுக்குக் குத்தகை எடுத்தவர் இணங்கி ஒழுகியிருந்தால், குத்தகை கொடுத்தவர் எந்த நிலைமையில் இருந்திருப்பாரோ, அந்த நிலைமையில் குத்தகை கொடுத்தவரை வைக்கக்கூடியவாறானஅத்தகைய சேத ஈடுகளை அறவிடலாம்.

21. (1) குத்தகை கொடுத்த ஒருவர், 20ஆம் பிரிவின் கீழ் துரிதப்படுத்தப்பட்ட கொடுப்பனவுக்கான உரிமையை வலுவுறுத்துவதற்கு முன்னர் அல்லது நிதிக் குத்தகையொன்றை முடிவுறுத்துவதற்கு முன்னர்-

(அ) நிதிக் குத்தகையின் கருத்தெல்லைக்குள் பொருளளவிலான குத்தகைத் தவறுகையை ஏற்படுத்திய சூழ்நிலைகளைக் குறித்துரைக்கின்றதும்;

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகைக்குப் பரிகாரம் காணுவதற்காக, அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் பின்னர், இருபத்தொரு நாட்களுக்குக் குறையாத தேதியொன்றாக இல்லாத தேதியொன்றை நியமிக்கின்றதுமான,

அறிவித்தலொன்றை, குத்தகை எடுத்தவரிடம் பதிவுத் தபால் மூலம் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) குத்தகை எடுத்த ஒருவர், ஒராம் உட்பிரிவின் கீழ்ச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட தவறுகைக்கு, அறிவித்தலில் நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பரிகாரம் காணத்தவறுகின்றவிடத்து, குத்தகை கொடுத்தவர், 29ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செயலாற்றலாம்.

22. நிதிக் குத்தகையொன்று, இச் சட்டத்தின் கீழ் அறவிடப்பாலனவான சேத ஈடுகள் எந்த முறையில் கணக்கிடப்பட வேண்டும் என்பதற்கு ஏற்பாடு செய்யலாம் அத்துடன் அத்தகைய ஏற்பாடானது, அவ்வாறு கணக்கிடப்பட்ட சேதஈடுகள், 20ஆம் பிரிவின் (ii) (ஆ) என்னும் பந்தியின் உட்பந்தியின் (ii) இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவற்றை பொருளளவில் விஞ்சுவதாக இருந்தாலொழிய, குத்தகை கொடுத்தவருக்கும் குத்தகை எடுத்தவருக்கும் இடையில் வலுவுறுத்தப்படற்பாலனவாதலும் வேண்டும்.

23. குத்தகை கொடுத்த ஒருவர், விடயத்தின் சூழ்நிலைகளைப் பரிசீலித்ததன்மேல் முறையான விழிப்புக் கவனத்தைப் பிரயோகிக்கையில் தவிர்த்திருக்கக்கூடிய அத்தகைய சேத ஈடுகளை 20ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) என்னும் உட்பந்தியின் கீழ் அறவிடுவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

24. (1) குத்தகை கொடுத்தவர், குத்தகை எடுத்தவருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுப்பதன் மூலம் நிதிக் குத்தகை ஒன்றின் கீழான அல்லது அத்தகைய குத்தகையின்கீழ் வழங்கப்பட்ட உபகரணம் ஒன்று தொடர்பிலான தமது உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையும் வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட தாபனத்துக்குக் கைமாற்றலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான கைமாற்றுதல் அல்லது சாட்டுதல் ஒன்று -

(அ) நிதிக் குத்தகையின் கீழான அவரது கடமைகளில் இருந்து கைமாற்றம் செய்பவரை அல்லது சாட்டுதல் செய்பவரை விடுவித்தலோ அல்லது வேறு ஏதேனும் வழியில் நிதிக் குத்தகையின் தன்மையையோ அல்லது அதன் சட்டப்பயனையோ மாற்றுதலோ ஆகாது; அல்லது

(ஆ) நிதிக் குத்தகையின் கீழ் வழங்கப்பட்ட உபகரணம் ஒன்று தொடர்பிலான அவரது கடமைகளிலிருந்து கைமாற்றம் செய்பவரை அல்லது சாட்டுதல் செய்பவரை விடுவித்தலாகாது.

25. (1) குத்தகை எடுத்த ஒருவர், குத்தகை கொடுத்தவரின் எழுத்திலான அனுமதியுடனும், எவரேனும் மூன்றாம் திறந்தவர்களின் உரிமைகளுக்கு அமையவும் தவிர, நிதிக் குத்தகையொன்றின்கீழ் உபகரணமொன்றை உடைமையில் வைத்திருப்பதற்கான அத்துடன் பயன்படுத்துவதற்கான உரிமையை வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றுதல் செய்தலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "மூன்றாம் திறத்தவர்" ஒருவர் என்பது, உபகரணம் தொடர்பிலான நிதிக் குத்தகைக்குத் திறத்தவர் ஒருவராக இல்லாத ஆளொருவர் எனப் பொருள்படும்.

26. (1) இச்சட்டத்தின் கீழ் குத்தகை கொடுக்கும் ஒருவரின் உரிமைகள், அத்தகைய உபகரணத்தின் நிறைவேற்றுதலில் நடுக்கட்டலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் கடன்தருநர் உட்பட, குத்தகை பெற்ற ஒருவரின் கடனிறுக்க வகையின்மையின் போதான நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவருக்கு எதிராக அல்லது குத்தகை எடுத்த ஒருவரின் எவரேனும் கடன்தருநருக்கு எதிராக வலுவுறுத்தப்படலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, " கடனிறுக்க வகையின்மையின் போதான நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர்" என்பது குத்தகை எடுத்தவரின் கடன் தருநர்களின் நன்மைக்காக குத்தகைபெற்ற ஒருவரின் கொத்தை நிருவகிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஒழிப்போன் ஒருவரை, நிருவாகி ஒருவரை அல்லது வேறு ஆளை உள்ளடக்கும்.

27. இச்சட்டத்தின் கீழ் அல்லது நிதிக் குத்தகையொன்றின் ஏற்பாடொன்றின் கீழ் உபகரணமொன்றின் உடைமையை மீளப் பெறுவதற்கு உரித்துடையவராக வருகின்ற குத்தகை கொடுத்த ஒருவர் –

(அ) எந்த இடப்பரப்புக்குள் உபகரணம் காணப்படுகின்றதோ அந்த இடப்பரப்புக்கான பொலிசு நிலையப் பொறுப்பதிகாரிக்கு அத்தகை உரிமை பற்றி அறிவிக்கலாம்;

(ஆ) அவ்வுரிமையைப் பிரயோகிக்கையில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அப்பொலிசு நிலைய அலுவலர் ஒருவரின் உதவியைப் பெறலாம்.;

(இ) உபகரணத்தை உடைமையில் வைத்திருக்கின்ற ஆளிடமிருந்து எதிர்ப்பில்லாத உடைமை பெறப்பட முடியுமானால் அது காணப்படுகின்ற இடத்தில் இருந்து அல்லது அது எவரேனும் குறிப்பிட்ட ஆளின் உடைமையில் இல்லாவிட்டால்; எவரேனும் ஆளிடமிருந்து அதன் உடைமை பெறப்பட முடியுமானால் அவரிடமிருந்து உபகரணத்தின் உடைமை மீளப் பெறப்படலாம்.

28. (1) குத்தகை கொடுத்த ஒருவர், 27ஆம் பிரிவின் கீழ் உபகரணம் ஒன்றின் உடைமையை மீளப்பெறுவதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது அப்பிரிவின்கீழ் உடைமையைப் பெறுவது செயல்முறைக்கு உகந்ததாக இல்லையென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து குத்தகை கொடுத்தவர், நிதிக் குத்தகை எம்மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் செய்யப்பட்டதோ, அம்மாவட்ட நீதிமன்றத்துக்கு, உபகரணத்தின் உடைமையைப் பெறுவதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒன்று, மனு மற்றும் சத்தியக் கடதாசி என்ற முறையில் செய்யப்படுதல் வேண்டும். குத்தகை எடுத்தவர் இதில் பிரதிவாதியொருவராக ஆக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்விண்ணப்பம் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் –

(அ) நிதிக் குத்தகை செய்யப்பட்ட தேதி

(ஆ) நிதிக் குத்தகையின் கீழ்க் கொடுப்பனவுகள் எவையும் செய்யப்பட்டிருந்தால் அவை;

(இ) குத்தகை எடுத்தவரின் தவறுகையை ஆக்குகின்ற சூழ்நிலைகள்

(3) மனுவுடன் சேர்த்து நிதிக் குத்தகையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) மாவட்ட நீதிமன்றம், மனுவையும் சத்தியக் கடதாசியையும் அவற்றோடு சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலித்து, உபகரணத்தின் உடைமையைப் பெறுவதற்கு மனுதாரர் முதற்றோற்றளவில் உரித்துடையவராவாரெனத் திருப்திப்படுகின்றவிடத்து, மனுதாரருக்கு உபகரணத்தின் உடைமையை ஒப்படைப்பதற்குப் பிரதிவாதியைக் கட்டாயப்படுத்துகின்ற உடைமைக்கான இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையின் பிரதியொன்று, பிரதிவாதியிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் –

(அ) கட்டளை ஏன் நிரந்தரமாக்கப்படக்கூடாது என்பதற்கான போதுமான அளவு காரணத்தை, கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் காட்டுவதற்குப் பிரதிவாதி தவறுகின்றவிடத்து, நீதிமன்றமானது கட்டளையை நிரந்தரமானதாக ஆக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் கட்டளை ஏன் நிரந்தரமானதாக்கப்படக் கூடாது என்பதற்குப் போதுமான அளவு காரணத்தைப் பிரதிவாதி காட்டுகின்றவிடத்து நீதிமன்றமானது, இடைக்காலக் கட்டளையை நீக்குதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நிரந்தரக் கட்டளையொன்று, அசைவுள்ள ஆதனத்தை மீளப் பெறுவதற்கான தீர்வையொன்று என்றாற்போன்ற அதே முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

29. (1) இருபத்தெட்டாம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்றில், உடைமைக்கான கட்டளையொன்றை வேண்டுவதோடு சேர்த்து, நிதிக் குத்தகையின் கீழ் வருமதியான எவையேனும் பணங்களை அறவிடுவதற்கான கட்டளையொன்றையும் வேண்டலாம். அத்துடன் அப்படியான சந்தர்ப்பத்தில் கோப்பிலிடப்பட்ட மனுவிலும் சத்தியக் கடதாசியிலும், வருமதியான பணத்தொகையையும் மற்றும் அத்தகைய விடயத்தைத் தீர்மானிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு நிகழ்வுகளையும் குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும்.

(2) இருபத்தெட்டாம் பிரிவின் (4)ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் நீதிமன்றம், அவ்வுட்பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட இடைக்கால கட்டளையிலும் நிரந்தரக் கட்டளையிலும் அறிவிடப்படவேண்டுமென நாடப்பட்ட பணத்தொகையை அறவிடுவதற்கான கட்டளையொன்றையும் உள்ளடக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நிரந்தரக் கட்டளையொன்று பணம் அறவிடுவதற்கான தீர்வையொன்று என்றாற்போன்ற அதே முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

30. இருபத்தேழாம், 28ஆம் அத்துடன் 29ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏதேனும் உபகரணத்தின் உடைமையை மீளப் பெறுவதற்காக அல்லது நிதிக் குத்தகையொன்றின் கீழ் வருமதியான ஏதேனும் பணத்தை அறவிடுவதற்காக சட்டத்தில் குத்தகை கொடுத்த ஒருவருக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கக் கூடியவாறான ஏதேனும் வேறு குறைதீர்ப்புக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அதனைக் குறைப்பதாக இருத்தலும் ஆகாது.

31. நிதிக் குத்தகையொன்றுக்கான திறத்தவர்கள், அவர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட நிதிக் குத்தகையொன்றுக்கு 11, 16, 22 மற்றும் 24 என்னும் பிரிவுகளில் உள்ள ஏற்பாடுகள் தவிர்ந்த இச் சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைமையற்றனவாக இருப்பதற்கு அத்தகைய குத்தகையில் ஏற்பாடு செய்யலாம்.

## பாகம் 111

### பணிப்பாளர்களினதும் அலுவலர்களினதும் தத்துவங்கள்

32. (1) பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், இச்சட்டத்தின் கீழ் பதிவொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் நிதி குத்தகைக்கு விடும் தொழிலைக் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கின்றாரெனப் பணிப்பாளருக்கு நம்புவதற்குக் காரணம் இருக்கின்றவரான ஆளெவரையும், அத்தகைய நிகழ்வை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவையெனப் பணிப்பாளர் கருதக் கூடியவாறான ஆவணங்கள் எவற்றையும் சமர்ப்பித்தல் உட்பட அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு, அதற்கென வழங்கப்பட்ட அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்.

(2) பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், (1)ஆம் உட்பிரிவின் கீழ்க் கொடுத்துதவப்பட்ட தகவலைப் பரிசீலித்த பின்னரும் கொடுத்துதவப்பட்ட எவையேனும் ஆவணங்களைப் பரிசோதித்த பின்னரும், சம்பந்தப்பட்ட ஆள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாமல் நிதி குத்தகைக்கு விடும் தொழிலைக் கொண்டு நடாத்திவருகின்றாரெனத் திருப்திபடுகின்றவிடத்து, பணிப்பாளர், அதற்கென வழங்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய நிதி குத்தகைக்குவிடும் தொழிலைக் கொண்டு நடாத்துவதை உடனடியாக விட்டொழிக்குமாறு அவர்களைத் தேவைப்படுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் எவ்வாளுக்கு அறிவித்தலொன்று வழங்கப்படுகின்றதோ, அவ்வாள், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அதிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, பணிப்பாளர் –

(அ) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக அவ்வாளுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு,; அத்துடன்

(ஆ) இச் சட்டத்தின் கீழ் அந் நோக்கத்துக்கென வலிதுடைய பதிவொன்று, பெறப்படும்வரை நிதி குத்தகைக்குவிடும் தொழிலைத் தொடர்ந்து கொண்டுநடாத்துவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடை செய்வதற்கான கட்டளையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கென எந்த மாகாணத்திற்குள் அத்தகையஆள் நிதி குத்தகைக்கு விடும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரோ அந்த மாகாணத்தின் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு,

அவசியமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(4) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் அத்தகைய மேல் நீதிமன்றத்துக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனுமூலம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் XXIV என்னும் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்..

(5) மாகாணத்தின் மேல் நீதி மன்றமானது, (3) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பரிசீலித்ததன் மேல், இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் நிதி குத்தகைக்கு விடும் தொழிலைச் சார்த்தப்பட்ட ஆள் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கிறாரெனத் தீர்மானிக்கின்றவிடத்து, அந் நோக்கத்துக்கென இச் சட்டத்தின் கீழ் வலிதுடைய பதிவொன்று பெறப்படும்வரை அத்தகைய தொழிலைத் தொடர்ந்து கொண்டு நடாத்துவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடை செய்கின்ற தடைக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

33. (1) பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் புத்தகங்களையும் கணக்குகளையும், அவரால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் பரிசோதனை செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒராம் பிரிவின் கீழான தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அறிவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்தில் தாபனத்தின் அலுவல்கள் தொடர்பிலான புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் எவற்றையும் முன் வைக்குமாறு பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றைத் தேவைப்படுத்தலாம். அத்துடன் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற பதிவு செய்யப்பட்ட தாபனம் எதுவும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

34. பணிப்பாளர், பின்வரும் விடயங்கள் மீதான பணிப்புகள் உட்பட, தமது கடமைகளை நிறைவேற்றுவதில் பதிவு செய்யப்பட்ட தாபனங்கள், உயர் தரங்களைப் பேணுவதை உறுதிசெய்யும் நோக்கத்திற்கென அவசியமானவையென அவர் கருதக்கூடியவாறான பின்வரும் கருமங்களிலான பணிப்புகள் உள்ளடங்கலாக அத்தகைய பொதுவான பணிப்புக்களை வழங்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) பதிவு செய்யப்பட்ட தாபனங்களால் விதிக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய கொடுப்பனவு வீதம்;

(ஆ) கொடுப்பனவுகளைச் சேகரிக்கும் வழிமுறை சம்பந்தமான விடயங்கள்;

(இ) கணக்குப் புத்தகங்கள் அல்லது வேறு பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் எப்படிவத்திலும் எம்முறையிலும் பேணப்படுதல் வேண்டும் என்பது;

(ஈ) நிதிக் குத்தகைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்;

(உ) அதன் நிதிக் குத்தகைகளின் பெறுமதியைக் கவனத்துக்கு எடுத்து, பதிவு செய்யப்பட்ட தாபனமொன்று வைத்திருக்கவேண்டிய ஆகக்குறைந்த செலுத்தப்பட்ட மூலதனமும் ஒதுக்குகைகளும்;

(ஊ) பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கவனத்திற்கொண்டு, பணிப்பாளரால், குறித்துரைக்கப்படக்கூடியவாறான எவரேனும் ஆளொருவருக்கு, ஆட்கள் குழுவுக்கு அல்லது ஆட்கள் வகுதிக்கு வழங்கப்படக் கூடிய நிதிக் குத்தகைகளின் ஆகக்கூடிய பெறுமதி ;

(எ) பதிவு செய்யப்பட்ட தாபனத்தின் மூலதனமும் ஒதுக்குகைகளும் ;

(ஏ) ஏதேனும் உபகரணத்துக்காக அல்லது உபகரணத்தின் வெவ்வேறு வகுதிகளுக்காக குத்தகை எடுத்த ஒருவரினால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த ஆரம்பக் கொடுப்பனவு, அத்தகைய ஆகக்குறைந்த கொடுப்பனவானது உபகரணத்தின் பெறுமதியின் சதவீதமொன்றாக கூறப்படுதல் வேண்டும்; அல்லது

(ஐ) அறவிடமுடியாக் கடன்களுக்கும் சந்தேகத்துக்குரிய கடன்களுக்குமான ஏற்பாடுகள்.

35. (1) அமைச்சர், விதிக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் அல்லது எவ்விடயம் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகிறதோ, அவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியாக கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்துக்கு முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் அளிக்கப்படாத அத்தகைய ஒழுங்குவிதி எதுவும், அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எத்தேதியன்று அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

36. பணிப்பாளருக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு எதிராக, இச்சட்டத்தின் கீழ்ப் பணிப்பாளரால் அல்லது அத்தகைய அலுவலரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, துடர்ச்சியொன்றோ அல்லது குற்றவழக்குத் தொடுப்பொன்றோ இருத்தலாகாது.

37. பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, பணிப்பாளரோ அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரோ, இச்சட்டத்தின் கீழ் அவர்களது கடமைகளை நிறைவேற்றுகையில் அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலையோ அல்லது விடயத்தையோ வெளியிடுதலாகாது –

(அ) அவ்வாறு செய்யுமாறு;

(i) நீதிமன்றமொன்றினால் ;

(ii) அத்தகைய தகவல் அல்லது விடயம் எந்த ஆள் தொடர்பானதோ அந்த ஆளினால் தேவைப்படுத்தப்படும்போது ;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை புரிகையில் தேவைப்படுத்தப்படும்போது ; அல்லது

(இ) இச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதற்காகத் தேவைப்படுத்தப்படும்போது.

## பாகம் IV

### நானாவிதம்

38. பதிவு செய்யப்பட்ட தாபனம் ஒவ்வொன்றும், 1990ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும் கடன் வழங்கும் நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

39. இச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை விதிகளை மீறுகின்ற வகையில் செயலாற்றுகின்ற அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

40. பதிவு செய்யப்பட்ட தாபனமொன்றின் பணிப்பாளர் ஒருவராக, முகாமையாளர் ஒருவராக, அலுவலர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக இருந்துகொண்டு –

(அ) பதிவு செய்யப்பட்ட தாபனத்தின் ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் பொய்யான பதிவொன்றை வேண்டுமென்றே செய்கின்ற அல்லது செய்விக்கின்ற;

(ஆ) பதிவு செய்யப்பட்ட தாபனத்தின் ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் வேண்டுமென்றே பதிவொன்றைச் செய்யாமல் விட்டுவிடுகின்ற அல்லது வேண்டுமென்றே அத்தகைய பதிவு எதுவும் செய்யப்படாமல் விட்டுவிடப்படுத்தலைச் செய்விக்கின்ற ; அல்லது

(இ) பதிவு செய்யப்பட்ட தாபனத்தின் ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் உள்ள பதிவொன்றை வேண்டுமென்றே மாற்றுகின்ற, பிரித்தெடுக்கின்ற, மறைக்கின்ற அல்லது அழிக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பதிவை வேண்டுமென்றே மாற்றுவிக்கின்ற, பிரித்தெடுக்கின்ற, மறைப்பிக்கின்ற அல்லது அழிப்பிக்கின்ற.

ஆளெவரும், இச்சட்டதயின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

41. (1) இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆளெவரும், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டரை இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து -

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒவ்வொருவரும் ;

(ஆ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருந்தால் அத்தகைய குழுவின் உறுப்பினரொருவராக இருக்கும் தனியாள் ஒவ்வொருவரும் ; அத்துடன்

(இ) அவ்வாட்கள் குழுவானது குழுமமொன்றாகவிருந்தால் அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

விடயத்துக்கேற்றவாறு அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர், தனியாள் அல்லது பங்காளர், அத்தகைய தவறானது தமது அறிவுக்கெட்டாமல் புரியப்பட்டது எனவோ அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் முறையான எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் எனவோ எண்பித்தாலொழிய, தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

42. (1) பணிப்பாளர், பணச்சபையின் அங்கீகாரத்துடனும் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றானது எச் சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ, அச்சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டும், அத்தகைய தவறை ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத பணத் தொகையொன்றுக்கு இணக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ்த் தவறெதனையும் இணக்குதலானது, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யும் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

43. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய -

" நெருங்கிய உறவினர்" என்பது தனியாள், ஒருவர் தொடர்பில் அத்தனியாளின் வாழ்க்கைத்துணை அல்லது தனியாளில், தங்கிவாழும் பிள்ளை எனப் பொருள்படும் ;

" பணிப்பாளர்" என்பது பணச்சபையினால் இச்சட்டத்தின் கீழ் நிதி குத்தகைக்கு விடும் கம்பெனிகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு, இலங்கை மத்திய வங்கியின் எப்பிரிவுக்குச் சாட்டுதல் செய்யப்பட்டிருக்கிறதோ, அப்பிரிவின் தலைவர் எனப் பொருள்படும்;

" உபகரணம்" என்பது ஓராண்டு காலத்துக்கு மேற்பட்ட பொருளாதார ரீதியில் பயனுள்ள ஆயுட்காலத்தைக் கொண்ட தொட்டுணரக்கூடிய ஏதேனும் சொத்து எனப் பொருள்படும் என்பதுடன், இது காணியையும், இணைப்புக்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் சீர்திருத்தங்களையும் அல்லது அத்தகைய இணைப்புக்கு அல்லது அசைவற்ற ஆதனத்துக்குக் கணிசமான அளவு அழிவு இல்லாமல் காணியிலிருந்து அகற்றப்படக் கூடியதும் காணியுடன் இணைக்கப்பட்டிருப்பதுமான அசைவற்ற ஆதனத்தையும் உள்ளடக்காது.

" நிதிக் குத்தகை" என்பது:-

(அ) உடன்படிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்குக் குறையாத ஆரம்ப காலப் பகுதியொன்றுக்கு, குத்தகை எடுத்தவரால் குறித்துரைக்கப்பட்ட அல்லது குத்தகை கொடுத்தவரால் அல்லது குத்தகை எடுத்தவரால் தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் ஒருவரால் வழங்கப்பட்ட உபகரணமொன்றை குத்தகை எடுத்தவர் உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும்;

(ஆ) உபகரணத்தின் கொள்விலை முழுவதும் அல்லது அதன் கணிசமான ஒரு பகுதி கொடுத்துத் தீர்க்கப்படுவதைக் குறிப்பாகக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளுகின்றவாறு கணிக்கப்பட வேண்டிய அத்தகைய பணத்தொகைகளை அத்தகைய உபகரணத்தை உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் என குத்தகை எடுத்தவரால் குத்தகை கொடுத்தவருக்குச் செய்யப்படும் கொடுப்பனவுக்காக;

(இ) உபகரணம் குத்தகை எடுத்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் (அ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ளவாறு, ஆரம்பக் காலப்பகுதியின்போது குத்தகை எடுத்தவரால் முடிவுறுத்தப்படமுடியாததாக இருக்கின்றதும்; அத்துடன்

(ஈ) 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வருகின்ற வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையொன்றாக இல்லாமலிருந்தாலும் கூட, (அ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள ஆரம்ப காலப்பகுதியின் நீடிப்புக்கு அல்லது (அ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள ஆரம்ப காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் அல்லது இப்பந்தியின் கீழ் நீடிக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் உபகரணம் குத்தகை எடுத்தவரால் கொள்வனவு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யக்கூடியதும், அல்லது ஏற்பாடு செய்ய முடியாததுமாக இருக்கக் கூடியதும்,

ஆன குத்தகை கொடுத்தவருக்கும் குத்தகை எடுத்தவருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை எனப் பொருள்படும்.

"நிதி குத்தகைக்கு விடும் தொழில்" என்பது, நிதிக் குத்தகையொன்றின் கீழ் உபகரணம் வழங்குவதற்காகப் பணத்தை முதலீடு செய்யும் தொழில் எனப் பொருள்படும் ;

" குத்தகை கொடுப்பவர்" என்பது, நிதிக் குத்தகையொன்று தொடர்பில் நிதிக் குத்தகையின் கீழ் உபகரணம் ஒன்றின் உடைமைக்கும் பயன்பாட்டுக்குமான உரிமையைக் கைமாற்றுகின்ற ஆள் எனப் பொருளபடும்;

"குத்தகை எடுப்பவர்" என்பது, நிதிக் குத்தகையொன்று தொடர்பில், நிதிக் குத்தகையின் கீழ் உபகரணமொன்றின் உடைமைக்கும் பயன்பாட்டுக்குமான உரிமையொன்றைப் பெற்றுக்கொள்ளுகின்ற ஆளொருவர் எனப் பொருள்படும்;

"பணச்சபை" என்பது, பணச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை எனப் பொருள்படும்;

"வழங்குநர்" என்பது, நிதிக் குத்தகை எடுக்கும் ஒருவரின் நோக்கத்துக்காக, உபகரணம் ஒன்றை வழங்கும் ஆளொருவர் எனப் பொர்ருள்படும், ஆனால் அத்தகைய உபகரணத்தைக் குத்தகை எடுக்கும் ஒருவரே வழங்குகின்றவிடத்து, குத்தகை எடுக்கும் ஒருவரை உள்ளடக்காது ; அத்துடன்

"வழங்கல் உடன்படிக்கை" என்பது, நிதி குத்தகை ஒன்றின் கீழ் வழங்குநரால் உபகரணம் ஒன்று வழங்கப்படுவதற்காக, வழங்குநருடன் குத்தகை கொடுக்கும் ஒருவரால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்று எனப் பொருள்படும்.

44. (1) நியமிக்கப்பட்ட தேதியன்று நிதி குத்தகைக்கு விடும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்தலாம். ஆனால் அந்தக் காலப்பகுதிக்குள் அத்தகைய நிதி குத்தகைக்கு விடும் தொழிலைப் பதிவதற்காக இச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்துப் பதிவுச்சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளொருவர்-

(அ) இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய பதிவுக்கு முன்னர் அத்தகைய ஆளினால் செய்து கொள்ளப்பட்ட எல்லா நிதிக் குத்தகைகளும், இச்சட்டத்தின் கீழ்ச் செய்துகொள்ளப்பட்ட நிதிக் குத்தகையொன்று எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய ஒவ்வொரு குத்தகைக்கும், குத்தகை தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்; அல்லது

(ஆ) பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்காதவிடத்து அல்லது இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு மறுக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்துக்கேற்றவாறு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடையும் முன்னர் அல்லது பதிவு மறுக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அவ்வாளினால் செய்து கொள்ளப்பட்ட அத்தகைய நிதிக் குத்தகைகள் மட்டுமே, அவை எக்காலப்பகுதிக்காகச் செய்யபட்டதோ, அக்காலப்பகுதிக்கு வலிதுடையதாய் இருத்தல் வேண்டும்.

45. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சதத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.